(ALL RIGHTS RESERVED.)
இந்தப் பத்ரிகைக்குரிய விஷயங்களை அனுமதியின்றி ஒருவரும் ப்ரசுரிக்கக்கூடாது.

பிழைக்கும் வழி

PRACTICAL LIFE.

ஜி. ஏ. வைத்யராமன், பி.ஏ.,
பத்ராதிபர்.

G. A. VaidyaRaman, B.A.,
EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. — ஆனந்த வருஷம் ஆடி மீ—JULY 1914. — ஸஞ்சிகை 7. No. 7.

பொருளடக்கம்.

வ்யாஸங்கள்—	பக்கம்.
ஆடு வளர்த்தல் —டி. வி. வெங்கடரமணய்யர்	... 338
விவஸாயத்தில் ஸர்பமடைதல்	... 340
மேய்ச்சல் பஞ்சாயத்துகள்	. 343
மாதுளை ஸாகுபடி	... 344
புளியம் விதையை கால்நடைத் தீனியாய் உபயோகித்தல்	... 345
பழ மரங்களுக்கு இடை வெளிதூரம்	... 346
மீன் எருவும், வயலை வடித்தலும்	... 347
இரண்டு நயமான உழவுக்கருவிகள்	... 348
கவர்ன்மெண்டும் கோவாபரேஷனும்	... 349
கோவாபரேடர்கள் செய்யக்கூடியவை	... 351
தஞ்சாவூர் ஜில்லாவில ரைஸ் மில்லுகள்	... 353
எந்தத் தேதிக்கும் கிழமை கண்டுபிடித்தல்.	357
ப்ராமிஸரி நோட்டு	... 361
இந்தியாவில் ஸௌகாதாரம்	... 365
மனிதனுடைய வம்ச வ்ருக்ஷம் —பி. வி. வ்யாஸ ராவ்	... 369
செட்டாய்க் குடித்தனம் செய்யப் பழகுதல் —டி. பி. அனந்த வைத்யநாத சிவா	... 373
பண்டித மதன்மோஹன் மாலவ்யா	... 377
கொடியும் படுதாவும்	... 380
ஐரோப்பாவில் சண்டை	... 385
விவஸாயப் பகுதி	... 338
கோவாபரேஷன் பகுதி	... 349
வ்யாபாரப் பகுதி	... 353
வித்யாவிஷயப் பகுதி	... 357
வ்யவஹாரப் பகுதி	... 361
ஸௌகாதாரப் பகுதி	... 365
பையன்கள் பகுதி	... 369
ஸ்த்ரீகள் பகுதி	... 373
ஜீவ்ய சரித்ரம்	... 377
சிறு கதைகள்	... 380
பகுதிக் குறிப்புகள்	... 381
மாஸ வர்த்தமானம்	... 387
காலஸ்திதி	... 391
பஞ்சாங்கம்	... 392

CONTENTS.

Articles—	PAGES.
REARING SHEEP —T. C. Venkataramana Aiyar	... 338
SUCCESS IN FARMING	... 340
GRAZING PANCHAYATS	... 343
POMEGRANATE CULTIVATION	... 344
TAMARIND SEED AS CATTLE FOOD	... 345
SPACE FOR FRUIT TREES	... 346
FISH MANURE AND DRAINING THE FIELD	... 347
TWO CHEAP AGRICULTURAL IMPLEMENTS	... 348
GOVERNMENT AND CO-OPERATION	... 349
WHAT CO-OPERATORS CAN DO	... 351
RICE MILLS IN THE TANJORE DISTRICT	... 353
TO FIND THE DAY OF THE WEEK FOR ANY DATE	... 357
PROMISSORY NOTE	... 361
SANITATION IN INDIA	... 365
THE GENEALOGICAL TREE OF MAN —P. V. Vyasa Row	... 369
TRAINING IN DOMESTIC ECONOMY —T. P. Anantha Vaidyanatha Siva	... 373
PANDIT MADAN MOHAN MALAVIYA	... 377
THE FLAG AND THE CURTAIN	... 380
THE WAR IN EUROPE	... 385
The Agricultural World	... 338
The Co-operative World	... 349
The Commercial World	... 353
The Educational World	... 357
The Legal World	... 361
The Sanitary World	... 365
The Boys' World	... 369
The Ladies' World	... 373
Biography	... 377
Short Stories	... 380
Departmental Notes	... 381
Diary of the Month	... 387
Season Report	... 391
Calendar	... 392

G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetti Street, Georgetown, Madras.
ஜி. ஏ. வைத்யராமன் அண்ட் கம்பெனி., 3 & 4. சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ்டவுன், மதராஸ்.

Books at Concession Rates to Subscribers of "The Practical Life."

The Life and Teachings of Buddha.—By the Anagarika Dharmapala. Price As. 12. To Subscribers, As. 8.

Essentials of Hinduism.—A Symposium by representative Hindus. Price As. 8. To Subscribers, As. 6.

King George's Speeches on Indian Affairs.—Part I. A complete collection of all the speeches made by His Majesty during his tour in India as Prince of Wales

Part II. Full text of all the speeches delivered by His Majesty during the Coronation Durbar Tour. Price Re. 1. To Subscribers, As. 12.

My Indian Reminiscences.—By Dr. Paul Deussen, Professor of the University of Kiel, translated by A. King. Price Re. 1-4. To Subscribers, Re. 1.

The Improvement of Indian Agriculture: Some Lessons from America. By Cathelyne Singh. Price Re. 1. To Subscribers, As. 12.

Aspects of the Vedanta.—By various writers, The book also contains the opinions of Max Muller. Dr. Goldstucker, Schopenhauer, Victor Cousin, and Dr P. Deussen on the Vedanta. Second Edition, As. 12 To Subscribers, As. 8.

Dadabhai Naoroji's Speeches and Writings.—An up-to-date exhaustive and comprehensive collection of his speeches and writings. With a portrait. Price. Rs. 2. To Subscribers, Re. 1-8.

Glimpses of the Orient To-day.—By Saint Nihal Singh. In this book, Mr. Singh describes the transition that has taken place in Asia during the last few decades, traces the causes of the awakening and offers a prophecy as to its ultimate effect. Price Re. 1. To Subscribers, As. 12.

The Indians of South Africa—Helots within the Empire ! How they are treated. By H. S. L. Polak. This book is the first extended and authoritative description of the Indian Colonists of South Africa, the treatment accorded to them by their European fellow-colonists, and their many grievances. Price Re. 1. To Subscribers, As. 12.

Essays on Indian Art, Industry and Education.—By E. B Havell, late Principal of the School of Arts, Calcutta. The subjects dealt with are "The Taj and its Designers," "The Revival of Indian Handicraft," "Art and Education in India," "Art and University Reform," "Indian Administration and Swadeshi," "The Uses of Art" Price Re. 1-4. To Subscribers, Re. 1.

All about Delhi.—With 80 illustrations. Price Re. 1-8. To Subscribers, Re. 1-4.

Essays on Indian Economics.—By the late Mahadev Govind Ranade. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

The Depressed Classes.—A symposium by His Highness the Gaekwar of Baroda, Mrs. Annie Besant, The Hon'ble Mr. Gokhale, Sir Valentine Chirol, Rt. Rev. The Lord Bishop of Madras, The Hon'ble Sir Narayan Chandavarkar, The Hon'ble Mr.V. Krishnaswami Aiyar, The Anagarika Dharmapala and others. Price Re. 1. To Subscribers, As. 12.

Light on Life.—A Selection of Five Spiritual Discourses by Baba Premananda Bharati. Price As. 8. To Subscribers, As. 6.

The Indian National Congress.—An account of its origin and growth. Full text of all the Presidential Addresses. Re-print of all the Congress Resolutions. Extracts from all the Welcome Addresses. Notable Utterances on the Movement. Portraits of all the Congress Presidents Cloth Bound Over 1,100 pages. Crown 8vo. Rs. 3. To Subscribers, Rs. 2.

A Fragment on Education.—By J. Nelson Fraser, M.A, (*Oxon.*), Principal, Secondary Training College, Bombay. Price Re. 1. To Subscribers, As. 12

Morley's Indian Speeches.—An enlarged and up-to-date collection. Price Re. 1. To Subscribers, As. 12

Gokhale's Speeches.—An exhaustive and comprehensive collection of his speeches, with a biographical sketch and a portrait. Over 1,000 pages. Crown 8vo. Price Rs 3. To Subscribers, Rs. 2-8

Swami Vivekananda.—An exhaustive and comprehensive collection of his speeches and writings. *Crown 8vo. 800 pages, with four portraits.* Third Edition, revised and enlarged. Price Rs 2 To Subscribers, Re. 1-8.

Sri Sankaracharya's Select Works.—The Text in Sanskrit, Devanagiri type, and an English Translation. By S. Venkataramanan, B.A. Containing more than 700 *verses* in all and including all his important works. Bound in Cloth. Price Re. 1-8. To Subscribers, Re 1.

The Swadeshi Movement.—A Symposium by Representative Indians and Anglo-Indians. Re. 1. To Subscribers, As. 12.

Sri Ramanujacharya.—His Life and Times. By S Krishnaswami Aiyangar, M.A. His Philosophy. By T. Rajagopalachariar, M.A., B.L. Price As. 12. To Subscribers, As. 8.

Sri Madhwa and Madhwaism.—A Short Historic Sketch. By C. N. Krishnaswami Aiyar, M.A. Price As. 12. To Subscribers, As. 8.

The Vaishnavite Reformers of India.—Critical Sketches of their Lives and Writings. By T. Rajagopalachariar, M.A., B.L. Price Re. 1. To Subscribers, As. 12.

Shakespeare's Chart of Life: Being Studies of King Lear, Macbeth, Hamlet, and Othello By Rev. William Miller, LL.D., C.I.E. Rs. 4. To Subscribers, Rs. 3.

Essays in National Idealism.—By Ananda K. Coomaraswamy, D. Sc. Popular Edition with 6 illustrations. Re. 1. To Subscribers, As. 12.

Industrial India.—By Glyn Barlow, M.A. Second Edition. Price. Re. 1. To Subscribers, As. 12.

Lift Irrigation.—By A. Chatterton. Second Edition. Price Rs. 2. To Subscribers, Re. 1-8.

☞ *The subscription for the "Practical Life" is Rs. 4 per annum post free. Subscription may commence from any month. Any one who wishes to buy books at the reduced rates must remit one year's subscription in advance. Those in arrears cannot have concession rates.*

G. A. NATESAN & CO., BOOKSELLERS, 4, SUNKURAMA CHETTY STREET, MADRAS.

MADRAS Printed by Thompson & Co. at the "Minerva" Press.

Published by G. A. VAIDYARAMAN AND Co., Sunkurama Chetty Street, George Town, Madras.

MADAN MOHAN MALAVIYA.
மதன் மோஹன் மாலவ்யா.

பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்யராமன், பி. எ., பத்ராதிபர். — G. A. VaidyaRaman, B.A. EDITOR.

புஸ்தகம் 6. Vol. 6. | ஆனந்த ௵ ஆடி ௴, JULY 1914. | ஸஞ்சிகை 7. No. 7.

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, economics, story, biography, citizenship, and popular, scientific and technical education.

'Practical Life' is subscribed for by Government for use in the agricultural stations and by several Local Boards and Municipalities for the use of the teachers and pupils in the schools under their control.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs.	A.	P.		Foreign. Rs.	A.	P.
Per annum ...	4	0	0	... ...	6	0	0
Single copy ...	0	6	0	... ...	0	8	0
Sample copy ...	0	4	0	... ...	0	6	0

RATES OF ADVERTISEMENT.

1 Page ...	5	0	0	per month.
½ do ...	2	8	0	do
¼ do ...	1	4	0	do
1/10 do ...	1	0	0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. Accepted articles will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 & 4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்யமாய் விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில், பொருளாதாரம், கதை, ஜீவ்ய சரித்ரம், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒரு மாஸாந்தத் தமிழ்ப்பத்ரிகை.

விவஸாயப் பண்ணைகளின் உபயோகத்துக்காக கவர்ன்மெண்டாரும், ஸ்கூல்களில் உபாத்யாயர்கள், மாணுக்கர்கள், இவர்களுடைய உபயோகத்துக்காக பல லோகல் போர்டுகளும் முனிஸிபாலிட்டிகளும் 'பிழைக்கும் வழி'யை வாங்கிவருகிறார்கள்.

தபால் சார்ஜ் உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.				அந்ய நாடு.		
வருஷம் 1 க்கு ...	4	0	0	...	6	0	0
தனிப்ரதி ...	0	6	0	..	0	8	0
மாதிரி காபி ..	0	4	0	...	0	6	0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம் ஒன்றுக்கு	5	0	0
½ பக்கத்திற்கு	,, ,,	2	8	0
¼ பக்கத்திற்கு	,, ,,	1	4	0
1/10 பக்கத்திற்கு	,, ,,	1	0	0

வ்யாஸம் எழுதுகிறவர்கள் கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வ்யாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வ்யாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புக்கொள்ளப்பட்டால் ப்ரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனை செய்யப்படும். ஒவ்வொரு வ்யாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

ஸம்பாவனை செய்திருக்கும் வ்யாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி ப்ரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருபநேயர்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்யராமன் அண்ட் கம்பெனி,
3, & 4, சுங்குராம செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன்
மதராஸ்.

The Agricultural World.

விவஸாயப் பகுதி.

REARING SHEEP,

BY

T. C. VENKATARAMANA AIYAR.

ஆடு வளர்த்தல்.

நமது தேசத்தில் அநேகமாய் ஆடுகளைப் பராமரிக்கிறவர்கள் விவஸாயிகளே. ஆட்டெருவை எவ்விதப் பயிர்களுக்கும், புஷ்பச் செடி கொடிகளுக்கும், பழமரங்களுக்கும் உபயோகித்து வந்தால், அவைகள் விரைவில் செழித்தோங்கி நல்ல பலனைத் தரும். ஆனது பற்றியே வியவஸாயத்தை மேற்கொண்ட பல குடும்பத்தார்கள் முக்யமாய்த் தங்கள் பூமிகளுக்கு வலுவேற்றுவதற்கு செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வளர்க்கிறார்கள். செம்மறியாடுகளினால் அடையக்கூடிய ரோமத்தையும், வெள்ளாடுகளினால் அடையக்கூடிய பாலையும் விவஸாயிகள் அனேகமாய் கவனிக்கிறதில்லை. செம்மறியாடுகளைவிட வெள்ளாடுகள் விசேஷமாக விருத்தியாகின்றன. செம்மறியாடுகள் அதிகமான ஆஹாரம் கிடைக்காத விடங்களிலும் ஜீவிக்கக்கூடியவை. ஆயினும் இவ்விருவகை யாடுகளும், மாடுகள் உண்பதற்குப் போதுமான ஆகாரத்தை யடைய முடியாத இடங்களிலும காலங்களிலும் ஸௌகர்யமாய் வளரும். ஏனென்றால் இவைகள் மாடுகள் தின்னாத பல இலை தழைகளையும் தின்று ஜீவிக்கின்றன. தென்னிந்தியாவில் இருவகை செம்மறியாடுகளுண்டு. தேகத்தின்மேல் குட்டையும் தடித்ததுமான ரோமங்களை யுடையவைகளுக்கு செம்மறியாடென்றும், நீண்டு ம்ருதுவான ரோமங்களை யுடையவைகளுக்கு குரும்பாடென்றும் சொல்லப்படுகிறது. செம்மறியாடு அநேகமாய் மாம்ஸத்திற்கு மாத்ரம் உபயோகப்படுகிறது.

பொதுவாய் செம்மறியாடுகளுக்கும் குரும்பாடுகளுக்கும் தேகத்தின்பேரில் ரோமம் வளர்வது, தேசத்தின் சீதோஷ்ணஸ்திதிக்குத் தக்கவாறு இருக்கிறதென்றே கூறவேண்டும். இவ்வாடுகளில் முதல்தரமானவை மைஸூரிலும் கோயமுத்தூரிலு மிருக்கின்றன. கடப்பை, பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களிலும் வேறு இடங்களிலும் காணப்படுகிறவைகளை இரண்டாந் தரமானவைகளென்றே சொல்லவேண்டும். ஆட்டுரோமம் ம்ருதுவாயும், சுருண்டும், நெகிழ்வாயு மிருந்தால் கம்பளி, சால்வை, ரத்ன கம்பளம் முதலியவை செய்யலாம். ஒரு ஆட்டின் தேகத்திலுள்ள ரோமத்திலேயே ஒவ்வொரு அங்கத்திலுள்ள ரோமமும் ஒவ்வொரு தன்மையுடையதா யிருக்கிறது. ஆகையால் அவைகளின் ம்ருதுவுக்கும் நன்மைக்கும தக்கபடி தகுந்த மாதிரியான கம்பளங்கள் செய்யப்படுகின்றன.

ஆடுகளை எருவுக்காக வளர்க்கிறவர்களும், ரோமத்திற்காகவும், மாம்ஸத்திற்காகவும் வளர்க்கிறவர்களும் முக்யமான சில விஷயங்களில் அசட்டையுள்ளவர்களாயிருக்கிறார்கள். அதாவது, முதல் தரமான ஆடுகளை வளர்க்கிறார்களென்றே வைத்துக்கொண்டாலும், அவைகள் பலன்படுவதற்கு தகுதியான கடாக்களை எப்பொழுதும் மந்தையிலேயே வைத்துவிடுகிறார்கள். இது பெரும்பிழை. கடாக்களை வேறாகவே வைத்திருக்கவேண்டும். நூறு ஆடுகளுள்ள ஒரு மந்தைக்கு நான்கு கடாக்கள் அவச்யமாயிருநதால் அந்த நான்கு கடாக்களையும் தனியாக வேறிடத்தில் வைத்து போஷித்து வந்து, ஆடுகள் இளிவாட்டமின்றியும், நோய் நொடியின்றியும் கொழுத்து நல்ல மேனியுடனிருக்கும் ஸமயத்தில், வாரத்திற்கு

ஒரு கடா வீதம் மந்தையில் விடவேண்டும். ஸாதாரணமாய் விவஸாயிகள் நடத்துவது போல் எப்பொழுதும் கடாக்களை மந்தையில் திரிந்துவரும்படி விடுவதால், ஆடுகள் சூலடைந்து வர்ஷத்தில் எக்காலத்திலும் குட்டிகள் ஈன்றுகொண்டேயிருப்பதுடன், குட்டிகளும் மெலிந்தவைகளாயும் காத்ரமான உருவமும் திடமு மில்லாதவைகளாயும் பிறந்து, பிறந்த சில நாட்களில் பல இறந்துபோவதையும், பல வ்யாதிபடைந்திருப்பதையும் காணலாம். எப்பொழுதும ஆட்டுக்கடாக்களை வீடுகளில் கட்டி வைத்திருந்து, ஆடுகளுடன் சேருவதற்கு வெகு அநுகூலமாய்த் தோன்றும் பருவகாலத்தில் ஸுமார் இரண்டு அல்லது மூன்று வாரம் மந்தையில் விடவேண்டும். அதாவது எக்காலத்தில் ஆடுகளுக்கு விசேஷமாய் பால் சுரக்கக்கூடுமோ அக்காலத்தில் குட்டிகளை ஈனும்படியாக கடாக்களை மந்தையில் விடவேண்டும். அதிக பால் கறக்க ஆடுகளுக்கு நல்ல மேய்ச்சலும் கிடைக்க வேண்டும். தற்காலத்தில் விவஸாயிகள் அநுஷ்டிக்கும் கெடுதலான முறையால் அநுகூலமில்லாத காலத்தில் குட்டிகள் ஏராளமாய்ப் பிறந்து குளிராலும், ஈரத்தாலும், தாய்க்கு வேண்டிய உணவு கிடையாததாலும், அனந்தமாக மடிகின்றன. ஆட்டுக்கு கர்ப்ப காலம் ஐந்து மாஸமாகையால், கடாக்களை மந்தையில் விடவேண்டிய காலத்தை நிர்ணயிக்கும்பொழுது மேற்குறித்த கால அளவையும் கவனிப்பது அவசியம்.

ஆடுகள் குட்டி போடுங்காலம் தீர்ந்தவுடன், வயது சென்ற ஆடுகளையும், தாழ்ந்த ஜாதி ஆடுகளையும் பொறுக்கி யெடுத்து கசாப்புக் காரனுக்கு விற்பனை செய்ய கொழுக்கும்படி விடவேண்டும். குட்டிகள் பிறந்து ஆறுமாஸமானவுடன் அரூபமுள்ளதும் தாழ்ந்ததுமான கடாக்குட்டிகளை யெல்லாம் பொறுக்கியெடுத்து, அவைகள் ஆடுகளுடன் சேராமலிருக்கும்படி விதையடித்து கொழுக்கும்படி செய்து விற்றுவிடவேண்டும். கடாக்கள் பிறந்து பதினெட்டு மாஸமாவதற்குள் ஆடுகளைப் பொலியும்படியும், ஆடுகள் பிறந்து பதினெட்டு மாஸமாவதற்குள் கடாமிதிக்கும்படியும் விடக்கூடாது. பொதுவாக ஆடுகள் வர்ஷத்திற்கு ஒரு குட்டிவீதம் ஆறுவயஸாகிற வரையில் கருத்தரிக்கு மியல்புள்ளனவென்று நம்பப்படுகிறது. கடாக்களை மந்தையில் விடும்பொழுது, நன்றாய்ப்பருவமடைந்த ஆடுகளைத் தவிர மற்றவைகளை மிதியாமலிருக்கும்படி, கருத்தரிக்க வேண்டிய ஆடுகளை மாத்ரம் வேறுபடுத்தி கடாக்களை விட வேண்டும். எந்த ப்ராணியையும் அதிக சிறு வயஸிலேயே கருத்தரிக்கும்படி, விடுவது மிகப் பிசகு. ஏனென்றால், தன்னுடைய தேகமே வளர்ந்துகொண்டு வரவேண்டிய ஸ்திரியிருக்கையில் கர்ப்பத்திலுள்ள குட்டியையும் போஷிக்க முடியாமல், 'முந்தியே துர்பலை, அதனுடன் கர்ப்பணி' என்ற பழமொழிக்கு ஒத்து, தாயும் குட்டியும க்ஷீணத்தை யடைகின்றன.

ஆடுகளுக்கு உணவு அநேகமாய் காடுகளிலும் மேய்ச்சல் நிலங்களிலும் கிடைத்தபோதிலும், ஆடுகள் நன்றாய் வளர்வதற்கும், அவைகளின்பேரில் அதிக ரோமம் உண்டாவதற்கும், நிலத்திற்கு வேண்டிய எரு கிடைப்பதற்கும், அவைகள் வ்யாதியில்லாமல் நீடித்த காலம் ஜீவிப்பதற்கும், துரிதமாகக் கொழுக்கும்படி செய்வதற்கும், ப்ரதிதினமும் அவைகளுக்கு பிண்ணாக்கும் உப்பும் தக்கபடி கொடுத்துக்கொண்டு வரவேண்டியதுடன், மாஸத்திற்குக் குறைந்தது ஒரு தடவையாவது உடம்பு அழுக்குப் போகும்படி கழுவவேண்டும். ஆட்டெருவின் சிறப்பு இந்நாட்டிலுள்ள க்ருஷிகர்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்த போதிலும், தற்காலத்தில் அவைகளை க்ருஷிகர்கள் தங்கள் நிலங்களிலே

யே மறித்துவைத்து உணவு கொடுக்கத் தெரியாதவர்களாய் க்ராமத் தரிசு நிலங்களிலும், கல்லாங்காடுகளிலும், சாலை யோரங்களிலும் மேயும்படி செய்வதால், அவைகளுக்குத் தாழ்வான உணவே கிடைத்து, வளர்ச்சிக்கும் வ்ருத்திக்கும் தடை ஏற்படுவதுடன், ஆடுகளை அங்குமிங்கு மோட்டுவதால், அவைகள் செல்லும் வழிகளிலும் மேய்ச்சல் தரைகளிலும் கல்லாங்காடுகளிலும் இடப்படுகிற எரு வீணுகப்போகிறது. தவிர ஆடுகளை பராமரிக்கிற க்ருஷிகர்கள் தங்கள் நிலங்களில் மேய்ச்சலுக்குத் தகுந்தபடி பயிர் செய்து கொள்ளாவிட்டால் ஸ்வல்ப மேய்ச்சலுக்குங் கூட ஆடுகளை தூரமான விடங்களுக்கு ஓட்டிக் கொண்டுபோக நேருகிறது. ஆகையால் ஆடுகள் மேய்வதற்கு விசாலமான பூமியில் சோளத்தைப்பயிரிட்டு தட்டு முதிர்ந்தவுடன் தினத்திற்கு ஓரிடமாக பட்டிபோட்டு மறித்து வந்தும், நிலங்களில் ஆடுகள் தின்னத்தக்க பயிர்களைச்செய்து அறுத்துவந்து பட்டியில போட்டும் பராமரிக்கலாம். ஆடுகளை இவ்விதம் சீராய்ப் போஷித்துவந்தால், அவைகளினுடைய எருவின் மேன்மையும் ரோமத்தின் பலனும் இப்பொழுதிருப்பதைவிட இன்னும் அதிகமாகவே இருக்குமென்பதில் தடையில்லை.

டி. ஸி. வெங்கடாமணய்யர்.

SUCCESS IN FARMING.

விவஸாயத்தில் லாபமடைதல்.

எந்த தேசத்திலும் விவஸாயத் தொழில் லாபகரமாய் நடந்து வருவதற்கு மூன்று விஷயங்கள் முக்யகாரணமாயிருக்கின்றன. அவையாவன:—விவஸாய அறிவு, மூலதனம், விவஸாயத்தொழிலில் ப்ரியம் கொள்ளுதல் ஆகிய இவைகளாம்.

இந்த மூனறு விஷயங்களைப்பற்றியும் சென்னை விவஸாய டிரெக்டாராகிய மிஸ்டர் சாட்விக் "இந்தியன் அக்ரிகல்சரல் ஜெர்னல்" என்னும் பத்ரிகையில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

தற்காலம், போக்கு வரத்து வஸதிகள் சீர்திருத்த மடைந்திருப்பதாலும், தேசத்தில் பயமின்மையும் ஸமாதானமும் இருந்து வருவதாலும் இந்தியாவிலுள்ள ஸாமான்களை உலகத்திலுள்ள பற்பல தேசங்களுக்கு அனுப்பி விற்று வருவது ஸுலபமா யிருக்கிறது. இப்படி அன்ய தேசங்களுக்குச் சரக்கையனுப்ப ஸௌகர்யங்களிருப்பதால் விலைவாசிகள் ஒரே நிதானமாக ஆவதோடு, விவஸாயிக்கு ஏற்படக்கூடிய லாபம் இவ்வளவு என்று திட்டமாய் அறிந்து கொள்ளவும் முடிகிறது. மேலும் பருவகாலங்கள் பாதகமாக மாறினாலும் அதனால் ஏற்படக் கூடிய கஷ்டமும் குறைந்து போகிறது.

போக்குவரத்து ஸாதனங்கள் குறைவாக இருந்த முன்காலத்தில், எதாவது ஒரு வர்ஷத்தில் மாஸுல் ரொம்ப அபரிமிதமாய்க் கிடைத்தால், விலைவாசிகள் ரொம்பக் குறைந்துபோய் விவஸாயிக்குக் கொஞ்சம் நஷ்டமேற்படுவதுண்டு. எந்த வர்ஷத்திலும் உலகமெங்கும் எல்லா தேசத்திலும் விளைபொருள்கள் ஒரே சீராயிருக்குமென்பதில்லை. இதனால் எந்த தேசத்தில் விளைபொருள்கள் அதிகமோ அந்ததேசத்திலிருந்து விளைபொருள்கள், அவை குறைவாயுள்ள மற்றதேசங்களுக்கு ஏற்றுமதி செய்து அங்கேயுள்ள குறைவை சரிப்படுத்துவதற்கு உதவுகின்றன. ஆகையால் உலகமெங்கும் விலைப்போகக் கூடிய நெல், கோதுமை, பருத்தி, வேர்க்கடலை முதலிய பயிர்களை வீண் சேதமேற்படாமல் குறைந்த செலவில் அதிக மாஸுல் கிடைக்கும்படியான முறைகளை யனுஸரித்து ஸாகுபடி செய்துவந்தால் தக்கலாபம் கிடைத்து வரக்கூடும். இப்படி லாபம் கிடைத்து வரவேண்டுமானால் மேலே சொன்ன மூன்று

அம்சங்களும் விவஸாயிகளுக்கு அவச்யம் இருக்கவேண்டியவைகளாகும்.

விவஸாயிக்குத் தனது தொழிலில் ப்ரியம் ஏற்படாவிட்டால் தனது தொழிலில் அதிக கவனம் செலுத்தி, தனது வேலைக்காரர்களால் ஏற்படக்கூடிய சேதத்தைத் தடுக்கமுடியாது. உதாரணமாக, நெல் ஸாகுபடியில் அனுவச்யமாய் ரொம்ப அதிகமாக விதை தெளிப்பதால் விதை விஷயத்தில் நஷ்டமேற்படுகிறது. பருத்தி ஸாகுபடியில் கலப்படமான விதை தெளிப்பதால் வீண் ச்ரமம் அதிகமாகிறது.

விவஸாயி தனது தொழிலில் கடைத்தேற வேண்டுமானால், அவன் அதிகாலையில் எழுந்து மழையாயினுஞ்சரி, வெயிலாயினுஞ்சரி தனது வயல்களைச்சுற்றிப் பார்த்து தனது கால்நடைகளைப்பற்றி கவனித்து வர வேண்டும். வெளியில் போய்த் திரிவது கஷ்டமென்று எண்ணி, தனது கால்நடைகளைப் பற்றியும் பயிர்களைப் பற்றியும் அதிக ச்ரத்தை எடுத்துக் கொள்ளாமலிருக்கும் விவஸாயி கடைத்தேறுவது அரிது. விவஸாயி தனது கார்யங்களை நேரில் கவனித்து வருவதுபோல் வேறொன்றும் அவ்வளவு பலன் கொடாது. விவஸாய சாஸ்த்ரத்தின் நவீன ஆராய்ச்சிகளும், மேலான உரங்களும் விவஸாயி தனது நிலங்களையும் கால்நடையும் நேரில் போய் கண்காணித்து வருவதற்கு அடுத்தபடியென்றே சொல்லவேண்டும்.

விவஸாயத்துக்கு அடுத்தபடியாக வேண்டியது மூலதனமாகும். ஒரு விவஸாயி தனக்கு அதிகப்படியாகக் கிடைக்கும் மாஸூலெல்லாவற்றையும் கடன்காரருக்குப் பணம் செலுத்துவதற்கோ, அல்லது குத்தகைப் பணம் செலுத்துவதற்கோ செலவழித்துக்கொண்டு வந்தால் அவனுக்கு விவஸாயத்தில் ச்ரத்தை குறைந்து போகும். புது முறைகளையும், புது உரங்களையும் உபயோகிக்கப் பின்வாங்குவான். மேலும் பணம் கையிலில்லாமல் பணத் தட்டு ஏற்பட்டால் விவஸாயி தன்து மாஸூலை நல்லவிலை வரும்வரையில் வைத்திருக்க முடியாமல் போய், சீக்ரம் விற்க நேர்ந்து நஷ்டமடைந்து மறுபடியும் ஸாகுபடிக் காலத்தில் லேவாதேவிக்காரர்களிடம் போய்க் கடன்வாங்க நேருகிறது.

பண விஷயத்தில் விவஸாயிகள் படும் கஷ்டத்தை ஐக்ய நாணய ஸங்கங்கள் ரொம்பவும் குறைக்கக் கூடுமென்றாலும், ஜமீன்தார்களுக்கும், நிலஸ்வான்களுக்கும் கொடுக்கவேண்டிய வரிப்பணமும், குத்தகையும் அதிகமாயிருந்து, கிடைக்கும் லாபத்தில் பெரும்பாகம் வரிப்பணத்துக்கும், குத்தகைப் பணத்துக்கும் போய்விட்டால் விவஸாயிகள் விலையுள்ள உரங்கள் வாங்க ஸம்மதப்படமாட்டார்கள்.

ஏனென்றால் அதிகப் பணம் போட்டு விலையுயர்ந்த உரங்களைவாங்கி உபயோகித்து ஸாகுபடி செய்தால், வரும் லாபத்தில் பெரும்பான்மையான பாகம் ஒன்றும் செலவழிக்காத நிலஸ்வான்களுக்குப் போய்விடுகிறது. ஆகையால் இப்படிப்பட்ட இடங்களில் நிலஸ்வான்கள் உரங்கள் கருவிகள் ஆகிய இவைகளுக்காகும் செலவில் பெரும்பாகத்தையோ அல்லது முழுமையுமோபோட்டு விவஸாயிக்கு உதவி செய்தால்தான் நிலம் சீர்திருத்த மடையக்கூடும். அநேக இடங்களில் நிலஸ்வான்கள் இப்படிச் செய்து வருகிறார்கள். விவஸாயத்தை சீர்திருத்த வேண்டுமென்றால் நிலஸ்வானோ, குத்தகைக்காரனோ, அல்லது இருவரும் சேர்ந்தோ விவஸாயத்துக்கு வேண்டிய முதலைப் போட்டு பயிர்த்தொழில் செய்யவேண்டியது அவச்யமாகும்.

மூன்றாவது ஸாதனமாகிய விவஸாய அறிவு இரண்டு வகைப்படும். முதலாவது அந்தந்த ப்ரதேசத்திலுள்ள விவஸாய முறைகளை அறிந்திருத்தலும், அவைகளில் பழக்க மடைந்தி

ருத்தலும். இரண்டாவது உற்று நோக்கி ஊஹித்தறியும் சக்தி ஏற்பட்டிருப்பதும், அப்படி ஊஹித்தறிந்தவைகளை அனுஷ்டானத்துக்குக் கொண்டுவர தைர்யமிருப்பதும். புது முறைகளை தைர்யமாய்ச் செய்து பார்க்க வேண்டுமானால் மேல் சொன்ன அறிவு இருக்கவேண்டியதவச்யமாகும். ஞானமிருந்தால் நம்பிக்கை ஏற்படுகிறது. இதோடு அநுபோகமிருந்தால் எந்த விஷயத்தைப் பற்றியும சரியான அபிப்ராய மேற்படுவது முடியும். வெகுகாலமாய் அனுஷ்டித்து வந்த முறைகளின்படி ஊரிலுள்ளோரெல்லாம் ஸாகுபடி செய்து கொண்டுவர ஒருவர் மாத்ரம் அந்தமுறைகளை விட்டுவிட்டுப் புது முறைகளை அனுஷ்டிக்கிறதென்றால் அவருக்கு தைர்யமும் நம்பிக்கையுமில்லாவிட்டால் அப்படிச்செய்வதென்பது முடியாது. மேலும் இன்ன முறையை அல்லது பயிரைச் செய்து பார்க்கிறதென்றும், அவைகளை எப்படி ஸாகுபடிசெய்கிறதென்றும் தெரிந்து கொள்வதற்கு அவருக்கு விவஸாயத்தில் விசேஷ ஞானமும், தெளிவான அபிப்ராயங்களுமிருக்கவேண்டியதவச்யம்.

விவஸாய சாஸ்த்ரம் கணித சாஸ்த்ரம் முதலியவைகளைப்போல் ஒரு திட்டமான சாஸ்த்ரமில்லையாகையால், ஒரு ப்ரதேசத்தில் சரியாய் இருக்கக்கூடிய முறைகள் இன்னொரு ப்ரதேசத்தில் சரியாக இருக்குமென்பதற்கில்லை. ஆகையால் புது முறைகளைக் கையாடுமுன் அவைகளைப் பரீக்ஷித்து அவைகள் அந்தந்த இடங்களுக்கு ஏற்றவையா என்று பார்க்க வேண்டும்.

விவஸாயத்தில் நல்ல லாபம் கிடைக்க வேண்டுமென்றால் இன்னொரு விஷயம் கவனிக்கவேண்டியதவச்யம். மாஸூல்களை, அதிலும் முக்யமாய் வ்யாபார விளைபொருள்களை விற்கும் வழிகளை யறிந்துகொள்ள வேண்டியதவச்யமாகும். இவைகளை யறிந்திருப்பதோடு, இன்னின்ன தேசங்களுக்கு இன்னின்ன விதமான விளைபொருள்கள் தேவை யென்பதையும் நமது விவஸாயிகள் அறிந்திருந்தால் அவர்கள் ஸாகுபடி விஷயத்திலும், சரக்குகளை ஏற்றுமதி செய்யும் விததிலும் தவறுகள் செய்யமாட்டார்கள். வேர்க்கடலையை ஈரமாய்க் கட்டி வெளியூர்களுக்கு அனுப்புவதையும், பருத்தியைக் கலப்படமாய் விதைப்பதையும் இந்தத் தவறுகளுக்கு உதாரணமாய்ச் சொல்லலாம். பருத்திச்சாலைகளுக்கு கலப்படமில்லாத பருத்தி ஏராளமாய் வேண்டியிருக்கிறது. கலப்படமான பருத்தியாயிருந்தால் நூல் நூற்பவர்களுக்குக் கஷ்டம் ஏற்படுவதால் அதற்குக் குறைந்தவிலைதான் கொடுக்க ப்ரியப்படுகிறார்கள். சென்னையிலிருந்து மார்ஸேல்ஸுக்கு போகும் வேர்க்கடலை ஈரமாயிருப்பதால் அது அங்கே போகும்போது அழுகல் நாற்றமடித்துப் போகிறதால் அங்கே அதற்கு நல்ல விலை கிடைப்பதில்லை. இப்படிச் செய்வது நல்ல வ்யாபார முறையாகாது.

இந்த தேசத்திலுள்ள வ்யாபாரிகள் ஸுலபமாய் அனுஷ்டித்து லாபம் பெறக்கூடிய சீர்திருத்தங்கள் அநேகம் இருக்கின்றன. அவைகளில் சில பின் வருமாறு.

(1.) நெல் ஸாகுபடியில் விதையளவைக் குறைப்பது.

(2.) சாணியை பள்ளத் தொழுவத்தில் சேகரித்து வைப்பது.

(3.) ஸௌகர்யப்பட்ட இடங்களில் நன்செய் நிலங்களில் பசுந்தாள் பயிர்களை பயிரிட்டு அவைகளை எருவாக மடக்கி உழுதல்.

(4.) பருத்தி ஸாகுபடியில் விதைக்கென்று தெரிந்தெடுத்து சேகரித்த கலப்படமில்லாத விதையைத் தெளித்தல்.

(5.) பருத்தியை சுத்தமாய் சேகரித்து, ஒரு ஜாதியை இன்னொரு ஜாதியுடன் கலக்காமல் சுத்தமான பருத்தியாக விற்பது.

(6.) வேர்க்கடலையையும், கம்பு, தினை போன்ற தான்யங்களையும் மாற்றுப் பயிராக ஸாகுபடி செய்வது.

(7.) விற்பனைக்கு அனுப்புமுன் வேர்க்கடலையை நன்றாய்க் காயவைத்துப் பிறகு கட்டி யனுப்புதல்.

(8.) நோய்வராமல் தடுப்பதற்காக விதைச் சோளத்தை மயில்துத்த ஜலத்தில் நனைத்து எடுத்துப் பிறகு விதைத்தல்.

(9.) கரும்பை ஆலையாட்ட இரும்பாலைகளை உபயோகித்தலும், வெல்லம் செய்வதில் சீர்திருந்திய அடுப்புகளை உபயோகித்தலும்.

(10.) நன்செய் நிலங்கள் உள்ளவர்களில் யாராவது ஆராய்ச்சி செய்வதில் பணம் செலவழிக்க இஷ்டப்பட்டால் அவர்கள் நெல் பயிருக்கு மீன் எருவாவது, பாஸ்பேட் எருக்களாவது உபயோகித்துப் பார்த்து பலன் கண்டால் அவைகளை எப்போதும் உபயோகித்து வரலாம்.

GRAZING PANCHAYATS.
மேய்ச்சல் பஞ்சாயத்துகள்.

சென்ற ஜனவரி மாஸத்து லஞ்சிகையில் நமது ராஜாதானியில் சில ஜில்லாக்களில் க்ராம பஞ்சாயத்துகள் ஏற்படுத்தி, கால்நடைகள் மேயக்கூடிய காடுகளை அந்தப்பஞ்சாயத்துகள் வசம்விட்டுப் பார்க்கவேண்டுமென்று கவர்ன்மெண்டார் எண்ணியிருப்பதாகத் தெரிவித்தோம். இந்தப் பஞ்சாயத்துகளை நியமிப்பது விஷயமாய் தஞ்சாவூர் ஜில்லா கெஜட்டில்' ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கும் 'ரூல்'களை இங்கு சுருக்கமாய் எழுதுகிறோம். பஞ்சாயத்துகள் நியமிக்கப்படும் மற்ற ஜில்லாக்களிலும் 'பஞ்சாயத்துகளைப்பற்றிய 'ரூல்'கள் ப்ரசுரம் செய்யப்பட்டிருக்குமென்று எண்ணுகிறோம்.

க்ராமவாஸிகளுள் ஆடுமாடு வைத்திருப்பவர்கள் தான் பஞ்சாயத்தில் இருக்கத்தகுந்தவர்கள், இவர்கள் தாசில்தார் அல்லது டெபுடி தாசில்தார் முன்பாக ஒரு மீட்டிங் கூடி பஞ்சாயத்துக்கு மெம்பர்களைத் தெரிந்தெடுக்க வேண்டும். பஞ்சாயத்தில் மெம்பர்கள் ஐந்து பேருக்குக் குறைவாகவாவது, ஒன்பது பேருக்கு மேற்பட்டாவது இருக்கக்கூடாது. பஞ்சாயத்தார்கள் மூன்று வர்ஷம் வேலை பார்த்து வருவார்கள். பஞ்சாயத்தில் யாருடைய ஸ்தானமாவது காலியாகிவிட்டால் வேறு ஒருவனை அந்த ஸ்தானத்துக்கு நியமித்துக்கொள்ள பஞ்சாயத்துக்கு அதிகாரமுண்டு.

பஞ்சாயத்தின் கடமைகள்.

பஞ்சாயத்தார்களுடைய கடமைகள் பின் வருமாறு.

பஞ்சாயத்தார்களின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற மேய்ச்சல் பூமிகளை மேய்க்கிறவர்கள் சரியாய் உபயோகப்படுத்தும்படி செய்ய வேண்டியது பஞ்சாயத்தாருடைய முக்யமான கடமை. இதற்காக அதிக மேய்ச்சலினால் புல்லுகளை அழிக்காமல் தடுக்கவேண்டும். மரங்களை தோன்றினபடி வெட்டி அதனால் மரங்களின் வளர்த்தியை கெடுக்காமல் தடுக்க வேண்டும். காடுகளில் உண்டாகிற மாஸூலை விற்பனைக்கு கொண்டுபோகாமல் முக்யமாய் தடுக்கவேண்டும். மேய்ச்சலுக்காக ரிஸர்வ் செய்திருக்கிற காடுகளில் மேய்க்கவேண்டிய கால்நடைகள் இவ்வளவென்று நிர்ணயிக்கப்பட்டு உத்தரவு வந்தபிறகு, அப்படிப்பட்ட உத்தரவை பஞ்சாயத்தார் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவரவேண்டும். பஞ்சாயத்தார்கள் எப்போதும் வெள்ளாடுகளை காடுகளில் மேயவிடாமல் நீக்கவேண்டியது. ரெவின்யூ டிவிஷனல் ஆபீஸரால் உத்திரவு செய்யப்பட்டால், மேய்ச்சல் காட்டின் ப்ரத்தியேக ஸ்தலங்களின் எல்லை லயன்களை சரியாக பாதுகாக்கவேண்டியது. ஒவ்வொருவர்ஷத்திலும் மேய்ச்சலுக்காக கால்நடைகளை காடுகளுக்கு அனுப்புவதற்கு முன்னமே மேய்ச்சலுக்காக ஏற்படும் தீர்வை முழுமையும் கவர்ன்மெண்டாருக்கு செலுத்த

வேண்டியது. இதுவிஷயமாய் பஞ்சாயத்தார்கள் உத்தரவாதியாவார்கள்.

பஞ்சாயத்தின் அதிகாரங்கள்.

பஞ்சாயத்தின் வசம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிற மேய்ச்சல் காடுகளின் பூரா நிர்வாகத்தையும் பஞ்சாயத்தார்கள் வகிப்பார்கள். இவர்களுடைய அதிகாரங்களாவன.

(1) மேய்ச்சல் பூமிகளிலிருந்து கால்நடைகளை நீக்கவும், சேர்க்கவும் அதிகாரமுண்டு. மேய்ச்சல் காடுகளில் இத்தனை கால்நடைகளைத்தான் மேயவிடலாமென்று மேலதிகாரிகளிடமிருந்து உத்தரவு வந்திருந்தால், யாருடைய கால்நடைகளை விடலாமென்றும், எந்தஜாதிக் கால்நடைகளை விடலாமென்றும் பஞ்சாயத்தார் தீர்மானிக்கலாம். அஜாக்ரதையினாலோ, அல்லது வேண்டுமென்றோ, மேய்ச்சல் காடுகளிலுள்ள புல்லை நாசம் செய்கிறவர்கள், புல்லை அறுத்து விற்பனைக்காக கொண்டுபோகிறவர்கள், மேய்ச்சல் வரி செலுத்தத்தவறுகிறவர்கள், பஞ்சாயத்தினுடைய கட்டளைகளை மீறி நடக்கிறவர்கள், ஆகிய இவர்களுடைய கால்நடைகளை பஞ்சாயத்தார்கள் மேயவிடாமல் தடுக்கலாம்.

(2) அனுமதியில்லாமல் மேய்கிற கால்நடைகளைபஞ்சாயத்தார 'பௌண்டி'ல் அடைக்கலாம்.

(3) வீட்டு உபயோகத்துக்காகவும், விவஸாய வேலைகளுக்காகவும் மரம், தழை, முள் ஆகிய இவைகளை க்ராமத்தார் வெட்டிக்கொண்டுபோவதைப்பற்றி நிபந்தனைகள் ஏற்படுத்தி ஒழுங்குபடுத்த பஞ்சாயத்துக்கு அதிகாரம் உண்டு.

(4) கால்நடைகளை மேய்ப்பதற்கும், மரம், இலை, முள் ஆகிய இவைகளை வெட்டிக்கொள்வதற்கும் 'ராதாரி'ச் சீட்டுக் (Permit) கொடுக்கவும் வரி வஸூல் செய்யவும்,

(5) ப்ராஸிக்யூஷன் செய்யும்படியான கொடிய குற்றங்களைப் பற்றி டிவிஷனல் ஆபிஸர், தாசில்தார் டெபுடி தாசில்தார் ஆகிய இவர்களுக்கு ரிபோர்ட் செய்யவும் அதிகாரம் கொடுக்கபட்டிருக்கிறது.

POMEGRANATE CULTIVATION.

மாதுளை ஸாகுபடி.

மாதுளைச் செடிகள் நன்றாய்ப் பயிராவதற்கு 'புலபுலப்பான' மண் ரொம்ப ச்லாக்யமானது. அதில சுண்ணாம்பு ஸத்து அதிகமாயிருக்க வேண்டும். நல்ல மாதுளம் விதைகள் எடுக்க வேண்டுமானால் பின்வருமாறு செய்யவேண்டும். மாதுளஞ் செடிகளில பெரியதாயும் நல்லதாயுமுள்ள பழங்களைத் தெரிந்தெடுத்து விதைக்கென்று தனியாக விட்டு வைக்க வேண்டும். ஸாதாரணமாய் பழம் பறிக்கும் காலத்தைவிட கொஞ்சம் அதிககாலம் செடியிலேயே பறிக்காமல் விட்டுவைத்தால் அவைகள் அழுக ஆரம்பிக்கும். உடனே அவைகளைப் பறித்து இன்னும நன்றாய் அழுகவிட்டுப் பிறகு விதைகளைப் பொறுக்கியெடுத்து சாம்பலுடன் கலந்து நிழலிலுலர்த்தியெடுத்து வைத்துக்கொள்ள வேண்டும். கிணற்றோரமாகவுள்ள நிலத்தில் ஒரு பெரிய துண்டு நிலத்தைப் பாத்தியாகக் கட்டி ஒரு அடி ஆழத்துக்கு நன்றாய் உழுதோ, அல்லது கொத்திவிட்டோ, நிலத்தை புழுதியாக்கி ஒரு ஏகருக்கு 12 வண்டி வீதம் தொழுவத்தெருவும் வீட்டுச் சாம்பலும் போட்டு மண்ணில் கலந்துவிடவேண்டும். பிறகு மாதுளம் விதைகளை பரவலாக விதைத்து, விதைகள் மேலே தெரியாதபடி மண்ணால் மூடி, விதைத்த தினமே ஜலம் பாய்ச்சவேண்டும்.

பிறகு இரண்டாம் தடவையாக ஆறுவது தினமும், அதற்கப்புறம் 10 அல்லது 12-நாளைக்கு ஒரு தடவையாகவும் ஜலம் பாய்ச்சிவர வேண்டும். பாத்தியில் களைகள் ஒன்றுகூட இல்லாதபடி அப்போதைக்கப்போது களை

எடுத்து வரவேண்டும். மாதுளங் கன்றுகள் ஒரு வர்ஷத்துப் பயிரான பிறகு அவைகளைப் பெயர்த்து வேண்டிய இடத்தில் நட்டுக் கொள்ளவேண்டும். சிலர் நாற்றுகள் ஒன்றரை வர்ஷமான பிறகும், வேறுசிலர் ஆறுமாஸமான பிறகும் பெயர்த்து வேறு இடங்களில நடு கிறார்கள். ஸாதாரணமாய் மழைகாலத்தின் முன்பாகத்தில் தான் கன்றுகளைப் பெயர்த்து நடுவது வழக்கம். பம்பாய் ப்ரதேசங்களில் பின் வருமாறு பெயர்த்து நடுகிறார்கள்.

எந்தத் தோட்டத்தில் மாதுளஞ்செடிகளை நடவேண்டுமோ அதை இரண்டு தடவை உழுது புல்பூண்டுகளை அப்புறப்படுத்திவிட்டு ஏகருக்கு 12 வண்டிவிதம் தொழுவத்தெரு போட்டு மறுபடியும் உழுது மண்ணுடன் கலந்து விடுகிறார்கள். மாதுளஞ்செடிகளுக்கு இடையே யுள்ளவிடத்தில் இடைப்பயிர் ஸாகுபடி செய்வதற்காகவே இப்படி தோட்டத்தை உழுது எருவிடுகிறார்கள். இடைப்பயிர் ஸாகுபடி செய்யும் பயிர்கள் மாதுளம் செடிகளுக் குக்கெடுதி செய்யக்கூடாதவைகளாக இருக்க வேண்டும். பிறகு தோட்டத்தில் பதினெட்டு அங்குல சதுரமும், இரண்டடி ஆழமும உள்ள குழிகள் தோண்டிக் கொள்ளுகிறார் கள், குழிகளில் ஒன்றுக் கொன்றுள்ள இடைவெளி ஸாதாரணமாய் 12 அடிமுதல் 15 அடி வரையில் இருக்கும். இப்படி குழி கள் போட்டால் ஒரு ஏகருக்கு 200 முதல 300 வரையில் மாதுளஞ செடிகள் நடலாம். சில தோட்டக்காரர்கள் 10 அடிக் கொன்றாக செடிகள் வைப்பதுமுண்டு.

குழிகள் வெட்டும்போது மேல்மண்ணை யும் அடிமண்ணையும் கலக்காமல் தனியாக வைத்துக்கொள்ளுகிறார்கள். மேல் மண்ணில் செடியுணவானது பயிருக்கு உதவக்கூடிய நிலைமையில் இருக்கிறது. செடிகளை நடும் போது இந்த மண்ணைக் குழியின் அடியில் போட்டு அதன்மேல் ஒரு கூடைதொழுவத்தெரு இட்டு, அதன்மேல் செடியை வைத்து, குழியிலிருந்து எடுத்த அடிமண் ணோடு சாம்பல் கலந்து அதைக் குழியில் போட்டு நிரப்பி விடுகிறார்கள். ஒரு வண்டி சாம்பல் ஒரு ஏகர் நிலத்துக்குப் போதுமானது.

TAMARIND SEED AS CATTLE FOOD.

புளியம் விதையை கால்நடைத் தீனியாக உபயோகித்தல்.

புளியம் விதைகளை ஜனங்கள் வெகுவாய் யாதொன்றுக்கும் உபயோகப்படுத்தாமல் எறிந்துவிடுவது வழக்கம். சிலவிடங்களில் ஏழைகள் அவைகளை வறுத்துத்தின்பதுண்டு. இன்னும் சில விடங்களில் இவ்விதைகளிலி ருந்து பசை செய்து காகிதப் பெட்டிகள் முத லியவைகள் செய்வதற்கும், புஸ்தகம் பைண்டு செய்வதற்கும், செருப்பு முதலிய பாதரக்ஷை கள் செய்வதற்கும் உபயோகிப்பதுண்டு. சில ஜனங்கள் இவைகளின் மேல்தோலையெடுத்து பருப்பை மாவாக்கி ரொட்டி செய்தும் சாப் பிடுகிறார்களாம்.

திருநெல்வேலி ஜில்லா தென்காசி தாலுகா விலும் செங்கோட்டை முதலிய இடங்களி லும் இவ்விதைகளை மாட்டுத்தீவனமாக உப யோகிக்கிறார்களென்று 'கிருஷிகனி' லிருந்து அறிகிறோம். அங்கே ஜனங்கள் ஸாதாரண மாய்ப் புளியம்பழம் அகப்படும் காலங்களில் விதைகளை ஏராளமாய் வாங்கி அவைகளைச் சட்டியில்போட்டு வறுத்து, சாக்குகளில் போட்டுக் கட்டிவைத்துக் கொள்ளுகிறார்கள். இப்படிச் செய்தால் புளியம் விதைகள் லேசில் புழுத்துப்போகாமல் அப்படியே இருக்கும் சக்தியை அடைகின்றன. பிறகு தினசரி வேண்டிய அளவு புளியங்கொட்டை யை எடுத்து உரலில் போட்டுக் குத்தி தோல் நீக்கி உள்பருப்பை ஸுமார் 20-

மணிநேரம் ஊறப்போட்டு வைத்து மாடு ஒன்றுக்கு அரைப் பட்டணம்படி வீதம் வைத்தால் மாடுகளுக்குப் பிண்ணாக்கு பருத்திக்கொட்டை முதலியவைகள் வைக்கவேண்டுவதில்லையாம். முதல் முதல் மாடுகள் இதைத் தின்று வழக்கமாகிறதற்காக பருத்திக்கொட்டை, கொள்ளு, பிண்ணாக்கு முதலிய தீவனப் பொருள்களை ஊறப்போட்டு அந்தத் தண்ணீரை மாடுகள் குடித்து வழக்கம் வந்தவுடனே புளியம் விதைகளை மாத்ரம் தனியே ஊறப்போட்டு வைத்து வருகிறார்கள். புளியம் விதையையும் பருத்திக்கொட்டையையும் ரஸாயனப்பரீக்ஷை செய்து இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்ததில் புளியம் விதையிலுள்ள அம்சங்கள் அநேகமாய் பருத்திக்கொட்டையிலுள்ளவைகளுக்குத் தாழ்ந்திருக்கவில்லையென்று ஊஹிக்க வேண்டியதாயிருக்கிறது.

புளியம் விதை தற்காலத்தில் பொதி ஒன்றுக்கு ரூ. 2-க்குள் கிடைக்கிறது. பருத்தியின் விலையோ ரூபாய் பத்துக்குக் குறைகிறதில்லை.

ஆகையால் புளியம்விதை பருத்தி விதையைப்போல் ஸத்துள்ள கால்நடைத் தீவனமாயிருப்பதோடு விலை ஸரஸமாயுள்ளதால் அது எல்லாரும் கையாடக்கூடிய வஸ்துக்களில் ஒன்றாகும். இந்த விதையை திருநெல்வேலி ஜில்லாவின் சில பாகங்களிலும் மலையாளத்தில் செங்கோட்டை முதலிய சில இடங்களிலும் மாத்ரம் கால்நடைத் தீவனமாய் தற்காலம் உபயோகப்படுத்துகிறார்கள். வண்டிமாடுகளுக்கு இத்தீவனத்தை பரீக்ஷார்த்தமாய் ஸுமார் 3-மாஸம் வைத்து பரீக்ஷைபார்த்ததில் மாடுகள் மெலியவாவது, பலத்தில் குறைபவாவது இல்லையென்று திட்டமாய் சொல்லக்கூடுமென்று 'கிருஷிகன்' சொல்லுகிறது. ஆகையால் நமது நேயர்கள் இதை பரீக்ஷார்த்தமாயாவது உபயோகித்து அதன்பலனை நமது பத்ரிகை வாயிலாக வெளியிடுவார்களென்று நம்புகிறோம்.

இந்த விதையிலுள்ள உணவு ஸத்துக்களின் அளவுகள் பின் வருமாறு.

	தோலெடுக்காதவிதையில் நூற்றில் இத்தனை பங்கு.	தோலெடுத்த விதை 100-ல். இத்தனை பங்கு.
தண்ணீர் ...	10·50	9·35
ஆல்புமனாய்ட் ...	13·87	18·06
தைலபாகம் ...	4·00	6·60
கார்போஹைட்ரேட் என்னும் மாஸத்து	63·22	62·88
நார் ...	5·36	0·66
சாம்பல் ...	2·55	2·45

SPACE FOR FRUIT TREES.

பழ மரங்களுக்கு இடை வெளிதூரம்.

இந்தியாவிலுள்ள சிலநாட்டார் மரங்களை அடர்த்தியாய் நட்டால், அதிக பலனடையலாமென்னும் மதிகேடான எண்ணத்தினாலே தோப்புகளிற் பழமரங்களை நெருக்கமாய் நட்டு வளர்க்கிறார்கள். இவர்கள் மிகுந்தபலன் அடையாததற்குக் காரணம் அவர்கள் புத்தி ஹீனமேயன்றி, வ்ருக்ஷங்களினியல்பல்ல என்பது ப்ரத்யக்ஷம். இப்படி மரங்கள் நெருங்கி நின்றால் அவைகளை இடைக்கிடை தறித்துக் குறைத்து விடுவது, நிற்கும் மரங்கள் பலப்பட்டுக் காய்ப்பதற் குதவியாகும். மரங்களை வெட்டிக் குறைப்பதேயன்றி, ஸூர்யகிரணம் நிலத்திற்படாதபடி நிழல்போட்டு மறைக்குங் கிளைகளைத் தறிப்பதும் நல்லது. இவற்றோடு அடர்த்தியாயிருக்கும் வேர்களிற் சிலவற்றைத் தறிப்பதும் ஆங்கிலேயரின் வழக்கம். இதற்குக் காப்பித்தோட்டக்காரர் "கபாத்" பண்ணுதல் என்று சொல்லுவார்கள்.

மரம் நெருங்கிய தோட்டங்களிலே, மரங்கள் அதிக பரவலாயில்லாமல் அதிக உயரத்துக்கு நெட்டையாய் வளரும். ஆகையால் கன்றுகள் நடுமுன்பு நாலுபுறமும் அந்தந்த மரம் படரத்தக்க விசாலம் எவ்வளவு என்

பதை கணக்கிட்டு அதற்குத்தக்க அளவு தூரத்தில் நட்டுக்கொள்ளல் வேண்டும். நன்றாய் வளர்ந்த புளியமரம் சுற்றிலும் 25 அடி படரும். ஆதலால் ஒவ்வொரு மரத்தையும் 50 அடி தூரத்தில் நடுதல் உத்தமம். தென்னையின் மட்டை 12 அடி நீளமுள்ளதாதலால், 24 அடி தூரத்துக்கொரு தென்னையாக நடுவது நல்லது. மாமரங்கள் பொதுவாய் 20 அடி படர்வதால், 30 அடி தூரத்துக்கொன்றாய் நடலாம். எலுமிச்சை 7 அடி படர்வதால், அதை 14 அடி தூரத்துக்கொன்றாய் நடவேண்டும்-என்று 'கமத்தொழில் விளக்கம்' எழுதுகிறது.

FISH MANURE AND DRAINING THE FIELD.

மீன் எருவும், வயலை வடித்தலும்.

மீன் எருவை நன்செய் விதைப்புக்குப் போட்டால் விதைத்த மறுதினம (முளைத் தண்ணீர் எடுத்தால்) வாய்க்காலிலுள்ள ஜலம் முழுவதும் அப்புறப்படுத்தும்பொழுது தண்ணீரில் மிதந்துகொண்டிருக்கும் மீனெருவும் மீனெரு கலந்த ஸத்துள்ள தண்ணீரும் வெளியேபோய் விடும்.

ஆகையால் அதற்குப்பின் வரும் உபாயம் செய்வது நல்லது. மீன் எருவை நன்செய் விதைப்புக்குப் போட உத்தேசிக்கும்போது, நிலம் கடைசிதடவையில் உழவாகும்போது எருவைச் சிதறிமரமடித்து அப்பால் நெல் விதைக்கலாம். இது புழுதியில் நெல்விதைக்கும்போது செய்யக்கூடிய உபாயம்.

சேற்றில் நெல்விதைக்க உத்தேசித்திருக்கும்போதும் இப்படியே செய்யலாம். ஆனால் தண்ணீர் வடிக்கும்போது சற்று எரு ஸத்து நஷ்டமாகும். இது நஷ்டமாகாதிருக்கும் பொருட்டு, பயிர் 3-வாரம் அல்லது 1-மாஸம் வளர்ச்சியாயிருக்கும்போது கொஞ்சமாய் தண்ணீர் வைத்து இந்த உரத்தைச் சிதறி பயிருக்கு களை பரண்டியெடுத்து சற்று தண்ணீர்விட்டு, வெளியே போகாமல் தண்ணீரை 1-வாரத்திற்கு கட்டிவிட்டால் இந்த நஷ்டம் உண்டாகாது.

PLANTAIN TREE.

வாழை மரம்.

வாழைமரங்கள் காய்க்காததற்கு அநேக காரணங்களுண்டு. சிலவேளைகளில் ஜாஸ்தி நிழல் அடைந்திருப்பதினால் காய்ப்பு தாமஸமாகலாம். சில ஸமயங்களில் குலை போடாத வாழைமரங்களுக்கு பக்கத்தி லுண்டாயிருக்கும் கன்றுகளை எடுத்து பயிராக்கினால் இந்த மாதிரிஸம்பவிக்கும். வாழைத்தார்போட்ட மரங்களின் பக்கத்திலிருக்குமகன்றுகளை வைத்து உண்டாக்கி பலனடைவதுதான் உபாயம்.

DAIRYING INDUSTRY IN MYSORE.

மைஸூரில் பால் தயிர்த் தொழில்.

மாடு வளர்த்து நல்ல தயிர பால் நெய் வ்யாபாரம் செய்யும தொழிலை, படித்தவர்கள் கைக்கொள்ளும் பொருட்டு மைஸூர் ஸமஸ்தானத்தில் அப்படி ப்ரவிருத்தி செய்பவர்களுக்கு கட்டிடம் கட்டவும், மேய்ச்சல் தரைக்காகவும் ஒவ்வொருவருக்கும் 5 ஏகர் வரை இனாமாகக் கொடுப்பதாயும் பொருளுதவி செய்வதாயும் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம்.

FORCING EARLY FRUITING.

சீக்ரம் காய்க்கச் செய்தல்.

பழமரங்கள் பயிர செய்வதில் விதையிலிருந் துண்டாகும் எவ்வித நாற்றையும 5மாஸத்துக்கொருதரம் பிடுங்கி நட்டுவந்தால், ஆணிவேர் அதாவது மூலவேர் பலங்குறைந்தும், சல்லிவேர் பலப்பட்டும் வளரும். இப்படி 3 முறை பிடுங்கி நடுவது நல்லது. இவ்வித மரங்கள் சீக்ரம் பூத்துக் காய்க்கும்.

RE-SETTLEMENT SCHEME REPORTS.

ரீ ஸெட்டில்மெண்ட் ஸ்கீம் ரிபோர்ட்டுகள்.

ரீ ஸெட்டில்மெண்ட் செய்யப்படும் ஜில்லாக்களில் ஸெட்டில்மெண்ட் ஸ்கீம் ரிப்போர்ட்டுகளை அந்தந்த ஜில்லா கெஜட்டுகளில் இங்க

லீஷிலும், அந்தந்த ஜில்லாக்களின் முக்யமான தேசபாஷைகளிலும் ப்ரசுரம் செய்யவேண்டு மென்று ரெவின்யூ போர்டார் உத்தர விட்டிருக்கிறார்கள்.

TWO CHEAP AGRICULTURAL IMPLEMENTS.

இரண்டு நயமான உழவுக்கருவிகள்.

விந்துக்கலப்பை, முள்பலுவு ஆகிய இவைகளைப்பற்றி சென்ற மே மாஸத்து ஸஞ்சிகையில் 235-ம் பக்கத்தில் இரண்டு குறிப்புகள் எழுதியிருந்தோம். இப்போது அவைகளின் படங்களைக் கீழே காட்டியிருக்கிறோம். இவை இரண்டும் தென்னற்காடு ஜில்லா, நெல்லிக்குப் பத்துக்கடுத்த பாலூர் விவஸாயப்பண்ணை மானேஜரிடம் விலைக்குக் கிடைக்கும். விந்துக் கலப்பையின் விலை ரூ. 3—8—0. முள்பலுவின் விலை ரூ. 7—0—0.



முள்பலுவு.



விந்துக் கலப்பை.

[By kind courtesy of the Director of Agriculture, Madras.]

JAGGERY FOR CATTLE.

ஆடுமாடுகளுக்கு வெல்லம்.

மாடு குதிரை ஆகிய இவைகளுக்கு வெல்லம் கொடுத்தால் வயிற்றில் உண்டாகும் வாயு, மலச்சிக்கல் முதலிய தொந்தரவுகளைக் குறைக்கும். 100-ராத்தல் கனமுள்ள ம்ருகத்திற்கு 2-ராத்தல் வெல்லம் போதுமானது.

The Co-operative World.
கோவாபரேஷன் பகுதி.

GOVERNMENT AND CO-OPERATION.
கவர்ன்மேண்டும் கோவாபரேஷனும்.

போன ஜூன்மீ பத்திரிகையில் ஐக்ய நாணய ஸங்கங்கள் விஷயமாய் கவர்ன்மெண்டார் வெளியிட்டிருக்கும் தீர்மானத்தில் ஐக்ய நாணய முயற்சியின் அபிவிருத்தியைப் பற்றியும், அதில் கவர்ன்மெண்டாரின் ஸம்பந்தத்தைப் பற்றியும் சொல்லியவைகளை எழுதினோம். இப்பொழுது இந்த முயற்சிக்கு கவர்ன்மெண்டார் எவ்விதமாய் பணஉதவி செய்கிறார்களென்பதைப்பற்றியும், தணிக்கை விஷயமாய் என்ன செய்கிறார்களென்பதைப்பற்றியும், இந்த ஸங்கங்களிடத்தில் ஜில்லா அதிகாரிகள் எப்படி நடந்து கொள்ளவேண்டியதென்பதைப்பற்றியும், ஸெண்ட்ரல் பாங்கியைப் பற்றியும் மேற்சொல்லிய தீர்மானத்தில் கவர்ன்மெண்டார் வெளிப்படுத்தியிருக்கும் அபிப்ராயங்களை சுருக்கிச் சொல்லுகிறோம்.

பணஸம்பந்த மில்லாமை.

ஐக்யநாணய ஸங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் பண உதவி செய்திருக்கிறார்களானாலும் அது ஸ்வல்பமாகவே இருக்கிறது.

10 வர்ஷத்துக்கு முன்னால் ஐக்யநாணய முயற்சி ஆரம்பித்தபோது, ஸங்கங்களுக்கு கவர்ன்மெண்டார் தாராளமாய் பணஉதவி செய்யவில்லையென்று பலர் குறை கூறினார்கள். ஆனால் அப்படிச் செய்தது கவர்ன்மெண்டார் வேண்டுமென்றே செய்த கார்யம். இதரதேசங்களில் கவர்ன்மெண்டுகள் ஐக்ய நாணய ஸங்கங்களுக்கு ஏராளமாய் பணஉதவி செய்ததால் அங்கே ஸங்கங்கள் உருப்படாமல் போயின. ஆகையால் இந்தியாவில் அப்படி ஏராளமாய்ப் பண உதவி செய்யாமல் கவர்ன்மெண்டார் ஸ்வல்ப பண உதவியே செய்தார்கள். இந்த ஸ்வல்பங்கூட உதவிசெய்ததற்குக் காரணமென்ன வென்றால், ஆரம்பத்தில் ஐக்யநாணய ஸங்கங்கள் ஏற்பட்டபொழுது அவைகளை நம்பி இந்தியாவில் பணம் கொடுப்பாரில்லை. ஆகவே, மெம்பர்கள் பாதி பணம் போடும் பக்ஷத்தில் கவர்ன்மெண்டார் பாதி போடுவதாக ஒப்புக்கொண்டு ஆரம்பத்தில் ஸங்கங்களுக்கு ஸ்வல்ப பணஉதவி செய்துவந்தார்கள். இப்படி கவர்ன்மெண்டாரை பண உதவிக்கு நம்பக்கூடாதென்று ரெஜிஸ்ட்ரார்கள் வற்புறுத்தி வந்ததால் இப்போது ஸங்கங்களின் மூலதனத்தில் ஸர்க்கார் கொடுத்திருக்கும் கடன் 100-க்கு 3-க்கு மேல் இல்லை. இது கூடக்கொடுத்திராவிட்டால் இந்தியாவில் ஐக்ய நாணய ஸங்கங்களே உண்டாயிருக்கமாட்டா. பணஉதவி ஸ்வல்பமாகவே செய்ததினால்தான் ஸங்கங்கள் நல்ல ஸ்திதியை அடைந்து இப்பொழுது திடமாயிருக்கின்றன.

மேற்பார்வையும் தணிக்கையும்.

இந்த வேலைகளை யூனியன்களிடத்திலும் ஸெண்ட்ரல் பாங்கிகளிடத்திலுமே விட்டுவிடக்கூடாது. ஸாதாரண நித்யப்படி விஷயங்களில் கவர்ன்மெண்டார் புகாமல், இவைகளை சேர்த்துக்கொண்டு வேலையை நடத்தவேண்டும். கவர்ன்மெண்டாரின் மேற்பார்வை இல்லாமற் போனால் ரெஜிஸ்ட்ரார்களுக்கும் ஐக்ய ஸங்கங்களுக்கும் ஸம்பந்தம் விட்டுப்போய் விடும். அதினால்ரெஜிஸ்ட்ரார்கள் தணிக்கைசெய்கிறார்கள் என்பதை நம்பி ஐக்ய நாணய ஸங்கங்களுக்கு பணம் கொடுக்கிறவர்கள் அப்படிக் கொடுக்கமாட்டார்கள். ஆகையால் ஐக்ய நாணயஸங்கங்களை ஜனங்களே நடத்தி நிர்வாகம் செய்ய வேண்டுமென்றாலும்,கவர்ன்மெண்டார் ரொம்பப் புகுந்து பாராமல் மேற்பார்வை

பார்த்து வந்து, தணிக்கை முதலியவிஷயங்களை தக்க நிபுணர்களைக்கொண்டு செய்வித்து, ஜில்லா அதிகாரிகளைக்கொண்டு மேலெழுந்தவாறு பார்த்துவரச் சொல்லவேண்டும்.

ஜில்லா அதிகாரிகள் செய்யக்கூடியவை.

ஐக்ய நாணய ஸங்கங்களால் தற்காலத்திலும் இனிமேலும் பலவித நன்மைகளோ, தீமைகளோ உண்டாகக் கூடுமாதலால் ஜில்லா அதிகாரிகள் அவைகளைத் தள்ளிவிட்டவண்ணமாய் இருக்கக்கூடாது. ஜில்லா அதிகாரிகளுக்கு ரெவின்யூ சட்டம் எப்படித் தெரிந்திருக்க வேண்டுமோ அதைப் போலவே கோவாபரேஷனைப்பற்றிய விஷயங்களும் தெரிந்திருக்க வேண்டும. ஸங்கங்கள் கண்ட வழியில் செல்லாமல், க்ரமமாய் வேலை செய்யும்படிக்கும், ஜில்லா அதிகாரிகள் பார்க்க வேண்டும. ஐக்ய முயற்சி பரவுவதில், தான் முன்னிருந்து வேலை செய்யாமல் ஸங்கங்களுக்காக உழைத்து வருபவர்களைத் தட்டிக் கொடுத்தும், ப்ரமுகாகளையும் தனவான்களையும் ஸங்கங்களில் சேரச் சொல்லியும், ஜில்லா அதிகாரிகள் ஒத்தாசை செய்துவரவேண்டும. இப்படிச் செய்வதால் ஐக்ய ஸங்கங்களை கவர்ன்மெண்டு உத்யோகஸ்தர் நிர்வாகம் செய்கிறா என்று சொல்ல முடியாது. இதனால் ஐக்ய ஸங்கங்களுக்கு ஒருவித பலமேதவிர, வேறொன்றுமில்லை. அவைகள் ஜில்லா உத்யோகஸ்தர்களுக்கு அவர்கள் தினசரி செய்யவேண்டிய ஜில்லா நிர்வாகவேலைகளில் ஒத்தாசைசெய்யதக்க ஸாதனங்களாகவும் ஏற்படும்.

ஜில்லா நிர்வாகம்.

ஐக்ய நாணய ஸங்கங்களை அடியிற் கண்ட விஷயங்களில் ஜில்லா நிர்வாகத்தில் ஸாதனங்களாக உபயோகிக்கலாம். ஒரு ஜில்லாவில் பொது விஷயங்களைப் பற்றி ஜனங்கள் என்ன சொல்லுகிறார்களென்று அறியவும் மூலாதாரப்படிப்பையும் ஸுகாதார ஸாதனங்களையும் அபிவ்ருத்தி செய்யவும், பஞ்சம் அல்லது காலரா முதலிய வ்யாதிகள் ஏற்பட்டால், ஸங்கங்கள் ஜனங்களுக்கு ஒத்தாசை செய்யவும், பொதுவாய் ஸங்கங்களைக்கொண்டு க்ராம நிர்வாகத்தை சீதிருத்தவும், இன்னும் இவை போன்ற காரியங்களைச் செய்யவும் ஐக்ய ஸங்கங்களை ஜில்லா நிர்வாகத்தில் ஸாதனங்களாக உபயோகிக்கலாம். இநத விஷயங்களைப்பற்றி அந்தந்த மாகாண கவர்ன்மெண்டு யோஜிக்கவேண்டும். ஐக்ய நாணய ஸங்கங்கள் அங்கங்கே பரவி விட்டதாலும், அவைகளால் வரக்கூடிய நனமை தீமைகள் எல்லாவற்றையும் யோசித்து ஜில்லா அதிகாரிகள் அவைகளைப்பார்த்து வரவேண்டும்.

ஸென்ட்ரல் பாங்கிகள்.

ஐக்ய நாணய ஸங்கங்கள் அதிகமாக ஆக, அவைகளை ஸென்ட்ரல் பாங்கிகளுக்கு உட்படுத்தியும், சில மாகாணங்களில் ஸென்ட்ரல் பாங்கிகளை மாகாண பாங்கிகளுக்கு உட்படுத்தியும், இப்படி ஸங்கங்களை ஒன்று சேர்க்க வேண்டிய தவச்யமாயிருக்கிறது. இப்படிப்பட்ட பெரிய ஸ்தாபனங்கள், முதலாளிகளிடத்திலிருந்து பணத்தை சேகரித்து, அங்கங்கே உள்ள ஸொஸைட்டிகளுக்குக் கொடுக்கின்றன. இவைகளை நிர்வகிப்பது ச்ரமமான காரியம். ஐக்ய நாணய முயற்சிக்கு ஆபத்து வராமல் காத்துக்கொள்ள வேண்டுமானால், மேற் சொல்லிய ஸென்டரல் பாங்கிபோன்ற பெரிய ஸ்தீபனங்களின் கணக்குகளை கவர்ன்மெண்டார் நிபுணர்களைக் கொண்டு தக்கபடி தணிக்கை செய்து வருவதோடு, ஜில்லா அதிகாரிகளும், மேற் சொன்ன ஸ்தாபனங்களின் காரியங்களில் ஒன்றொன்றிலும் புகாமல் அவைகள் ஜில்லா நிவாகத்தில் நல்ல செல்வாக்குள்ளவைகள் என்பதை உணர்ந்து அவைகளை மேற்பார்வை பார்த்து வரவேண்டும்.

WHAT CO-OPERATORS CAN DO.

கோவாபரேடர்கள் செய்யக்கூடியவை.

வடமலேபுரம் மிஸ்டர் ஆனந்த ராவ் ஸமீபத்தில் வெளியிட்ட ஒரு துண்டுப்பத்ரிகையில், வடமலேபுரம் கோவாபரேடிவ் ஸங்கம் என்ன செய்து வருகிற தென்றும், இன்னும் இன்னின்ன கார்யங்கள் செய்பலா மென்றும் தெரிவித்திருக்கிறார்.

அந்த ஸங்கத்தில் நூற்றுக்கு முக்கால் வட்டி வீதம் கடன் கொடுக்கிறார்கள். வெளியில் ஜனங்கள் நூற்றுக்கு ஒரு வட்டி வீதத்துக்குக் குறையாமல் வாங்குவார்களாதலால் வட்டி விஷயத்தில் மெம்பர்களுக்கு விசேஷ லாபம் ஏற்படுகிறது.

இந்த வட்டிலாபத்தோடு கோவாபரேடிவ் ஸங்கங்களில் கடன் வாங்கினால் ஸ்டாம்பு ரெஜிஸ்டர் செலவு லாபமாதலால் விவஸாயிகளுக்குக் கடன் தேவையானல் வாங்குவதற்கு ஐக்ய நாணய ஸங்கங்களே சரியான இடமென்று மிஸ்டர் ஆனந்தராவ் சொல்லுகிறார்.

வடமலேபுரம் ஸங்கம் கடன் கொடுத்து உதவுவதே யல்லாமல் வேறு விதங்களிலும் மெம்பர்களுக்கு உதவிசெய்து வருகிறதென பதற்குப் பின்வரும் விஷயங்களைத் தெரிவித்திருக்கிறார்.

ரொக்கலேவாதேவிக்கு மாத்ரம் இந்தஸங்கம் உபகாரம் செய்யுமென்பதில்லை. விவஸாயிகளுக்குவேண்டிய இதர ஸாதனங்களையும் செய்யத் தகுதியுள்ளது. வடமலேபுரம் நாணய ஸங்கம் டிபார்ட்மெண்டாருடைய அனுமதியைப்பெற்று விவஸாய முயற்சிக்கு வேண்டிய ஸாதனங்களை யெல்லாம் உதவி வரும்படிக்கு விவஸாய ஸங்கமொன்று சென்ற ஆகஸ்டு மாஸத்தில் மதராஸ் சென்ட்ரல் அக்ரிகல்சரல் கமிட்டியின் கௌரவ காரியதரிசிகள் ப்ரயத்தனத்தின்பேரில் ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வேலை நடந்து வருகிறது. இந்தஸங்கம் வேலை செய்ய ஆரம்பித்தது கோவில்பட்டி ஸர்க்கார் விவஸாயப்பண்ணையிலிருந்து நயமான கருங்கண்ணிப் பருத்தி விதையை விலைக்கு வாங்கி மெம்பர்களுக்குப் பொதி 1-க்கு ரூபா 13-8-0 வீதம் விற்றுவந்தது. அதே காலத்தில் மற்ற வ்யாபாரிகள் அவ்வளவு நயமில்லாத விதையைப் பொதி 1-க்கு ரூபா 16-க்கு விற்று வந்தார்கள். இப்பக்கங்களில் விவஸாயிகளுக்கு முக்யமாய் வேண்டியதா யிருக்கிற தோல்களைக் கொண்டுவந்து விற்பனை செய்ததில் துலாம் 1-க்கு 26-முதல் 30-ரூபாவரை ஸங்கத்தில் விலைப் போயிற்று. இதர வ்யாபாரிகள் 30-முதல் 34-வரை விற்று வருகிறார்கள். இந்தப் புதுஸங்கம் மெமபர்களின் மாஸுலை மொத்தமாயும் லாபகரமாயும் விற்பதற்கு வேண்டியதைச் செய்துவருகிறது. இதற்கு விவஸாய டிபார்ட்மெண்டார் வேண்டிய முயற்சியும் உதவியும் செய்து வருகிறார்கள். இந்தஸங்கத்தின் மெம்பர்களைப் புது மாதிரியான விவஸாயம செய்யும்படிக்கு, அதற்குவேண்டிய கருவிகளைக் கொடுத்து வருகிறார்கள். அவற்றை உபயோகிக்கவேண்டியவழிகளைத் தங்கள் உத்யோகஸ்தர்களைக்கொண்டு கற்பித்துக் கொடுக்கிறார்கள். ஆகையால் விவஸாயிகள் தங்கள் க்ஷேமத்தைக்கருதி இம்மாதிரியான விவஸாய ஐக்யஸங்கம் ஒன்றை ஸ்தாபித்துக் கொள்ளவேண்டியது அவச்யம். நாணய ஸங்கத்தைவிட இந்த ஸங்கத்தில் ஜாஸ்தியான வேலை ஏற்படும். கணக்குகளும் அதிகமாக வைக்கவேண்டும். ஆனல் இப்பொழுது க்ராமத்திய ஜனங்கள் கணக்குகளில் தேர்ந்துவருவதால் இம்மாதிரி ஸங்கத்துக் கணக்கு அவர்களுக்குக் கடினமாகவிராது. ஒவ்வொரு நாணயஸங்கமும் ஒரு விவஸாய ஸங்கத்தை யேற்படுத்திக் கொள்ளவேண்டியது அவச்யம். தற்காலத்துக்கு ஒவ்வொரு நாணயஸங்கமும் அவ்விதம் யேற்படுத்திக் கொள்ளுவது ஸாத்யமில்லாதவரை, தங்களுக்

குத் தேவையான ஸெளகர்யங்களைப் பக்க ஸங்கத்தாருடன் ஒப்பந்தம்செய்து கொண்டு எளிதில் அடையலாம். இப்பொழுது வடமலைப் புரத்தில் ஒரு விவஸாய ஐக்யஸங்கம் வேலை செய்துவருவதில் பக்கஸங்கத்தார் தங்களுக்குத் தேவையானவைகளை இந்த ஸங்கத்தின் மூலமாய்ப் பெறலாம். இதனால் இரண்டு ஸங்கங்களுக்கும் லாபமுண்டு. வடமலைபுரம் சுற்றிலுமுள்ள க்ராமங்களில் இறவைக்கு ஜாஸ்தியானதோல் செலவாகிறது. ஒவ்வொரு ஸங்கத்தின் மெம்பர்களுக்கும் மேற்படி தோல் இல்லாதவரை வேலை நடந்துவருவது முடியாது. இப்பொழுது ஒவ்வொரு மெம்பரும் தனித்தனியே வ்யாபாரிகளிடத்தில் போய் வாங்குவதில் ஜாஸ்தி நஷ்ட மடைகிறார்கள். அவ்விதமில்லாமல் ஒவ்வொரு நாணயஸங்கத்தின் மெம்பர்களும் ஒன்று சேர்ந்து தங்களுக்கு வேண்டிய தோல் வகையராவையும் விவஸாயத்துக்குவேண்டிய ஸாமான்களையும் இவ்வளவென்று தீர்மானித்துக்கொண்டு அதை வடமலைபுரம் ஸங்கத்தாருக்கு தெரிவித்தால் அவர்கள் தங்களுக்கு தேவையான ஸாமான்களுடன் மற்ற ஸங்கத்துக்குத் தேவையானவைகளையும் தருவித்து கொடுப்பார்கள். இவ்விதம் சுற்றிலுமுள்ள ஸுமார் 10 ஸங்கங்கள் ஒன்று சேர்ந்து தருவித்தால் விலை ஸரஸமாய்க் கிடைக்கும். மொத்தமாய் வாங்க நேரிடுவதில் எங்கெந்த ஸாமான் எந்த இடத்தில் விலை ஸரஸமாய்க் கிடைக்குமோ அந்த இடத்திலேயே வாங்குவதால் மத்தியிலுள்ள தரகர்கள், வ்யாபாரிகள், இவர்களுக்கு கிடைக்கும் லாபம் இந்த ஸங்கங்களுக்குக் கிடைக்கும். ஆகையால் ஒவ்வொரு ஸங்கத்தாரும் இதை கவனித்து நடந்தால் மேன்மையா யிருக்கும். 10-ஸங்கத்திற்கு மத்தியில் 1-ஸங்கம் இம்மாதிரி வேலையைக் கைக்கொள்ளவேண்டியது அவச்யம். அங்கங்கே யிருக்கும் ஸங்க ப்ரமுகர்கள் ஒன்றுசேர்ந்து ஆலோசித்து ஸாமான் வாங்கவும் தங்கள் மாஸூல்களை மொத்தமாய் லாபகரமான இடத்தில் விற்கவும் ஏற்பாடு செய்துகொண்டு அவரவர்கள் ஸுகத்தை யடையவேண்டுமென்றும், ஐக்ய இயக்கத்தை வ்ருத்திக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய முயற்சி செய்யவேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறேன்.

AUDIT FEES FROM CO-OPERATIVE SOCIETIES.

கோவாபரேடிவ் ஸங்கங்கள் கொடுக்கவேண்டிய தணிக்கை பீஸ்.

கோவாபரேடிவ் ஸங்கங்களின் கணக்குகளை கவர்ன்மெண்டார் தணிக்கை செய்வதற்காக அடியில் கண்டவாறு பீஸ் அதாவது சார்ஜ் வாங்கப் போவதாய் விளம்பரம் செய்திருக்கிறார்கள். இதைப்பற்றி யாராவது ஆக்ஷேபிக்கும் பக்ஷத்தில் உடனே கவர்ன்மெண்டாருக்கு எழுதிக்கொள்ளவேண்டும்.

(1) ஒவ்வொரு ஸெண்ட்ரல் பாங்கியும் ஸர்வ செலவும் போக மிகும் அயன் லாபத்தில் 100-க்கு 5-வீதம் ஸர்க்காருக்கு கொடுக்க வேண்டும். ஆனால் இப்படி வருஷம் 1-க்கு 750-ரூ-க்கு மேல் கொடுக்கவேண்டியதில்லை.

(2) விவஸாய ஸங்கங்கள் அல்லாத ஒவ்வொரு ஸங்கமும் அயன் லாபத்தில் 100-க்கு 5-வீதம் கொடுக்கவேண்டும். ஆனால் இப்படி 15-ரூ-க்கு மேல் கொடுக்கவேண்டியதில்லை.

(3) விவஸாய ஸங்கங்கள் அவைகளுக்குக் கிடைக்கும் லாபத்தில் 100-க்கு 5-வீதம் கொடுக்கவேண்டும். ஆனால் ஒரு ஸங்கமும் 5-ரூ-க்கு மேல் கொடுக்கவேண்டியதில்லை.

(4) ஐக்ய நாணய ஸங்கங்களல்லாத ஸங்கங்கள் மொத்த விற்பனைத் தொகையில் 100-க்கு 1-வீதம் கொடுக்கவேண்டும். ஆனால் 50-ரூ-க்குக் குறைந்து கொடுக்கக்கூடாது. 750-ரூ-க்கு மேல்பட்டும் கொடுக்கவேண்டியதில்லை.

மேற்சொன்ன விகிதங்கள் தற்காலத்துக்காக ஏற்படுத்தப்பட்டவைகள். இவைகளை கவர்ன்மெண்டார் வேண்டியபொழுது மாற்றிக்கொள்வார்கள்.

The Commercial World.

வ்யாபாரப் பகுதி.

RICE MILLS IN TANJORE DISTRICT.

தஞ்சாவூர் ஜில்லாவில் ரைஸ் மில்லுகள்.

தஞ்சாவூர் ஜில்லாவில் சில காலமாக நடந்து வரும் மெஷினால் நெல்லுக்குத்தும் தொழில் தற்காலம் மிகவும் பரிதாபப்படத்தக்க நிலைமைக்கு வந்து விட்டதென்று தெரியவருகிறது. முதல் முதலில் நெல்லுக்குத்தும் மில்லுகள் ஸதாபித்தவர்களுக்கு லாபம் வரக் கண்ட அல்லது லாபம் வருவதாக எண்ணின அநேகர் தாங்களும் லாபமடையலாமென்று எண்ணி, ஒருவர் பின்னொருவராக மில்லுகள் வைத்து விட்டார்கள். இப்படி மில்லுகள் அதிகமாகவே, குத்துவதற்கு போதுமான வளவு நெல்லகப்படாமலும், போட்டியால் நெல்லுக்குத்தும் சார்ஜ் குறைந்து போயும், வேலைக்காரர்கள் சம்பளம் அதிகமாகியும், தவிட்டின் விலை மலிந்து போயும் மில்லுகளுக் குத்தக்க லாபம் வராமல போய்விட்டது. இப்போது தஞ்சாவூர் ஜில்லாவில 300 மில்லுகளுக்கு அதிகம் இருக்கின்றனவென்று 'சுதேசமித்திரனில்' சீர்காழி மிஸ்டர் முத்துக்குமாரஸாமிபிள்ளை தெரிவிக்கிறார். இந்தமில்லுகளின் சொந்தக்காரர்களில் சிலர் வைத்த மில்லை நடத்தமுடியாமலும், சிலர் அரைகுறை வேலையில் விட்டு விட்டுமிருக்கிறார்கள் என்று அவர் சொல்லுகிறார். விஷயங்கள் இப்படியிருக்க இன்னும் சிலர் புதிதாக மில் வைக்க முயற்சி செய்கிறார்களாம். மில் வைப்பதால் அதிக லாபம் வரும் என்று அவர்கள் எண்ணியிருப்பதே அதற்குக்காரணம் போலும். அப்படிப்பட்ட தப்பெண்ணத்தை மாற்றுவதற்காக மிஸ்டர் முத்துக்குமாரஸாமிபிள்ளை தாம சொந்தத்தில் எட்டும் எஞ்ஜின்வைத்து நடத்திவரும் ரைஸ் மில்லின் சென்ற வர்ஷத்தியகணக்குகளை மேற்படி பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். அது பின் வருமாறு.

1913-ம் வரஷம் மில்வேலை செய்த	நாள்	243
,, மில் ஸம்பந்தமான வேலையில்லாமல் நின்றது	நாள்	41
,, மழையினால் நின்றது	நாள்	54
,, நெல் இல்லாமல் நின்றது	நாள்	27

வரவு விபரம்.

வேலை செய்த நாள் 243-க்கு குத்தப்பட்ட (26 மரக்கால் அரிசிமூட்டை 1-க்கு 192 பவுண்டு நிறை) 9067-மூட்டைக்கு மூட்டை 1-க்கு ரூ. 1 விதம் குத்துக் கூலி வரவு ரூபா	9067	0	0
(1914-ம் வருஷம் 27 மரக்கால அரிசி 195 பவுண்டு நிறை மூட்டை 1-க்கு 1½ அணா கூலி. அதிலும்நெல் இல்லாமல் அநேக மில்கள் வேலை செய்யவில்லை.)			
அதில் கிடைத்த தவிடு ரூபாய்க்கு 8 கலம விதம் விற்றுவந்தது ரூபா	2150	0	0
(1914-ம் வருஷம் ரூ. 1-க்கு 12 கலம் தவிடு விற்கிறது.)			
ஆக வரவு ரூ.	11217	0	0

செலவு விபரம்.

விறகு செலவு 98 வண்டிக்கு, வண்டி 1-க்கு ரூ. 6—0—0க்கு கொஞ்சம் குறைவாக (ஒரு வண்டி அரை டன்)	5879	5	5
(1914-ம் வருஷம் வண்டி 1-க்கு ரூ. 7-10-0 விதம் விற்கிறது.)			
எண்ணெய்ச் செலவு.	122	4	11

மிஷின் தேய்ந்த அல்லது ஒடிந் தவகையில் ப்ரதி ஸர்மான் க்ரயம்	1,140	7	9
(இவைகளும் இப்போது விலை கூடிக்கொண்டு வருகின்றன.)			
வேலையாட்கள் சம்பளம் (மானேஜர் கணக்கு பிள்ளை நீக்கி)	1,984	8	4
மானேஜர் கணக்கு பிள்ளை சம்பளம், குறைந்தது.	540	0	0
(1914-ம் வர்ஷம் போட்டியாலும், ஆள் க்ராக்கியாலும் கூலி சம்பள விகிதங்கள் இரட்டிப்பாகி விட்டன.)			
சாதல் வார் செலவு	208	14	0
மெஷின் மதிப்புக் குறைவு 100-க்கு 10 வீதம்	577	8	0
கட்டிட மதிப்புக் குறைவு. அல்லது கட்டிடரிப்பேர் செலவு	300	0	0
ஆக செலவு	10,753—0—5		

நிகர்லாபம் ரூ. 463-15-7.

இந்த லாபம் முதல் தொகைக்கு 5-வட்டிக்கு சற்றுக் குறைவாய்த் தேறுகிறதாம்.

ஆனால் மேலே காட்டிய கணக்கில் 1914-ம் வர்ஷத்துக்கு இடையிடையே குறிப்பு எழுதியிருக்கிறபடி பார்த்தால் இந்த வட்டி கிடைக்காது; செலவுக்கே வரும்படி வராது; நிச்சயமாய் நஷ்ட மடைவதில் ஸந்தேகமில்லை ; அதிலும் மத்யதரத்தார்களுடைய நிலைமை மிகவும் கஷ்டமானது என்கிறார்.

மிஸ்டர் முத்துக்குமாரஸாமிப் பிள்ளையைப் போலவே சீகாழியிலுள்ள மற்ற மில்காரர்களும் தங்கள் தொழிலின் பரிதாபமான நிலைமையை அறிந்து கொண்டிருக்கிறார்கள் என்று தெரிகிறது. அநேகர் நெல்லுக்குத்தும் தொழிலை விட்டு விட்டு வேறு தொழில் செய்யவும் ஸித்தமாயிருக்கிறார்களாம்.

இவர்கள் இந்த மாஸம் முதல் தேதி சீர்காழியில் ஒரு மீட்டிங்கூடி தங்களுடைய நிலைமையைப்பற்றி ஆலோசனை செய்து பின் வரும் தீர்மானங்கள் செய்திருக்கிறார்களென்று தெரிகிறது.

"தஞ்சை ஜில்லாவில் அளவிற்கு மிஞ்சிய் நெல் குத்தும் யந்த்ரசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டு எல்லோரும் நஷ்டமடையக்கூடிய நிலைமைக்கு வந்து விட்டார்கள்; இனியும் பெருகி முதலைக் கெடுத்துவிடாதபடி தஞ்சை ஜில்லா நெல்யந்த்ர ஸொந்தக்காரர்கள் யாவரும் விரைவில் ஒன்று சேர்ந்து தாங்களாகவும் கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொண்டு நிர்வாக அதிகாரிகள் மூலமாகவும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

2. "இந்த ஜில்லா மில்காரர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து குறைகள் எல்லாவற்றையும் வெளிப்படுத்தி, அதன் பிறகு கைத்தொழில் வர்த்தக ஸம்பந்தமாய் கவர்ன்மெண்டுடன் கலந்து கான்பரன்ஸ் நடத்தி நம் குறைகளையெல்லாம் நிவர்த்திக்க கவர்ன்மெண்டை எதிர் பார்க்கவேண்டும். அதற்கு ஒரு நிர்வாக ஸபை அத்யாவச்யம். மேற்படி ஸபைக்கு பூண்டி மிஸ்டர் வி. எ. வாண்டையார் ப்ரெஸிடெண்டாகவும், மேற்படி மீட்டிங்கின் சேர்மனுயிருந்த சீவளூர் மிஸ்டர் கே. எஸ். ஷண்முக முதலியார் அதற்கு ஸெக்ரெடரியாகவும், சீர்காழி மிஸ்டர் முத்துக்குமாரஸாமி பிள்ளை அதற்கு ட்ரெஷரராகவும் இருக்கவேண்டும்" என்றிப்படித் தீர்மானங்கள் செய்திருக்கிறார்கள்.

இரண்டு மூன்று வர்ஷங்களுக்கு முன்னால் தஞ்சாவூர் ஜில்லாவில் பற்பல விடங்களில் அநேகர் 'ரைஸ்மில்'லுகள் ஸ்தாபிக்க ஆரம்பித்தபோது, இவைகள் வெகு காலம் லாபகரமாய் நடந்து வருவது ஸந்தேகமென்று நாம் 1912-ம் வர்ஷம் மார்ச்சு மாஸத்து ஸஞ்சிகையில் 'தஞ்சாவூர் ஜில்லாவில் நெல் ஆலைகள்'

என்ற வ்யாஸத்தில் குறிப்பிட்டிருக்கிறோம். அதற்கு முன் பதினைந்து வர்ஷகாலமாக கோதாவரி க்ருஷ்ணா ஜில்லாக்களில் நெல்குத்தும் தொழில் நடந்துகொண்டிருந்தது. அவ்விடங்களில ஏராளமான நெல்விளைவதோடு அரிசியை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக்கொண்டுபோக ரெயில்வே வஸதியும், கால்வாய் வஸதிகளும் இருக்கின்றன. தவிர, அந்த ஜில்லாக்களிலுள்ள ரைஸ் மில்லுகளில் தயாராகும் அரிசியை வாங்குவதற்கும் இதர தேசங்களில் வாடிக்கை ஏற்பட்டிருக்கிறது. இவ்வளவு ஸௌகர்யமிருந்தும் அங்கே 200-க்கு மேற்பட்ட மில்லுகள் ஏற்பட்டதால் மில்லுகளுக்கு அநேக மாஸங்கள் வேலையில்லாமல், ஒருவருக்கும் லாபமில்லாமல் போய் அநேகம் ரைஸ்மில் ஸொந்தக்காரர்கள் "இந்த வ்யாபாரத்தில் ஏன் புகுந்தோம்; இப்பொழுதும் யாராவது போட்ட முதலுக்குப் பாதி கொடுப்பதாயிருந்தால் விற்று விடுகிறோம்," என்று கதறுகிறதாகச் சொல்லியிருக்கிறோம். அதே மாதிரியான நிலைமை தஞ்சாவூரிலும் நேர்ந்தது, முன்னால் எதிர்பார்த்த படியே யாயிற்று.

இப்பொழுதாவது மில்லுக்காரர்கள் தங்கள் நிலைமையை யறிந்து இனிமேல் புதுமில்கள் ஸ்தாபிப்பதின் கெடுதியையும், இப்போதுள்ள நிலைமையைச் சீர்திருத்த வேண்டியதின் அவச்யத்தையும் உணர்ந்து கொண்டது ஒரு நல்ல குறிப்பே. அநேகர் தங்கள் எஞ்ஜினைக்கொண்டு புதுத்தொழில்கள் செய்ய ஸித்தமாயிருக்கிறார்களென்று மிஸ்டர் முத்துக்குமாரஸாமிபிள்ளை சொல்வது உண்மையானால் அதைப்பற்றி யாவரும் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவது நல்லது. புதுத்தொழில்களில் மாவரைத்தலையும், வயல்களுக்கு நீரிறைத்தலையும் உதாரணமாகச் சொல்லலாம். இவைகளிலும், இவை போன்ற வேறு தொழில்களிலும் முன்போலப் போட்டி அதிகமாகுமானால் கஷ்டந்தான். இது விஷயத்தில் தொழிலாளிகளான முதலாளிகள் அதிக கவனம் செலுத்தி ஒரு முடிவுக்கு வரவேண்டிய தவச்யம்.

BELL METAL.

வெண்கலம்.

சென்ற மேமாஸம வெண்கலத்தைப் பற்றி ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறோம். இப்போது மணிகள் செய்ய உதவும் வெண்கலத்தின் சேர்மானத்தைப்பற்றி எழுதுகிறோம்.

ஒருபாகம் வெள்ளீயத்துக்கு 3 முதல் 5 பாகம் செம்புசேர்த்து உருக்கினால் மணிகள் செய்யும் வெண்கலம் கிடைக்கிறது. இதைப் பழுக்கக் காய்ச்சி உடனே குளிரவைத்தால் வெண்கலம் ம்ருதுவாக இருக்கும். ஆனால் அதை மறுபடியும் காய்ச்சி மெதுவாய்க் குளிரும்படி செய்தால் அது ரொம்ப கடினமடையும்.

ஸாதாரணமாய் வீட்டிலுபயோகிக்கும் சிறு மணிகளுக்கு செம்பு 2-பாகமும் வெள்ளீயம் 1-பாகமும் சேர்த்தால் போதும். பெரிய மணிகளுக்குத்தான் செம்பு அதிகம் சேர்க்கவேண்டும். செம்பு அதிகம் சேர்த்தால் மணி ரொம்ப ஆழ்ந்த சப்தமுடையதாகவிருக்கும். வெள்ளீயம், இரும்பு, நாகம் ஆகிய இவைகள் கொஞ்சம் சேர்த்தால் மணியின் நாதம் ரொம்ப 'கணீர்' என்றிருக்கும். மணி செய்வதில் அதன் நாதம் நன்றாயிருக்கவேண்டுமானால் ரொம்ப சுத்தமான செம்பைத்தான் சேர்க்கவேண்டும். காரீயம் சிறிதளவு சேர்ந்தாலுங்கூட நாதம் ரொம்ப கெட்டுப்போகும். மணி செய்ய உதவும் வெண்கலத்துக்கு சில சேர்மான விகிதங்கள் பின் வருமாறு:—

(1). செம்பு 39 பாகம், வெள்ளீயம் 11 பாகம்; இதன் நாதம் ரொம்ப உயர்ந்தது.

(2) செம்பு 77 பாகம் வெள்ளீயம் 21 பா

கம், நிமிளை 2 பாகம்; முதலில் சொன்னதை விடக் கொஞ்சம் மட்டம்.

(3) செம்பு 4 பாகம், வெள்ளீயம் 1 பாகம்; நாதம கணீரென்று இருக்கும்.

(4) செம்பு 3 பாகம், வெள்ளீயம் 1 பாகம்; இது கிறிஸ்தவர் கோவில்களில் வேண்டிய மணிகளும், மற்றும் பெரியமணிகளும செய்வதற்கு ஏற்ற அளவாகும.

(5) செம்பு 17 பாகம், வெள்ளீயம் 8 பாகம்: (வீட்டுமணிகள், கைமணிகள் முதலியவைகள் செய்ய).

(6) செம்பு 72-பாகம், வெள்ளீயம் 26½-பாகம், இரும்பு 1½-பாகம், பாரிஸில் சிறிய மணிகள் செய்வதற்கு இந்த அளவுகளை உபயோகிக்கிறார்கள்.

TRADING BY POST.

தபால்மூலமாய் வ்யாபாரம் செய்தல்.

இந்தியாவில் தபால்மூலமாய் வ்யாபாரம் அதிகமாய் நடந்துவருகிறது. இப்படி வ்யாபாரம் செய்வதற்கு வால்யூபேயபிள் ஏற்பாடென்று பெயர். இந்த ஏற்பாட்டில் வ்யாபாரிகள் தங்கள் ஸாமான்களை விலைக்குக் கேட்பவர்களுக்கு அவைகளை தபால்மூலமாய் அனுப்ப, வாங்குபவர்கள் தபால் உத்தியோகஸ்தர்களிடம் பணத்தைச செலுத்தி ஸாமான்களைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். ஸாமான்களின் க்ரயத்துக்காகக் கொடுக்கப்பட்ட பணத்தை தபால்டிபார்ட்மெண்டார் வ்யாபாரிகளுக்குச் செலுத்திவிடுகிறார்கள். இப்படிப்பட்ட வ்யாபாரம் சென்ற வர்ஷத்தில் 11கோடி ரூபாய்க்கு நடந்துவந்தது. 80-லக்ஷம் வால்யூபேயபிள் பாக்கெட்டுக்கள் அதாவது ஸாமான் சிப்பங்கள் (வி. பி. பாக்கெட்டுகள்) தபாலாபீஸுகள் மூலமாக அனுப்பப்பட்டன. இந்த வ்யாபாரம் வெகுவாய் கல்கத்தாவில் தான அதிகம். அங்கே தபாலாபீஸுகளிலிருந்து அனுப்பப்பட்ட ஸாமான்களின ஸங்க்யை 22½-லக்ஷமாகும். இவைகளுக்காக வஸூலிக்கப்பட்ட தொகை 295-லக்ஷம் ரூபாயாகும். பம்பாயில் வ்யாபாரம் அவ்வளவு அதிகமில்லை. அங்கிருந்து அனுப்பப்பட்ட ஸாமான்களின் ஸங்க்யை 12½-லக்ஷமாகும். இவைகளுக்காக வஸூல் செய்யப்பட்ட தொகை 1½-கோடி ரூபாயாகும்.

BUSINESS ENTERPRISE IN INDIA.

இந்தியாவில் வ்யாபார ஊக்கம்.

இந்தியாவில் சென்ற மார்ச்சு மாஸத்தில் அடியில் கண்ட விவரப்படி 53-கம்பெனிகள் ரெஜிஸ்டர் செய்யப்பட்டன.

10	பாங்கிலேவாதேவிக் கம்பெனிகள்	...	24,70,000
5	இன்ஷூரென்ஸ் கம்பெனிகள்	...	1,00,000
1	கப்பலோட்டுங் கம்பெனி	...	20,000
1	ரெயில்வே, ட்ராமவே கம்பெனி	...	35,00,000
1	அச்சிட்டு ப்ரசுரம் செய்யுங் கம்பெனி	...	20,000
20	வ்யாபாரக் கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர)	...	26,60,000
2	பருத்திமில் கம்பெனிகள்	...	18,00,000
1	அரிசிமில் கம்பெனி	...	1,00,000
1	மில், ப்ரெஸ் கம்பெனி (மேலே சொன்னவைதவிர)	...	1,00,000
5	தேயிலைக் கம்பெனிகள்	...	13,50,000
2	நிலக்கரிச் சுரங்கக் கம்பெனி	...	4,75,000
1	தங்கச் சுரங்கக் கம்பெனிகள்	...	6,00,000
1	பனிக்கட்டி செய்யுங் கம்பெனி	...	2,00,000
2	கம்பெனிகள் (மேலே சொன்னவை தவிர)	...	2,20,000
53	மொத்தம்		1,36,15,000

The Educational World

வித்யாவிஷயப் பகுதி.

TO FIND THE DAY OF THE WEEK FOR ANY DATE.

எந்தத் தேதிக்கும் கிழமை கண்டுபிடித்தல்.

ஒரு குறிப்பிட்ட தேதி இன்னகிழமை என்று கண்டுபிடிக்க ஒரு ஸுலபமான வழி இருக்கிறது. அந்த வழியைத்தெரிந்து கொள்ளுமுன் அதற்கு அநுஸரணையான சில முக்ய மான விஷயங்களைக் குறிப்பிடுவது அவசியம்.

ஒரு வர்ஷத்துக்கு 365-நாள்கள் உண்டு; அதாவது 52-வாரமும் அதிகப்படியாக 1-தனி நாளும் இருக்கின்றன. ஆகவே ஒரு ஸாதாரணவர்ஷம் ஒரு குறிப்பிட்டதினத்தில் ஆரம்பமானால் அதற்கடுத்தவர்ஷம் அதற்கடுத்ததினத்தில் ஆரம்பமாகும். உதாரணமாக 1913-ம் வர்ஷம் ஜனவரிமீ 1உ புதன்கிழமையாகும். 1914-ம் வர்ஷம் ஜனவரிமீ 1உ வியாழக்கிழமையாகிறது. 1915-ம வர்ஷம் ஜனவரிமீ 1உ வெள்ளிக்கிழமையாகிறது.

ஆனால் கணக்குப் படிப்பார்த்தால், ஒரு வர்ஷத்துக்கு 365·2422414-நாள்கள் உண்டு. ஸாதாரணமாய் நாம் வர்ஷத்துக்குண்டென்று சொல்லும் 365-நாள்கள்போக பாக்கியாகிய ·2422414 நாளை நான்கு வர்ஷத்துக்குச் சேர்த்தால்($·2422414 \times 4 = ·9689656$,)கிட்டத்தட்ட ஒரு நாளாகிறது. இப்படி அதிகப்படியாகக் கிடைக்கும் ஒருநாளை நான்கு வர்ஷத்துக்கு ஒருதடவை நாலாவது வர்ஷத்தில் அதிகப்படியாக பிப்ரவரிமாஸத்தில் 29உயாகச் சேர்த்து அந்தவர்ஷத்துக்கு லீப் வர்ஷமென்று பெயரிட்டிருக்கிறார்கள். ஆகவே லீப் வர்ஷத்துக்கு 366-நாள் அதாவது 52-வாரமும் இரண்டுநாளும் இருக்கின்றன. ஆகையால் ஒரு லீப்வருஷம் ஒரு குறிப்பிட்டதினத்தில் ஆரம்பமானால் அதற்கடுத்தவர்ஷம இரண்டுநாள் கழித்து ஆரம்பிக்கும். உதாரணமாக 1912-ம் வர்ஷம் ஜனவரிமீ 1உ திங்கள்கிழமை, 1913-ம் வர்ஷம் ஜனவரிமீ 1உ புதன்கிழமையில் வந்தது நான்குவர்ஷத்துக்கு ஒரு லீப் வர்ஷம் வீதம் கணக்கிட்டால் 100-வர்ஷத்துக்கு 25-லீப் வர்ஷமாகிறது. ஆனால் அப்படிப்பார்க்கக்கூடாது. ஒருவர்ஷத்துக்கு. 2422414 நாள் வீதம் 100 வர்ஷத்துக்குக் கணக்கிட்டால் 24·22414 நாள்கள்தான் கிடைக்கின்றன. ஆகவே 100 வர்ஷத்துக்கு அதாவது ஒரு நூற்றாண்டுக்கு 24 லீப் வர்ஷங்கள்தான் உண்டு. நூற்றாண்டின் கடைசி வர்ஷம் நாலாவது வர்ஷமாயிருந்தாலும், அதை ஸாதாரணவர்ஷமாக எண்ணி அதற்கு 365 நாள்களே கொடுத்திருக்கிறது.

ஒரு வர்ஷத்துக்கு 52 வாரங்கள் போகத் தனியாக ஒருநாள் இருக்கிறதென்று முன்னமே சொன்னோம். ஒரு நூற்றாண்டுக்கு அதிலுள்ள 100 வர்ஷங்களுக்கு 100 தனி நாள்களும், 24-லீப் வர்ஷங்களுக்கு 24-தனி நாள்களும் இருக்கின்றன. அதாவது மொத்தம் 124-நாள். இதையும் வாரமாக மாற்றினால் 17-வாரமும் 5-நாளுமாகிறது.

இதன்படி பார்த்தால் 1801-ம் வர்ஷம் ஜனவரிமீ 1உ வியாழக்கிழமையாயிருந்தால் 1901-ம் வர்ஷம் ஜனவரிமீ 1உ அதற்கடுத்த 5வதுநாள் அதாவது செவ்வாய்க்கிழமையாகிறது. இரண்டு நூற்றாண்டுகளுக்கு 10-தனி நாள்கள்; அதாவது 1-வாரமும் 3-நாளும் ஏற்படுகின்றன. மூன்று நூற்றாண்டுகளுக்கு 15-நாள்கள் அல்லது 2-வாரமும் 1-தனி நாளும் ஏற்படுகின்றன.

இனிமேல் 2422414-ஐ 400-ஆல் பெருக்குவோம். பெருக்கிவந்தது 96·89656 அல்லது கிட்டத்

தட்ட 97-நாள்கள். ஆகவே 4-நூற்றாண்டுகளில் 97-லீப் வர்ஷங்கள் உண்டென்று ஏற்படுகிறது. ஆனால் முதல் மூன்று நூற்றாண்டுகளுக்கு 24+24×24=72 லீப் வர்ஷங்கள் கொடுத்தாயிற்று. பாக்கியாயுள்ள 25-லீப் வர்ஷங்களை நான்காவது நூற்றாண்டுக்குக் கொடுத்து விடவேண்டும். ஆகையால் 400-வது வர்ஷம் லீப் வர்ஷமாகும். ஒரு நூற்றாண்டுக்கு வாரங்கள்போக 5-நாள்கள் தனியாக நின்று விடுகின்றனவென்று சொன்னோம். 4-நூற்றாண்டுகளுக்கு (5×4+1) 21-நாள்கள் ஏற்படுகின்றன. இதை வாரமாக்கினால் 3-வாரமாகிறது. ஆகவே நான்கு நூற்றாண்டுகளுக்குள்ள நாள்களை வாரமாக்கினால் மீதிநாள்கள் கிடையா. இதேமாதிரி 8-நூற்றாண்டுகள், 12-நூற்றாண்டுகள், 16-நூற்றாண்டுகள் ஆகிய இவைகளில் தனி நாள்கள் மீதியாயிருப்பதில்லை. 17-வது நூற்றாண்டில் 5-தனி நாள்களும், 18-வது நூற்றாண்டில் 3-தனி நாள்களும், 19-வது நூற்றாண்டில் 1-தனி நாளும் ஏற்படும்.

இனி மாஸங்களைப்பற்றி கவனிப்போம்.

மாதம்	நாள்		வாரம்.	தனிநாள்
ஜனவரி	31	=	4	3
பிப்ரவரி	28	,,	4	0
மார்ச்சு	31	,,	4	3
ஏப்ரல்	30	,,	4	2
மே	31	,,	4	3
ஜூன்	30	,,	4	2
ஜூலை	31	,,	4	3
ஆகஸ்டு	31	,,	4	3
ஸெப்டம்பர்	30	,,	4	2

ஜனவரி௴ முதல் ஸெப்டம்பர்முடிய தனி நாள்களைக் கூட்டினால் 21-நாள்கள் வருகிறது. இது 3-வாரமாகிறது. தனிநாள்கள் மீதி கிடையா. ஆகவே ஸாதாரண வர்ஷத்தில் ஜனவரி௴ 1௳ என்னகிழமையோ அதே கிழமையில்தான் அக்டோபர்௴ 1௳யும் வரும். ஆகவே கிழமை கண்டுபிடிக்கவேண்டிய தேதி அக்டோபர்௴ 1௳க்குப் பிறகு என்றிருந்தால் ஜனவரி௴ முதல் ஸெப்டம்பர்முடிய உள்ள நாள்களைக் கணக்கில் சேர்த்துக்கொள்ளாமல் விட்டுவிடலாம்.

மேலேசொன்ன குறிப்புகளை ஞாபகத்தில் வைத்துக்கொண்டால் பின்வரும் கணக்குகளைப்போடுவது ஸுலபமாகும். 1752-ம் வர்ஷத்தில் இங்கிலீஷ் பஞ்சாங்கத்தில் சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டு நாளதுவரையில் அனுஷ்டானத்தில் இருந்து வருகின்றன. மேலேசொன்ன கணக்குகள் 1752-ம் வர்ஷத்திற்குப் பிறகு உள்ள தேதிகளுக்கே ஏற்கும்.

குறிப்பு:—தனியாக உள்ள நாள்களைக் கூட்டிவந்ததை 7-ஆல் வகுக்கவும். மிச்சமில்லாவிட்டால் ஞாயிற்றுக்கிழமையாகும். மிச்சம வந்தால் அதை திங்கள் முதல்கொண்டு எண்ணிக்கொள்ளவும்.

(1) 1776-ம் வர்ஷம் ஜூலை௴ 4௳ என்ன கிழமை?

17-நூற்றாண்டுகளில் 16-நூற்றாண்டுகளுக்குத் தனிநாள்கள் கிடையா. 17-வது நூற்றாண்டில் நாள்களை வாரமாக்கினால் மீதியாயுள்ள நாள்கள்.— 5

75-வர்ஷங்களுக்கு 75-நாளும்+அவைகளிலுள்ள 18-லீப் வர்ஷங்களுக்கு 18-நாளுமாக 93-நாள்களை வாரமாக்க தனிநாள்கள்.— 2

ஜனவரி௴ 1௳ முதல் ஜூலைமாஸம் 4௳ வரையில் உள்ள தனிநாள்களைச் சேர்த்து, லீப் வர்ஷமானகையால் பிப்ரவரிமாஸத்துக்கு ஒரு நாளும் சேர்க்கவரும் 18-நாள்களை வாரமாக்க வரும் தனிநாள்கள்.— 4

ஆகமொத்தம் தனிநாள்கள்.— 11

இதை வாரமாக்க 1-வாரம், 4-நாள்கள். ஆகவே ஷை தேதி திங்கட்கிழமையிலிருந்து நான்காவதுநாள் அதாவது வ்யாழக்கிழமையாகும்.

(2) விக்டோரியா ராணி ஸிம்மாஸனமேறிய தேதியாகிய 1837-ம்வருஷம் ஜூன்மாஸம் 20உ என்னகிழமை?

18-நூற்றாண்டுகளுக்கு தனிநாள்கள்.— 3

36-வர்ஷங்களுக்கு 36 தனிநாள்களும் அதிலுள்ள லீப் வர்ஷங்களுக்கு 9 நாளுமாக 45-னிலுகளுக்கு முழுவாரம்போக தனிநாள்கள் —3

ஜனவரிமீ 1உ முதல் ஜூன்மீ 20உ வரையில் தனிநாள்கள்.— 3

ஆகநாள்கள் 9.

இதை வாரமாக்கினால் 2-நாள்கள் மீதியாகிறது. ஆகவே ஷை தேதி செவ்வாய்க்கிழமையாகும்.

(3) 1911-ம் வர்ஷம் டிஸம்பர்மீ 12உ என்னகிழமை?

19-நூற்றாண்டுகளுக்கு தனிநாள்.— 1

10-வர்ஷத்துக்கு.— 5

அக்டோபர்மீ 1உ முதல் டிஸம்பர்மீ 12உ முடிய (ஜனவரிமீ முதல் ஸெப்டம்பர்மீ முடிய கணக்கில் சேர்க்கவில்லை).— 3

ஆகமொத்தம் 9

ஆகவே ஷை தேதி செவ்வாய்க்கிழமையாகும்.

1752-ம் வர்ஷத்துக்கு முன்னுலிருந்த பஞ்சாங்கங்களின் கணக்குப்படி ஒரு நூற்றாண்டுக்கு 25-லீப்வர்ஷங்கள் இருந்தன. ஆகவே ஒரு நூற்றாண்டில் தனிநாள்கள் 125. அதாவது 17-வாரமும 6-தனிநாள்களும்.

2	நூற்றாண்டுகளுக்கு	5-நாள்.
3	,,	4 ,,
4	,,	3 ,,
5	,,	2 ,,
6	,,	1 ,,
7	,,	0 ,,

தனிநாள்களை 7-ஆல் வகுக்கவும். மிச்சம் வராவிட்டால் கேட்ட தேதி வெள்ளிக்கிழமையாகும். மிச்சம்வந்தால் வந்த எண்ணை சனிக்கிழமைமுதல் எண்ணிக் கணக்கிடவும்.

(4) 1066-ம் வர்ஷம் அக்டோபர்மீ 14உ என்னகிழமை?

[7-வது நூற்றாண்டில் தனி நாள்களில்லையாகையால் 8,9,10-வது நூற்றாண்டுகளை கவனிக்கவேண்டும்.]

3-நூற்றாண்டுகளுக்கு $6\times3=18$ நாள்; அதாவது 2-வாரம் 4-நாள்கள்.

65-வர்ஷங்களுக்கு $65+16=81=$ நாள்கள் 11-வாரம், 4 நாள்கள்.—

அக்டோபர் 1உ முதல் 14உ வரையில், 14 நாள்கள் 2 வாரம் 0 நாள்

மொத்தம் தனி நாள்கள் 8

இதில் முழுவாரம்போகத் தனிநாள்.—1

ஆகவே ஷை தேதி சனிக்கிழமையாகிறது.

EDUCATIONAL PROGRESS IN MADRAS.

சென்னை ராஜதானியில் கல்வி யபிவ்ருத்தி.

1912-13-ம் வர்ஷத்தில் சென்னை ராஜதானியின் கல்வியபிவ்ருத்தியைப் பற்றிய ரிபோர்ட்டு ஸமீபத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது. 1911-ம் வர்ஷம் டிஸம்பர் மாஸம் நடந்த மகுடாபிஷேக தர்பாரில் வர்ஷந்தோறும் கல்விக்காக இந்தியா முழுவதுக்கும் 50-லக்ஷம் ரூபாய் க்ராண்டு கொடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்ட விஷயம் நமது நேயர்களுக்கு ஞாபகமிருக்கும். அதன்படி கொடுக்கப்பட்ட க்ராண்டில் சென்னைக்கு $8\frac{1}{4}$-லக்ஷம் ரூபாய் கிடைத்தது. இந்த க்ராண்டானது எலிமெண்டரி படிப்பை அபிவ்ருத்தி செய்வதற்கும், மாணவர்களுக்கு ஹோஸ்டல்கள் ஏற்படுத்துவதற்கும், டெக்னிகல் கல்வியையும் கைத்தொழில் கல்வியையும் பரவச் செய்வதற்கும் கொடுக்கப்பட்டது. இதைத் தவிர இந்தியா கவர்ன்மெண்டார் அந்த வர்ஷத்தில் (1912-13) சென்னை யூனிவர்ஸிட்டிக்காக 4-லக்ஷம் ரூபாயும்,

ஹோஸ்டல்கள் கட்ட 4½-லக்ஷம் ரூபாயும் கொடுத்தார்கள். இதைத் தவிர இந்தியா கவர்ன்மெண்டார் வேறு சில க்ராண்டுகளும் கொடுத்திருக்கிறார்கள். இந்த க்ராண்டுகளால் கல்வியில் ரொம்ப முன்னேற்ற மேற்பட்டிருக்கிற தென்று சொல்லப்படுகிறது. வித்யாசாலைகளின் தொகை நூற்றுக்கு 2·6 விதம் அதிகரித்திருக்கிறது. மாணவர்களின் ஸங்க்யை நூற்றுக்கு 6·4-வீதம் அதிக மாயிருக்கிறது. அந்த வர்ஷததில் அதிகப்படியாக 800-பள்ளிக்கூடங்களும் 82,000-மாணவர்களும்இருந்தார்கள். காலேஜில் மாணவர்களின் ஸங்க்யை நூற்றுக்கு 12·3-வீதம் அதிகரித்திருந்தது. ஸெகண்டரி ஸ்கூல்களில் மாணவர்கள் நூற்றுக்கு 7-வீதம் அதிகமாயிருந்தார்கள். எலிமெண்டரி ஸ்கூல்களில் 100-க்கு 8·2-வீதம் அதிகமாக இருந்தார்கள்.

அந்த வர்ஷம் கல்விக்காக பல வகையிலும் செலவழிக்கப்பட்ட தொகை 157-லக்ஷத்து 62-ஆயிரம் ரூபாயாகும், அதற்கு முந்தின 1911-12-ம் வர்ஷத்தில் 135-லக்ஷத்து65-ஆயிரம் ரூபாய் செலவாயிற்று. இதில் மாகாண கவர்ன்மெண்டு65·58-லக்ஷம் ரூபாயும் லோகல் போர்டுகளும் முனிஸிபாலிடிகளும் 13·45-லக்ஷம் ரூபாயும் செலவிட்டன, பாக்கித் தொகை மாணவர்கள் செலுத்தின சம்பளம் முதலியவைகளால் கிடைத்தது.

அந்த வர்ஷம் 339-ஸெகண்டரி ஸ்கூல்கள் இருந்தன. இவைகளில் 106,396-மாணவர்கள் வாசித்துக்கொண்டிருந்தார்கள்.

எலிமெண்டரி கல்வி விஷயத்தில் ரொம்ப முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. கல்விக்காக இந்தியா கவர்னமெண்டார் கொடுத்த க்ராண்டின் உதவியால் 119-முனிஸிபல் ஸ்கூல்களும் 1665-போர்டு எலிமெண்டரி ஸ்கூல்களும் புதிதாக ஸ்தாபிக்கப்பட்டன, பப்ளிக் மானேஜ்மெண்ட் ஸ்கூல்களிலுள்ள போதனுமுறை பயின்ற உபாத்யாயர்களுக்கு 8-ரூபாய் சம்பளமென்றிருந்ததை 10 ரூபாயாக உயர்த்தியிருக்கிறது. மற்ற ப்ரைவேட் ஸ்கூல்களிலுள்ள உபாத்யாயர்கள் சம்பளத்தை உயர்த்துவதற்காக கவர்ன்மெண்டார் அந்த ஸ்கூல்களுக்குப் பண உதவி செய்தார்கள். எலிமெண்டரி ஸ்கூல்களை சீர்திருத்துவதற்காக கவர்ன்மெண்டார் லோகல்போர்டுகளுக்கு 7-லக்ஷம் ரூபாய் க்ராண்டு கொடுத்தார்கள். பெண் பாடசாலைகளின் தொகை 100-க்கு ஏழுவீதமும், அவைகளில் வாசித்த பெண்களின் தொகை 100-க்கு 10-வீதமும் அதிகரித்திருக்கின்றன. ஸ்த்ரீகளுக்காக விசாகப்பட்டணத்தில் ஒரு கவர்ன்மெண்டு ஸெகண்டரி ஸ்கூலும், சென்னையில் ஒரு ஸெகண்டரி ஸ்கூலும் அதோடு ஒரு ட்ரெயினிங் ஸ்கூலும் ப்ராமண விதவை ஹோஸ்டலும ஏற்படுத்தப்பட்டன. சென்னை ஸெகண்டரி ஸ்கூலோடு இந்திய கிறிஸ்தவ ஸ்த்ரீகளுக்கு ஒரு ஹோஸ்டல் ஏற்படுத்துவதாக கவர்ன்மெண்டார் உத்தேசித்திருக்கிறார்கள்.

INDUSTRIAL SCHOOLS.

தொழில் ஸ்கூல்கள்.

சென்னை ராஜதானியில் 39 தொழில்படிப்பு ஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளின் மேற்பார்வையை, கைத்தொழில்களின் டிரெக்டரே பார்த்து வரவேண்டுமென்றும், ஏப்ரல் மாதம் 15-ந்தேதி முதல் அவருடைய வசத்திலேயே ஒப்புவிக்க வேண்டுமென்றும் சென்னை கவர்ன்மெண்டார் உத்தரவு செய்திருக்கிறார்கள்.

The Legal World.
வ்யவஹாரப் பகுதி.

PROMISSORY NOTE.
ப்ராமிஸரி நோட்டு.

வாதி 5 பேர் சேர்ந்து எழுதிக்கொடுத்த ஒரு ப்ராமிஸரி நோட்டின் மேல் ஒரு வ்யாஜ்யம் போட்டார். அந்த ஐந்து பேர்களில் ஒருவர், தாம் பணம் ஒன்றும் பெறவில்லை யென்றும், தாம் மற்றவர்களோடு சேர்ந்து கடனுக்கு உத்தரவாதியாவதாக அந்த நோட்டில் தமது பெயரிருந்தால், மற்றவர்கள் கடனைத் திருப்பிக் கொடுப்பதில் சிரத்தை யெடுத்துக் கொள்வார் களென்று வாதி சொன்னதை நம்பித்தாம் கையெழுத்திட்டதாகவும் ஆகையால் தாம் கடனுக்கு பாத்யப்படுவதற்கில்லையென்றும்சொன்னால் அப்படிச் சொல்லும் வாதத்தை ஏற்றுக் கொள்ளக்கூடாது.

ஜட்ஜ் ஸதாசிவய்யரின் அபிப்ராயம்:—இவருக்குக் கொடுக்கப்பட்ட பணத்துக்காக அவர்களும் வேறு சிலரும் சேர்ந்து பணத்தைத் திருப்பிக் கொடுப்பதாக வாக்களித்தால் அந்த மற்றவர்கள், தாங்கள் பணத்தில் ஒரு பாகமும் அடைய வில்லையாகையால், தாங்களும் பணம் வாங்கினவர்களுடன் சேர்ந்து பணத்தைத் திருப்பிக்கொடுப்பதாக வாக்களித்ததற்கு சட்டப்படி யாதொரு ப்ரதி ப்ரயோஜனமும் அடையவில்லை யென்று அவர்கள் சொல்ல முடியாது. பணத்தைத்திருப்பிச்செலுத்துவதற்கு சேர்ந்து வாக்களித்தவர்களில் எவருக்காவது பணம் கொடுத்திருந்தால் அதுவே எல்லாரையும் கட்டுப்படுத்தப் போதுமானது.

ஜட்ஜ் ஸ்பென்ஸரின் அபிப்ராயம்:—மற்றவர்கள் கடனைத் திருப்பிக்கொடுப்பதில் சிரத்தையெடுத்துக் கொள்வதற்காக தாம் கையெழுத்திட்டதாகச் சொன்னதனாலேயே அவர் மற்றவர்களுக்கு ஒரு ஜாமீனாகிவிட்டார். முக்ய மான கடனாளி பணம் வாங்கியிருப்பதானது ஜாமீனாக இருப்பவரைக்கட்டுப்படுத்தப்போதுமான ப்ரதி ப்ரயோஜனமாகும்.

தாம் கடனுக்கு பாத்யப்பட்டவராகக் கூடாதென்று கடன் கொடுத்த காலத்தில் வாய்ப் பேச்சாக ஒப்பந்தம் செய்து கொண்டிருந்ததாகச் சொல்வது எவிடன்ஸ் ஆக்ட் 92-வது ஸெக்ஷன்படி செல்லாது.

18 மதராஸ் லா டைம்ஸ் 559.

ANCESTRAL PROPERTY AND GIFT OF A SHARE TO A STRANGER.
பிதுரார்ஜித ஸொத்தும் அன்யருக்கு அதில் ஒரு பாகம் கொடுத்தலும்.

மிதாக்ஷரச் சட்டம் அனுஷ்டானமுள்ள ஒரு குடும்பத்தில் ஒரு தகப்பனார் அவிபக்த பிதுரார்ஜித ஸொத்தை பாகம் செய்வது சில ஸமயங்களில் அவருடைய மைனர் புத்ரர்களைக் கட்டுப்படுத்து மென்றாலும், பாக காலத்தில் ஸொத்தில் ஒரு பாகத்தை ஒரு அன்யருக்குக் கொடுத்தால், ஏதோ சில பாத்யதைகளைப் பற்றிய தகரார்களைத் தீர்த்து ஒழிப்பதற்காக இந்த பாகம் கொடுபட்டிருக்கிற தென்றுலொழிய, சரியான ப்ரதி ப்ரயோஜனத்தை உத்தேசித்து ஸொத்து கொடுக்கப்படவில்லை யென்று சொல்லி புத்ரர்கள் ஆக்ஷேபிக்கலாம்.

ஒருவர் மிதாக்ஷர சட்டம் அனுஷ்டானமுள்ள ஒரு குடும்பத்தில் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்பட்டார். அந்தக்குடும்பத்தின் அவிபக்த பிதுரார்ஜித ஸொத்தை பாகம் செய்யும் போது அவருக்கு ஒருபாகம் கொடுக்கப்பட்டது. அவருடைய ஸ்வீகாரம் சட்டப்படி செல்லாதென்று சொல்லி, அந்தக் குடும்பத்தைச் சேர்வந்தவர்கள் அவருக்குக் கொடுத்த ஸொத்தை அவர் திருப்பிக்கொடுத்துவிட வேண்டு

மென்று வ்யாஜ்யம் போட்டால், அந்த வ்யாஜ்யத்தில் சட்டப்படி அவர் அந்தக் குடும்பத்துக்கு ஒரு அன்யராக இருக்கிறார்.

மிதாக்ஷர சட்டம் அனுஷ்டானமுள்ள ஒரு ஹிந்து தகப்பனார் தமது பிதுரார்ஜித ஸொத்தை பாகம் செய்யும்போது அதில் ஒரு பாகத்தை ஒரு அன்யருக்குக் கொடுத்தால், அந்தத் தகப்பனாரின் புத்ரர்கள் அப்படி அன்யருக்குக் கொடுக்கப்பட்ட ஸொத்துத் தங்களுக்குச் சேரவேண்டுமென்று தகப்பனார் மேலும், ஸொத்தை யடைந்த அன்யர்மேலும் வ்யாஜ்யம் போடலாம். ஆனால், அந்த அன்யர் தகப்பனார் மூலமாய் அடைய பாத்யதையுள்ள பாகத்தை அவர் அடையும்படி ஷை ஸொத்துக்களை பாகம் செய்ய புத்ரர்கள் ஸம்மதிக்கும்படி செய்து கோர்ட்டார் ஷை ஸொத்தை புத்ரர்கள்வசம் விடவேண்டுமென்று தீர்ப்பு செய்யலாம். 14 மதராஸ் லா டைம்ஸ் 163.

MOTHER OF A LUNATIC AND MORTGAGE OF PROPERTY.

பைத்யம் பிடித்தவரின் தாயும் அவர் ஸொத்தை அடமானம் செய்தலும்.

ஒரு பைத்யம் பிடித்தவரின் தாயார் 1858-ம் ஹு த்திய 35-வது ஆக்ட் 9,10 ஸெக்ஷன்களின்படி அந்தப் பைத்யம் பிடித்தவருக்கும் அவருடைய ஸொத்துக்கும் கார்டியனாக நியமிக்கப்பட்டார். வாய்தா செலுத்த வேண்டிய பாக்கிக்காக ஜப்திசெய்திருந்ததைத் திருப்புவதற்கு அந்தத் தாயார் தனது மகனுடைய ஸொத்தை கோர்ட்டாரின் உத்தரவை முன்னாடி பெற்றுக் கொள்ளாமலே அடமானம் செய்தால் அப்படி அடமானம் செய்தது செல்லாது. தாயார் ஷை ஆக்டின்படியேயன்றி தாம் தமது புத்ரனுக்கு க்ரமமான கார்டியனாவரெனவும், ஸொத்தை அடமானம் செய்ததானது மகனுடையஸொத்தின் நன்மையை உத்தேசித்ததாகு மெனவும் சொல்லி அடமானம் செய்தது ந்யாயமாகுமென்று சொல்ல முடியாது.

ஜட்ஜ் சங்கரன்நாயரின் அபிப்ராயம்:-1858-ம் ஹு த்திய 35-வது ஆக்டானது பைத்யம் பிடித்தவரின் ஸொத்துக்களை பத்ரமாகப் பாதுகாக்கவே செய்யப்பட்டது. கோர்ட்டால் க்ரமமாக நியமிக்கப்பட்ட மானேஜரைத்தவிரவேறு எவராவது அந்த பைத்யம் பிடித்தவரின் ஸொத்தை அடமானம் செய்யவோ, விற்கவோ கூடுமென்றால் ஷை ஆக்டானது பயனற்றதாகும். ஷை ஆக்டின்படியன்றி ஸ்வதாவாக ஷை பைத்யம் பிடித்தவரின் கார்யங்களை கவனித்து வரத்தகுந்தவரை கோர்ட்டார் மானேஜராக நியமித்து, அவரும் அப்படி மானேஜராக இருக்க ஸம்மதப்பட்டால் அவர் ஷை ஆக்டின் நிபந்தனைகளுக்குக் கட்டுப்பட்டவராகிறார்.

14 மதராஸ் லா டைம்ஸ் 489.

USUFRUCTUARY MORTGAGE AND INCREASE IN TAX.

போக்யமும் வரி அதிகமாதலும்.

ஒருவர் தமது வீடொன்றை இன்னொருவருக்கு கடனுக்காக போக்யம் வைத்து, அந்த வீட்டுக்குக் கிடைக்கும் வாடகையில் முனிஸிபல் வரிக்குச் செலுத்தினது போக பாக்கியை வட்டிக்குப்பதிலாக அடைகிறதென்று போக்ய பத்ரத்தில் ஒப்பந்தம் செய்திருந்தார். கொஞ்சகாலத்துக்குப் பிறது முனிஸிபாலிடியில் தண்ணீர் வரி போட்டதால் முனிஸிபாலிடிக்கு போக்யம் வாங்கியிருப்பவர் செலுத்தவேண்டிய வரி அதிகமாயிற்று.

அப்படியானால் ட்ரான்ஸ்பர் அப் ப்ராபர்ட்டி ஆக்ட் 76-வது ஸெக்ஷன்படி போக்யம் வாங்கியிருப்பவர் தான் அந்த அதிக வரியைச் செலுத்தி வரவேண்டும்.

ஜட்ஜ் ஸதாசிவய்யர் அபிப்ராயம்:—அடமானத்தால் வரும் லாபமானது சில ஸமயம் அதிகமாயும் சில ஸமயம் குறைவாயுமிருந்து, 'போக்யம் வாங்கினவர் அப்படி அதிகமாயும் குறைவாயும் ஆகக்கூடிய லாபத்தை வட்டிக்குப்

பதிலாக அடைந்து வந்தால், அவரே அந்த லாபத்திலிருந்து அதிகப்படியாக விதிக்கப் பட்டிருக்கும் வரியைச் செலுத்துவது ந்யாயமாகும்.

போக்யம் வாங்கியிருந்தவர் அந்த வீட்டில் ஒரு தண்ணீர்க்குழாய் வைப்பதற்கும், மரத்தால் தான்யக் களஞ்சியம் கட்டுவதற்கும் செலவு செய்திருந்தால் அந்த தொகையை அவர் போக்யம் வைத்தவரிடமிருந்து பெற முடியாது. ஆனால் ஸொத்துக்குக் கெடுதலேற்படாமல் மேலே சொன்ன களஞ்சியத்தை அப்புறப்படுத்திக்கொள்ள போக்யம் வாங்கினவருக்கு பாத்யதையுண்டு.

15 மதராஸ் லா டைம்ஸ் 374.

FORFEITURE OF DEPOSIT.

டிபாஸிட் பணத்தை இழந்து விடுதல்.

ப்ரதிவாதி வாதியாகிய வேலூர் தாலூக்கா போர்டுடன், சந்தையில் வரிப்பணம் வஸூல் செய்வதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டுமுன் பணமாக ரூ 36—2—8 டிபாஸிட் செய்தார். மாஸாமாஸம் சந்தைப் பணத்தை குறிப்பிட்ட தேதியில் ப்ரதிவாதி கொடுக்கத்தவறிப் போனதின்மேல், தாலூகாபோர்டார் சந்தையில் வாடகை வஸூல் செய்யும் பாத்யதையை மறுபடியும் வேறொருவருக்கு விற்று, அப்படி விற்றதனால் ஏற்பட்ட நஷ்டத்தை ப்ரதிவாதி செலுத்த வேண்டுமென்றும், ப்ரதிவாதி டிபாஸிட் பணத்தை இழந்து விடவேண்டுமென்றும் ப்ரதிவாதி மேல் வ்யாஜ்யம் போட்டார்கள். ப்ரதிவாதியும், தாலூகா போர்டாரும் செய்துகொண்ட உடன்படிக்கைப் பத்ரத்தில் மறுவிற்பனையால் நேரக்கூடிய நஷ்டத்தை ப்ரதிவாதி செலுத்தவேண்டுமென்றும், டிபாஸிட் பணத்தை யிழந்துவிட வேண்டுமென்றும் கண்டிருந்தது.

கீழ்க்கோர்ட்டார் மறுவிற்பனையால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு மாத்ரம் தீர்ப்புச் செய்தார்கள்.

அதன்மேல் தாலூகாபோர்டார் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்ததில் ஹைகோர்ட்டார் மறு விற்பனையால் ஏற்பட்ட நஷ்டத்தில் டிபாஸிட் பணம் போக பாக்கியிருக்கக் கூடிய தொகை தான் வாதிக்குக் கிடைக்குமென்று தீர்ப்புச் செய்தார்கள்.

14 மதராஸ் லா டைம்ஸ் 551.

EXPARTE DECREE AND SERVICE OF NOTICE.

எக்ஸ்பார்டி டிக்ரியும் நோடீஸ் ஸர்வு செய்தலும்.

ப்ரதிவாதிமேல் வாதி போட்ட ஒரு வ்யாஜ்யத்தில் கோர்ட்டார் வாதிக்கு ஸாதகமாக எக்ஸ்பார்டி டிக்ரி செய்தார்கள். அந்த வ்யாஜ்யத்தில் ப்ரதிவாதிக்கு நேராக நோடீஸ் ஸெர்வ் செய்யப்படாமல் அவருடைய குமாஸ்தாவுக்கு நோடீஸ் ஸெர்வ் செய்யப்பட்டது. அந்தஎக்ஸ்பார்டி டிக்ரியை ரத்து செய்ய ப்ரதிவாதி வ்யாஜ்யம் போட்டால், குமாஸ்தாவுக்கு நோட்டீஸ் ஸெர்வ் செய்தது ஸி. ப், கோ. ஆர்டர் 9-ரூல் 13-படி செல்லத்தக்கதென்று வாதி ரூபிக்க வேண்டும். 5-வது ஆர்டர் 12, 13-வது ரூல்களில், நோடீஸை, நேரில் ப்ரதிவாதிக்காவது அல்லது நோடீஸை வாங்கிக்கொள்ள அதிகாரம் பெற்ற அவருடைய ஏஜெண்டுக்காவது, வ்யாபாரம், தொழில் ஆகிய இவைகள் ஸம்பந்தமான வ்யாஜ்யங்களில் ப்ரதிவாதி கோர்ட்டின் அதிகார எல்லைக்குள் குடியிராவிட்டால், அவருக்காக அந்தத் தொழில் அல்லது வ்யாபாரம் நடத்திவரும் அவருடைய ஏஜெண்ட் அல்லது மானேஜருக்காவது நோடீஸை ஸெர்வ் செய்ய வேண்டுமென்று கண்டிருக்கிறது.

குமாஸ்தாவுக்கு நோடீஸ் ஸெர்வு செய்வது ஷை ரூல்களின் நிபந்தனைகளுக்கு ஒத்ததாக இராததால் எக்ஸ்பார்டி டிக்ரியை மாற்றிவிட வேண்டும்.—14 மதராஸ் லா டைம்ஸ் 535.

WIFE'S MAINTENANCE AND CREDITOR'S ATTACHMENT.

மனைவியின் ஜீவனம்சமும், கடன் கொடுத்த வர் ஜப்தி செய்தலும்.

ஒரு ஹிந்துஸ்த்ரீ ஒரு அவிபக்த ஹிந்துக்குடும்பத்தில் மானேஜராக இருக்கும தனது புருஷன்மேல் ஜீவனம்சத்துக்கு வ்யாஜ்யம் போட்டு டிக்ரீ வாங்கிக்கொண்டாள். இந்த ஜீவனம்சம் குடும்ப ஸொத்துக்களிலிருந்து கொடுக்கும்படியாகத் தீர்ப்பாயிற்று. இந்த டிக்ரீக்கு முன்னால், புருஷனுக்குக் கடன் கொடுத்திருந்த ஒருவர் கொடுபடவேண்டிய கடனுக்காக அதே ஸொத்துக்களை ஜப்தி செய்திருந்தார். ஜீவனம்ச டிக்ரீக்குப் பிறகு ஷை கடனுக்காக ஸொத்துக்கள் விற்கப்பட்டன. இந்த ஸொத்துக்களுக்கு யாருக்கு முனபாத்யதை யுண்டென்றால் கடன் கொடுத்தவரைவிட அந்த ஹிந்து மனைவிக்குத்தான் முன்பாத்யதை அதிகமாக இருக்கிறது.

மதராஸ் ஹைகோர்ட், 1912ஹு எஸ். ஏ. நம்பர் 1270.

ADOPTION BY WIDOW.

விதவை ஸ்வீகாரம் செய்துகொள்வது.

மிதாக்ஷா சட்டம் அனுஷ்டானமுள்ள ஒரு அவிபக்த ஹிந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் ஸந்தானமில்லாமல் இறந்துபோனார். இறந்து போவதற்குமுன் ஒரு புத்ரனை ஸ்வீகாரம் செய்துகொள்ளத் தமது மனைவிக்கு அதிகாரம் கொடுத்திருந்தார். அதன்படியே விதவை ஒரு பையனை ஸ்வீகாரம் செய்துகொண்டாள். கொஞ்சகாலத்துக்கெல்லாம ஸ்வீகார புத்ரன் ஸந்ததியில்லாமல் இறந்துபோய் விட்டான். அவனது மனைவி அவனுக்குப் பிறகு உயிரோடிருந்தாள். அப்படியானால், தகப்பனுடைய விதவை அவருக்காக இரண்டாவது தடவை ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளக் கூடாது.

RIGHT OF APPEAL.

அப்பீல் செய்ய பாத்யதை.

அநேகம் பேர் கலகம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒரு ஸெஷன்ஸ் கோர்ட்டால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப் பட்டார்கள். அவர்களில் சிலருக்குக் காவலும், மற்றவர்களுக்கு அபராதம் மாத்ரமும் விதிக்கப்பட்டன. இதில் 50-ரூபாய்க்குக் குறைவான அபராதம் விதிக்கப்பட்டவர்களுக்கு அப்பீல் செய்ய பாத்யதை கிடையாது.

WRONG DESCRIPTION OF PARTY'S NAME AND LIMITATION.

பார்ட்டியின் பெயரைத் தப்பாய் எழுதுதலும் காலாவதியும்.

ஒருவாதி ப்ரதிவாதிமேல் வ்யாஜ்யம் செய்ய எண்ணியிருந்து, ப்ராதில் ப்ரதிவாதியின் பெயருக்கு பதிலாக இன்னொருவர் பெயரை எழுதிப் பிறபாடு ப்ரதிவாதியின் பெயரை சரியாயெழுதி ப்ராதை மாற்றி எழுதுவதற்கு கோர்ட்டில் மனுப்போட்டால் கோர்ட்டார் ப்ராதை மாற்றும்படி உத்தரவு செய்யலாம். ஆனால் எந்த ப்ரதிவாதிமேல் வ்யாஜ்யம போடவேண்டுமோ அவர்மேல் போடாமல் வேறு ஒருவர்மேல் வ்யாஜ்யம் போட்டு, பிறகு ப்ராதில் பெயரைமாற்ற வேண்டுமென்று கேட்டால், மாற்றுமபோதுசரியான ப்ரதிவாதிமேல் வ்யாஜ்யம் போடுவதா யிருந்தால் வ்யாஜ்யம் காலாவதியாகி யிருக்கும்பக்ஷத்தில், அப்படி மாற்ற கோர்ட்டார் இடங் கொடுக்கக்கூடாது.

WAIVING ONE'S RIGHTS.

பாத்யதைகளை விட்டுக் கொடுத்தல்.

ஹிந்து லாவின்படி, பெண்கள் தங்கள் தகப்பனுடைய ஸொத்துக்களை பாகம் செய்துகொள்ளும்போது, ஒருவாக்குப் பிறகு அவருடைய ஸொத்துக்கு மறறவர்களுக்குள்ள பாத்யதையை அவர்கள் (அந்த மற்றவர்கள்) தமக்கு வேண்டா மென்று விட்டு விடலாம்.

எல். பி. ஏ. 254; 1912. மதராஸ் ஹைகோர்ட்.

The Sanitary World.

ஸுகாதாரப் பகுதி

SANITATION IN INDIA.

இந்தியாவில் ஸுகாதாரம்.

சென்ற மேமாஸம் இந்தியாவின் ஸுகாதாரவிஷயமாய் இந்தியா கவர்ன்மெண்டார் ப்ரசுரம் செய்திருக்கும் தீர்மானத்தைப்பற்றி சில விஷயங்கள் எழுதியிருந்தோம். அந்தத் தீர்மானத்தில் க்ஷயரோகம், சிசுமரணம், க்ராம ஸுகாதாரம் ஆகிய இவைகளைப்பற்றி எழுதியிருந்தவைகளை இங்கு எழுதுகிறோம்.

ட்யூபாகுலாஸிஸ் எனனும் க்ஷயரோகமானது இந்தியாவில் முக்யமாய்ப் பட்டணங்களில் அதிகமாக இருந்து வருகிறது. இதைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு சில வைத்யசாஸ்திரிகளை கவர்ன்மெண்டார் நியமிக்கப்போகிறார்கள். ஏற்கனவே செய்யப்பட்டுவந்த சில ஆராய்ச்சிகளால் இந்தியாவில் ட்யூபர் குலாஸிஸானது மாடுகள் மூலமாகப் அதிகமாய் பரவுவதில்லையென்றும், வெகுவாய் மனிதர்கள் மூலமாகவே பரவுகிறதென்றும் தெரியவந்திருக்கிறது, இதுவரையில் செய்த ஆராய்ச்சிகளால் இந்தியாவிலுள்ள மாடுகளுக்கு இந்த வ்யாதி காணுவது அரிதென்று தெரிய வருகிறது. சிலமாடுகளுக்கு இந்த வ்யாதியிருந்தாலும், இந்தியர்கள் அநேகமாய் எப்போதும் பாலைக்காய்ச்சியே குடிப்பது வழக்கமாகையால் மாடுகளால் ட்யூபா குலாஸிஸ் ரோகம் மனிதர்களுக்குள் பரவுவது அரிது.

ட்யூபர்குலாஸிஸ் பரவுவதற்கு முக்ய காரணம் ஜனங்கள் குடியிருக்கும் வீடுகள் ரொம்ப நெருக்கமாயும், சுத்தமான காற்று இல்லாமலும், வெளிச்சம் குறைவாயும் இருப்பதே. இந்தக் குறைகளை நீக்கிவிட்டால வ்யாதி வருவது அநேகமாய்த் தடைபடடுப்போகும்.

சிசு மரணம்.

இந்தியாவில் சிசுமரணம் ரொம்ப அதிகமாயிருக்கிறது. 1911-ம் வர்ஷத்தில் 4,752,152 ஆண்குழந்தைகளும் 4,457, 551 பெண்குழந்தைகளும் பிறந்தன. அவைகளில் 1,016, 823 ஆண்குழந்தைகளும், 873,677 பெண் குழந்தைகளும் இறந்து போயின. அதாவது பிறந்த குழந்தைகளில் 5-ல் ஒரு பாகம் பிறந்த முதல் வர்ஷத்திலேயே இறந்து போய் விட்டன. இதற்கு முக்ய காரணங்கள் பின் வருமாறு. (1) மலேரியாக்காய்ச்சல் ரோகவும் தாய் மூலமாகவும் குழந்தைக்கு உண்டாவது. (2) வீட்டைச்சுற்றிலும் ஸுகாதாரம் குறைந்திருப்பதால் வ்யாதிகள் உண்டாவதும் ஈக்கள் மூலமாய் வ்யாதிகள் ஏற்படுவதும். (3) குழந்தைக்கு ஆகாரம் கொடுக்கவும் அதைப்பாதுகாக்கவும் தாய்க்கு தெரியாமலிருப்பதால் அதற்கு வ்யாதிகள உண்டாவது. (4) ப்ரஸவ காலத்தில் ஆபத்துகள் நேருவதும், அது ஸம்பந்தமான வ்யாதிகள் உண்டாவதும். பின்னால் சொன்ன இரண்டுக்கும் பால்ய விவாகமும், சரியான மருத்வமில்லாமையுமே முக்ய காரணங்களாகும்; சரியான மருத்வ உதவியில்லாததால் குழந்தைகள் நோயடைந்து இறந்து போகின்றன. குழந்தையின் தாய் வ்யாதிப்பட்டு இறந்து போவதனாலோ, தாய்க்குப் பால் நின்று போவதனாலோ குழந்தைக்கு சரியானஉணவில்லாமல் அது இறந்து போவதுமுண்டு. பசும்பால் அகப்படுவதுகஷ்டமாயிருப்பது குழந்தை மரணத்துக்கு முக்யகாரணமென்று சொல்வதற்கில்லை. என்றாலும், பாலின் விலை , அதிகமாகாமல் சுத்தமான பால் அதிகமாக ஜனங்களுக்குக் கிடைத்து

வரும்படி செய்வதைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

க்ராம ஸுகாதாரம்.

க்ராம ஸுகாதார விஷயத்தில் அபிவ்ருத்தி யேற்படுவதற்கு சில தடைகள் இருந்து வருகின்றன. வீடு கட்டு மிடங்கள் ஸுகாதாரக் குறைவாயிருப்பது, க்ராமங்களின் ஜலாதாரங்களை ஜனங்கள் அசுத்தமாக்குவது, வீடுகளை சரியானபடி கட்டாதது முதலியவைகளும், ஜனங்களுடைய பழக்க வழக்கங்களும் ஸுகாதாரத்துக்குத் தடையாயிருக்கின்றன. க்ராம ஸுகாதாரத்தை சீர்திருத்த தக்க வழிகள் இருந்தால், இந்தியா கவர்ன்மெண்டார் பட்டணங்களின் ஸுகாதார விஷயமாக மாகாண கவர்ன்மெண்டுகளுக்குக் கொடுத்திருக்கும் க்ராண்டுகளில் ஒரு பாகத்தை க்ராம ஸுகாதாரத்துக்காகச் செலவழிக்கலாமென்று இந்தியா கவர்ன்மெண்டார் மாகாண கவர்ன்மெண்டுகளுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். பெரும்பாலும் விவஸாயமே முக்ய தொழிலாயுள்ள இந்த தேசத்தில் க்ராம ஸுகாதாரத்தை கவனிக்கவேண்டியது ரொம்ப அவசியமென்பதை கவர்ன்மெண்டார் அறிந்திருக்கிறார்கள். க்ராம ஸுகாதாரத்தில் முன்னேற்ற மேற்பட ஜனங்களின் கூட்டுறவு அவச்யம் வேண்டும். மேலும் ஸுகாதாரத்தை கவனிப்பதற்கு தக்க பயிற்சியில்லாதவர்களைக் குறைந்த சம்பளத்தில் நியமிப்பது ரொம்ப கெடுதலென்பதை கவர்ன்மெண்டார் தெரிந்து கொண்டிருக்கிறார்கள்,

க்ராம ஸுகாதார விஷயமாய் கவர்ன்மெண்டார் சில விஷயங்கள் தெரிவிக்கிறார்கள்.

(1) ஸாதாரண வ்யாதிகளைப்பற்றிய விஷயங்களை ஜனங்களுக்கு கற்பிக்க சுற்றித்திரியும் மருந்துச்சாலைகள் ரொம்பவும் உபயோகமாகும். இவைகளைச் சேர்ந்த ஸப் அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களுக்கு ஸுகாதார விஷயங்களைக் கற்பிக்கவேண்டும். இவர்கள் நல்ல வைத்யர்கள் என்பதை க்ராமவாஸிகள் அறிந்துகொண்டு விட்டால், பிறகு இந்த வைத்யர்கள் ஸுகாதாரவிஷயமாய்ச் சொல்லும் புத்திமதிகளை க்ராமவாஸிகள் ஏற்று அதன்படி நடப்பது ஸுலபமாகும்.

(2) க்ராமங்களின் ஜலவஸதியைச் சீர்திருத்துவது ரொம்ப முக்யமானது. கிணறுகளை பெர்மாங்கனேட் அப் பொடாஷ் மருந்து போட்டு சுத்திசெய்வதால் ரொம்ப நன்மைகள் உண்டாகியிருக்கின்றன. இந்தியாவின் பல இடங்களில் குழாய்க்கிணறுகள் தோண்டி அவைகள் எவ்வளவு தூரம் ஸாதகமுள்ளனவென்பதை பரீக்ஷித்து வருகிறார்கள். இந்தக் குழாய்க்கிணறுகளை பள்ளிக்கூடங்களிலும் சந்தைகளிலும், ஹாஸ்பிடல்களிலும், ஆபீஸுகளிலும் உபயோகிக்கலாம்.

(3) அநேக மாகாணங்களில் முக்யமாய் சென்னை ராஜதானியில் வில்லேஜ் யூனியன்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளிடம் ஸுகாதாரத்துக்காக சிறிய தொகைகள் க்ராண்டாகக் கொடுத்து வருகிறார்கள். இதனால் ஜனங்களிடத்தில் ஸுகாதார விஷயமாய்ப் பேசுவதும் விசாரணை செய்வதும் அதிகரித்து வருகின்றன. இந்த ஏற்பாட்டை மற்ற விடங்களிலும் அநுஸரித்து வரலாம்.

(4) சில ஜில்லாக்களில் க்ராமங்களிலுள்ள மருத்வச்சிகளுக்குப் பணஉதவிசெய்து ஹாஸ்பிடல்களில் போய் மருத்வ வேலையில் பழகும்படி அவர்களைத் தூண்டுகிறார்கள். இதனால் சிசுமரணமும் குழந்தை வ்யாதிகளும் குறையக்கூடும்.

DRINKING WATER.

குடிநீர்.

நாம் குடிப்பதற்கும் நமது உணவுகளைச் சமைப்பதற்கும் முக்யமாய் சுத்தமான ஜலம்

வேண்டுமென்பதையும், மற்ற உபயோகங்களுக்கு சுத்தமான ஜலம் கிடைக்காத பட்சத்தில் மற்ற ஜலத்தையும் ஒருவாறு உபயோகிக்க வேண்டிவருகிறதென்பதையும் யாவரும் அறிந்திருப்பார்கள்.

நாம் உட்கொள்ளும் நீர் பரிசுத்தமாயில்லாத காரணத்தால் அஜீர்ணம், மலபந்தம், வயிற்றுக்கடுப்பு, வாந்திபேதி, விஷஜ்வரம், நரம்புச்சிலந்தி, சொறிசிரங்கு முதலிய பலவித நோய்கள் உண்டாகின்றன. ஆகையால் நாம் உட்கொள்ளும நீர் எவ்வாறு இருக்கவேண்டுமென்பதை விசாரிப்போம்.

பல வைத்யர்கள் ஏற்படுத்திய சித்தாந்தப்படி நாம் குடிக்கும் ஜலத்தின் தன்மை சிலவுண்டு. அவையாவன: (1) சுத்தஜலம் பளிங்குபோல் தெளிவாயிருக்கும். கையில் அள்ளினால் அதற்கோர் நிறமில்லாததாகக் காணப்படும். பால்போல் வெண்மையான நீர் என்று புகழ்ந்து பேசும் நீர் சுத்தஜலமல்ல. (2) நல்ல ஜலத்துக்கு ஒருவித சுவையுமில்லை. இளநீர்போல் தித்திப்பான நீர் நல்லஜலமல்ல. (3) நல்ல ஜலத்திற்கு ஒருவித மணமுமில்லாமல் இருக்கும். (4) அதில் நற்காற்று ஸம்பந்தித்திருக்கவேண்டும்

இனி ஜலத்தை எவ்வாறு சுத்தப்படுத்திக் குடிக்கலாம் என்பதைப்பற்றிக் கூறுவோம்

ஜலத்தைக் காய்ச்சிக்குடித்தல்—ஜலத்தை நன்றாய்க் கொதிக்கவைப்பது நோயைவிளைவிக்கும் பாக்டீரியா என்று சொல்லப்படும் பூச்சிகள் ஜலத்திலிருக்குமாயின் அவைகளைக் கொல்லும பொருட்டே. அநேகர் தண்ணீரை வெதுவெதுப்பாய்ச் சுடவைத்துக் குடிக்கிறார்கள். அதிலே ஒருவித ப்ரயோஜனமுமில்லை. நன்றாக உலைநீர்போல் தண்ணீரைத் தளதளவென்று பொங்க விட்டு இறக்கி ஒரு பானையில் துணிபோட்டு வடிகட்டி குளிரவைத்து அருந்துவதால் குணமுண்டு. சாக்கு என்றுசொல்லப்படும் கல் சுண்ணாம்பு சேர்ந்திருப்பதால் கடினமான ஜலத்தைக் கொதிக்கவைத்தால் அது ம்ருதுவான ஜலமாகும். ஜிப்ஸம் என்று சொல்லப்படும கல்சுண்ணாம்பு கலந்தநீரைக் கொதிக்கவைக்கையில் கொஞ்சம் ஸோடா மாவுபோட்டால்தான் அது ம்ருதுவான ஜலமாகும். ஜலத்தின் விஷகுணங்கள் நீங்க, நமது நாட்டு வைதயமுறைப்படி மலேஜ்வர முதலிய நோய்கள் உண்டாகும் இடங்களில் ஜலத்தில் சுக்கு, மஞ்சள், பனங்குருத்து இவைகளைத் தனியாகவாவது சேர்த்துப்போட்டாவது வெந்நீராகக் காய்ச்சி வடிகட்டி அருந்துவது மிகவும் நல்லது. இதைச் சில ப்ரஸித்த ஆங்கிலேய வைத்யர்களும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஏதாவது ஒரு ஸந்தர்ப்பத்தில் கெடுதலான ஜலத்தை நாம் குடிக்கும்படி நேரிட்டால் அந்த ஜலத்தில் படிக்காரம், கசப்புவாதங்கொட்டை, மாம்பருப்பு முதலிய துவர்ப்புள்ள வஸ்துகள்போட்டு காய்ச்சினால் ஜலத்தின் அழுக்கு அடியில் படிந்துவிட ஜலம் தெளிவாகும. இப்படிக் காய்ச்சிக்குடித்தால் ஜலத்தின் தீமைமுற்றிலும் அகற்றப்படுகிறதென்றும், அதனால் வெகுநன்மையென்றும் ஆங்கிலேய வைத்யர்கள் சொல்லுகிறார்கள்.

ஜலத்தை வடிகட்டுதல்—ஜலத்தை வடிகட்டும் கருவிகள் பலவுண்டு. அவைகளை விலைக்கு வாங்கிக்கொள்ளலாம். ஆனால் ஏணிப்பானை வடிகருவி நாம்களுவில் செய்துகொள்ளலாம். இதுதான் ஸாதாரணமாய் ஜனங்கள் அதிகமாய் உபயோகிக்கும் வடிகட்டும் கருவி. அதாவது, மரத்தாலோ அல்லது மூங்கிலாலோ முக்காலி நாட்டி அதில் மூன்றுபானைகள் வைக்க வேண்டும். முதலிரண்டு பானையின் அடியில் மூன்று துளைவிட்டு மேற்படியிலுள்ள பானையில் சுத்தமான மணல் பாதிபானை நிறையப் போட்டு சட்டியால் மூடிவிடவேண்டும். நடுப்படியிலுள்ள இரண்டாவது பானையில் பாதிவரை அடுப்புக்கரிபோட்டு த்வாரமுள்ள கண்

சட்டியால் மூடிவிடவேண்டும். கீழ்ப்படியி லுள்ள வெறும்பானையை கண்சட்டியால் மூடி மேல்பானையில் ஜலத்தை ஊற்றினால், அது மணலில் சுவறி த்வாரங்கள் வழியாய் இரண்டாவது பானையில் விழுந்து கரியில் சுவறி, பின்பு மூன்றாவது பானையாகிய அடிப்பானையில் விழும். இந்த ஜலத்தைக் குடிப்பதற்கும் உபயோகிக்கலாம். வடிகட்டுவதால் எல்லாவித அசுத்தமும் நீங்காததால் ஏணிப்பானையில் விடுவதற்கு முன் ஜலத்தை நன்றாய்க்கொதிக்க வைத்து வார்த்து அதிலிருந்து மூன்றாவது பானையில் இறங்கும் ஜலத்தைப் பரிசுத்தமான நீராக எடுத்துக்குடிக்கலாம். வாரத்திற்கொரு முறை பானையைக்கழுவி சுத்திசெய்து பானையி லுள்ள மணலையும் கரியையும் புதுப்பிக்க வேண்டும். புதியமணல் புதியகரி அடிக்கடி கிடைக்காத பட்சத்தில் மேற்படிமணலையும் கரியையும் வாரத்திற்கொருமுறையாவது சுத்தமாய்க் கழுவி வெயிலில் போட்டு உலர்த்தி விட்டு பானையில் போட வேண்டும். அப்படிச் செய்யாமல் அதே மணலையும் கரியையும் உபயோகித்து வந்தால், அதனால் ஜலத்தில் விஷம் அதிகரிக்குமேயல்லாது ஜலம் சுத்தமாகாது. பானையைக் கழுவிக்காயவைத்து விட்டுத்தான் பிறகு மணல், கரி இவைகளைப்போட வேண்டும்.—சத்தியவேத பாதுகாவலன்

REMEDIES FOR HEADACHE.

தலைவலிக்கு சிகித்ஸைகள்.

(1) கண்டங்கத்திரி இலைச்சாற்றில் அல்லது கியாழத்தில் எண்ணெய் கலந்து காய்ச்சிப் பூசிவரவும். (2) ஜாதிபத்ரியை உலர்த்தி நஸ்யமிடவும். (3) தாளிசபத்ரியை காடியிலரைத்துப் பூசவும். (4) கொத்துமல்லி விதையை சந்தனத்தோடரைத்துப் பூசவும். (5) திருநீற்றுப் பச்சையை முகரவும். (6) கருஞ்சீரகத்தை வெந்நீரிலரைத்துப் பூசவும் (7) நொச்சியிலைச் சாற்றைப் பற்றுப்போடவும் (8) மூலைப்பாலுடன் குங்குமப்பூவைக் கலக்கி துணியில் நனைத்து நெற்றியில் போடவும். (9) ஓம உப்புடன் கொஞ்சம் கற்பூரத்தை உள்ளங்கையில் தேய்த்து அதிலிருந்து உண்டாகும் தைலத்தை நெற்றி, புருவங்களில் தேய்க்கவும்.—விச்வகர்ம குலோபகாரி.

BATHING AFTER MEALS.

சாப்பாட்டிற்குப்பிறகு ஸ்நானம்.

வயிறு நிரம்ப ஆஹாரமுண்ட பிறகு ஸ்நானம் செய்வது பிசகென்று பலர் சொல்லுகிறார்கள். காரண மென்னவென்றால் :—(1) குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால், சரீரத்தின் ஜீவசக்திகள் (Vital energies) குளிர்ச்சியைப் போக்கி மீண்டும் உடம்பின் மேல்பாகத்தில் சூட்டை ஸ்பாவநிலைமைக்குக் கொண்டுவர முயற்சி செய்கின்றன. (2) உஷ்ண ஜலத்தில் ஸ்நானம் செய்தால், சரீரத்தின் உள்புறத்திலுள்ள ரத்த வோட்டத்தில் பெரும்பான்மையான பாகம் சரீரத்தின் மேல்புறத்தில் பரவி விடுகிறது. இவ்விருவித ஸம்பவங்களாலும் இரைப்பையிலும் குடல்களிலும் ரத்த வோட்டமும், அதனால் சூடும் குறைந்து போய் சரீரத்தின் மேற்புறத்தில் பரவிவிடுவதால் ஆஹாரம் நன்றாய் ஜீரணமாவதில்லை. ஆகையால் சாப்பிட்டபிறகு உடனே ஸ்நானம் செய்வது கெடுதலென்று ஏற்படுகிறது.

WALKING HOME IN THE EVENING.

ஸாயந்திரம் வீட்டுக்கு நடந்துபோவது.

வெளியூர்களிலிருந்து பட்டணங்களுக்கு வந்து பகல் முழுவதும் ரொம்ப வேலை செய்பவர்கள் ஸாயந்திரம் தேகப்பயிற்சி செய்தாற் போலாகட்டுமென்று வீட்டுக்கு நடந்து போவது ரொம்ப கெடுதலென்று ஒரு ப்ரபல டாக்டர் சொல்லுகிறார். அவர்கள் வீட்டுக்கு நடந்து போகாமல் வண்டிகளில் ஏறிப்போக வேண்டுமாம். வண்டிகளின் உள்புறத்தில் உட்காராமல் கூட்டின்மேல் உட்கார்ந்து நல்ல காற்றை ச்வாஸிக்க வேண்டுமாம். இப்படி சீக்ரமாக வீட்டுக்குப் போய் சாப்பாட்டு நேரம் வரும் வரையில் படுத்துக் கொண்டு இளைப்பாற வேண்டுமாம். இப்படிச் செய்யாமல் அநேகர் தேகப்பயிற்சி யென்று சொல்லி தங்களைத் தாங்களே ஆத்மஹத்தி செய்துகொள்ளுகிறார்களென்று அவர் சொல்லுகிறார்.

The Boys' World.

பையன்கள் பகுதி.

THE GENEALOGICAL TREE OF MAN.

BY

P. V. VYASA ROW, KURNOOL.

மனிதனுடைய வம்ச வ்ருக்ஷம்.

ஒருவன் பிறக்க வேண்டுமானால் அவனுக்கு தாய் தகப்பன் என்று இரண்டுபேர்கள் வேண்டும். இவ்விருவர்கள் பிறக்க, 4-பேர்கள் வேண்டும். இந்நான்குபேர்கள் பிறக்க, 8 பேர்கள் வேண்டும். இப்படி ஒருவனுக்கு ஸுமார் முன் 35 தலை முறைகள் வரையில் கணக்குபார்க்கும் போது 68,719,476,736 பேர்கள் பிறந்திருக்கவேண்டும். இப்படியே இதற்குமுன் உலகமாரம்பம் வரைக்கும் எவ்வளவோ பேர்கள் பிறந்திருக்கவேண்டும். இதில் ஒரு ஸங்கதி முக்யமாய் கவனிக்கத்தக்கதாயிருக்கிறது. அது எதுவென்றால், உலகமாரம்பமுதல் இது வரைக்கும் இப்போது உயிருடனிருக்கும் ஒவ்வொருவனுடைய வம்ச வ்ருக்ஷமும் வளர்ந்து வந்திருக்கிறதென்பதுதான்; இதை ஒவ்வொருவரும் கவனித்தால் ஆச்சர்யப் படத்தக்கதாயிருக்கிறது. சும்மா ஆச்சர்யப்பட்டு என்ன ப்ரயோஜனம்? நம்முடைய வம்ச வ்ருக்ஷமானது எக்காலத்திலும் அழிந்து போகாமல் சாச்வதமாயிருக்க வேண்டுமென்றல்லவா நாம் கோரவேண்டும்? தவிர, எப்படி இவ்வளவு காலம் வரை நமது வம்ச வ்ருக்ஷம் வளர்ந்து வந்திருக்கிறதென்பதையும் ஆராய்ந்துப் பார்க்க வேண்டியது அவச்யமல்லவா? அப்படி பார்க்கையில் நம் முன்னோர்கள் காயலா வகையரா இல்லாமல் தேகபலமும் மனோதைர்யமும் உள்ளவர்களாய் இருந்திருக்கிறார்கள் என்பதில் ஸந்தேகமில்லை. தேகபல மில்லாதவர்களாயும் காயலாவாயும் இருப்பவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் வ்யாதியாயும் பலஹீன மாயுமிருந்து நெடுநாள் ஜீவித்திருக்காமல் இறந்து போய் விடுகின்றன. எத்தனையோ வம்ச வ்ருக்ஷங்கள் வாரிஸ் என்னும் கிளைகளில்லாமல் பட்டுப்போயிருக்கின்றன என்பது எல்லோரும் அறிந்தவிஷயமே. ஆதலால் நாம் நம்முடைய தேகத்துக்கு வ்யாதி வாராமலிருக்கும்படி பாதுகாத்துவரவேண்டும், வ்யாதி ஏதாவது ஸ்வல்பம் வந்தாலும் அஜாக்ரதையாயிராமல் உடனே மருந்து சாப்பிட்டு ஸ்வஸ்தப்படுத்திக்கொள்ள வேண்டும். சரியான காலத்தில் சரியான அளவுக்கு தேகத்துக்கு ஆஹாரம் கொடுத்துவரவேண்டும். தேகப் பயிற்சியும் இருக்கவேண்டும். கிடைத்தமட்டும் போதுமென்று த்ருப்தியாயிருக்கவேண்டும். பாவத்துக்கு அஞ்சவேண்டும், தெய்வபக்தி இருக்கவேண்டும். மனோ வ்யாகூலம் என்பது எள்ளளவும் கூடாது. இப்படி நாம் நடந்துகொண்டு நம்முடைய தேகத்தைக் காப்பாற்றி வருவோமானால், நாம் ஸௌக்யமாயும் தேக ஸுகமுள்ளவர்களாயும் மனோ உல்லாஸமுள்ளவர்களாயும் இருப்போமென்பதில் ஸந்தேகமேயில்லை. நமக்குப் பிறக்கும் குழந்தைகளும் அப்படியே தேகபலமுள்ளவர்களாயும் ஸௌக்யமுள்ளவர்களாயு மிருப்பார்கள். நமது வம்ச வ்ருக்ஷமும் பட்டுப் போகாமல் வளர்ந்துகொண்டே யிருக்கும். இதுவுமல்லாமல் ஸ்திரீகளுக்கு 18 வயஸுக்கு மேற்பட்டு 40 வயஸுவரையிலும், புருஷர்களுக்கு 22 வயஸுக்கு மேற்பட்டு 45 வயஸு வரையிலும் பிறக்கும் குழந்தைகளெல்லாம் தேகபலமுள்ளவைகளாகவே யிருக்கும். மற்ற வயதில் பிறக்கும் குழந்தைகள் துர்ப்பலமுள்ளவைகளாகவேயிருப்பது மல்லாமல் வம்ச வ்ருக்ஷத்துக்கும் கெடுதலை யுண்டாக்கும். இவைக

ளெல்லாம் யாவரும் அவச்யமாய் கவனிக்கத் தக்க விஷயங்கள்.

பி. வி. வ்யாஸராவ்.

BACTERIA.

நண்ணிய சிற்றுயிர்கள்.

'பூர்ண சந்திரோதய'த்தின் மே மாஸத்து ஸஞ்சிகையில் நுண்ணிய சிற்றுயிர்களைப்பற்றி ஒரு வ்யாஸம் வெளி வந்திருக்கிறது.

நாம் ச்வாஸிக்கும் காற்றிலும், குடிக்கும் நீரிலும் மிதிக்கும் மண்ணிலும் மிகச்சிறிய, அணுப்போல உருவங்கொண்ட ஜீவகோடிகள் பல இருக்கின்றன. மனித வர்க்கத்தின் வ்ருத்திக்கும் க்ஷயத்திற்கும் இவைகளே பெரும்பாலும் காரணமா யிருந்து வருகின்றன. இவைகளில் சில ஜாதிகள் நாம் ஸௌக்யமாய் வாழ்வதற்கு ஸாதகமாயிருப்பதோடு, நாம் உயிர்வாழ்வதற்கே முக்ய ஆதாரங்களாக இருக்கின்றன. வேறு சில ஜாதிகளோ, நமக்குப் பெருந்துன்பம் விளைவிக்கக்கூடிய ப்ரமாதமான தொத்து வ்யாதிகளுக்குக் காரணமாயிருக்கின்றன.

இவ்வாறு பெருத்த நன்மை தீமைகளைச் செய்யக்கூடிய அபாரசக்தி படைத்த இவைகள் நுட்பமான உயிரணுக்களாகும். இவைகளுக்கு இங்க்லீஷில் பாக்டீரியா என்று பெயர். இவைகளை நாம் வெறுங்கண்ணால் பார்க்கமுடியாது. வஸ்துக்களை ரொம்பப் பெரிதாகக் காட்டக்கூடிய ரொம்ப பலமான பூதக்கண்ணாடியால் தான் பார்க்க முடியும்.

இந்த பாக்டீரியாக்கள் வளர்ந்து பூர்ண அளவைபடைந்த பிறகு இரண்டு அல்லது அதற்கதிகமான பாகங்களாகப் பிரிகின்றன. ஒவ்வொரு பிரிவும் வளர்ந்து அதற்கேற்பட்டுள்ள முழு அளவையடைந்தவுடன் மறுபடியும் முன்போலப் பிரிகிறது. இப்படி ஒவ்வொன்றும் வளர்ந்து பெரியதாகிப் பிரிந்து கொண்டே போகும். இந்த அணுக்கள் வளருவதற்கு உணவுமுதலிய ஸாதனங்கள் ஸௌகர்யமாய் அமைந்துவிட்டால் வெகு வேகமாய் வளர்ந்து பலபாகங்களாகப்பிரிந்து அதிகரிக்கும். தக்க ஸௌகர்யங்கள் இருந்தால் ஒரு பாக்டீரியா 24-மணிநேரத்தில் ஒரு கோடியே 70-லக்ஷம் பாக்டீரியாவாக அபிவ்ருத்தியடையுமாம்.

தேகத்திற்குள் கெடுதல்கள் செய்யும் பாக்டீரியாக்கள் புகுந்தால் தேகத்தில் ஏற்கனவேயிருக்கும் நன்மை செய்யும் பாக்டீரியாக்கள் தீமை செய்யும் பாக்டீரியாக்களுடன் சண்டையிட்டுத்துறத்த முயலும். அப்போது தேகத்தில் ஜ்வரம் ஏற்படும். இந்தச் சண்டையில் தீமை செய்யும் பாக்டீரியாக்கள் தோற்றால் தேகம் கெடாமலிருக்கும். அவைகள் ஜயித்தாலோ தேகத்திற்கு அஸௌக்ய மேற்படும்.

தேகத்திற்குக் கெடுதி செய்யும் ஜீவாணுக்கள் அசுத்தப்பொருள்களிலும, அழுக்கிலும், அழுகும் பொருள்களிலும், இருட்டிலுந்தான் தோன்றி வ்ருத்தியாகின்றன. ஆகையால் கூடியமட்டும் நம்மைச் சுற்றிலுமுள்ள ஸகல பொருள்களையும் சுத்தமாகவைத்தும், அழுக்குகள் குவியவொட்டாமல் அப்போதைக்கப்போது அப்புறப்படுத்தியும், இருள் அடையாமல் செய்தும் வரவேண்டும். இப்படிச் செய்வதால் கெட்ட பாக்டீரியாக்கள் வ்ருத்தி யடையாமல் செய்வது ஸாத்யமாகும். தேகஸௌக மடைவதற்கும் ஸாதகமேற்படும்.

CURE FOR LAZY BOYS.

சோம்பேறிப் பையன்களுக்கு சிகித்ஸை.

ஒரு ப்ரெஞ்ச் டாக்டர் சோம்பேறிப் பையன்களை சுறுசுறுப்பாக்க வழி கண்டு பிடித்திருக்கிறாராம். பள்ளிக்கூடப் பையன்கள் வாசிக்க இஷ்டப்படாமலும் மந்தமாயும் இருந்தால் அவர்களுடைய தேக ஸ்திதி எப்படியிருக்கிறதென்று வைத்யர்களைக் கொண்டு பரீக்ஷிக்க வேண்டுமாம். இப்படிப் பரீக்ஷிப்ப

தால் பையன்கள் மந்தமா யிருப்பதற்குக்கார ணங்கள் வெளியாகக் கூடுமாம். ச்வாஸம் சரியாக விடமுடியாதபடி தேகத்தில் கெடுதல் களிருப்பதாலும், தேகத்தில் ரத்தோட்ட மில் லாமலிருப்பதாலும், மூளையில் உபயோகமற்ற பொருள்கள் வெளிப்போகாமல் தங்கி யிருப்ப தாலும், மூளையிலுள்ள சாம்பல் நிறமான பாகம் குறைந்து போவதாலும் பையன்கள் சோம்பேறிகளா யிருப்பார்களாம். அந்த ப்ரெஞ்ச டாக்டர் 9-வயஸுள்ள அநேகம் பையன்கள் எழுத்துக்கள் கூட படிக்க முடியா தவர்களா யிருக்கக் கண்டு அவர்களைப் பரீ க்ஷித்துப் பார்த்ததில் மேற்கூறிய வ்யாதிக் குறிகள் எல்லாம் அவர்களுக்கு இருந்தன வாம். அப்படிப்பட்ட பையன்களை அடித்துத் தொந்தரவு செய்வதில் ப்ரயோஜனமில்லை யென்று அந்த டாக்டர் சொல்லுகிறார். அவர் களுடைய படிப்பை நிறுத்திவிட்டு திறந்த வெளியில் தேகாப்யாஸம் ஒழுங்காகச் செய் யும்படி செய்கிறார். அப்படி அவர் பல கேஸு களில் பையன்களை தேகாப்யாஸம் பயிலும் படி செய்ததில், பையன்கள் தேக ஸுகமடை ந்து ரொம்ப சுறுசுறுப்பாகி விட்டார்களாம்.

FIGHT BETWEEN A LION AND A TIGER.

சிங்கத்துக்கும் புலிக்கும் சண்டை.

ஸமீபத்தில் ந்யூ யார்க்கிலுள்ள ப்ரான்க்ஸ் ம்ருகக்காட்சிசாலையில் ஒரு சிங்கத்துக்கும் ஒரு புலிக்கும் கடுமையான சண்டை நடந் தது. சிங்கத்துக்கு வயஸு இரண்டாம். அதன் கூடு திறந்திருந்த ஸமயம் பார்த்து அது வெளியே வந்து புலிக்கூட்டிற்குள் நுழைந்தது. நுழைந்ததும இரண்டும் ஒன் றின்மே லொன்று பாய்ந்தன. புலி வங்காளக் காடுகளிலிருந்து பிடிக்கப்பட்ட புலியாம். இர ண்டும் சண்டை யிடுவதை விலக்க வேலைக் காரர்கள் தங்களா லானமட்டும் முயன்றும் முடியவில்லை. அரையணி நேரம் கொடூர மான சண்டை நடந்தது. கடைசியில் புலி சிங்கத்தின் கழுத்தை முறித்துக்கொன்று விட்டது.

SNAILS IN KANDY.

கண்டியில் நத்தைகள்.

ஸிலோனிலுள்ள பேராதனையில் சிற்று யிர் சாஸ்த்ரியாகிய மிஸ்டர் ரதர்போர்ட் என் பவர் கண்டியில் சில நத்தைகளைப் பிடித்து வளர்த்து அவைகளைப் பரீக்ஷித்துப் பார்த்த தில் ஒரு பெரிய நத்தை 282-முட்டைகள் இட்டதாம். நத்தைகள் ஒரு வர்ஷத்துக்கு ஒரு தடவை தான் முட்டையிடுகின்றன. அவைகள் குறைந்தது இரண்டு வர்ஷம் உயி ரோடிருக்கின்றன. அவைகள் ரொம்ப அதிக மாக முட்டையிடுகின்றன வாதலால் அவை கள் வெகு விடங்களில் ரொம்பப் பரவிவிடுகின் றன.

FRESH AIR

சுத்தமான காற்று.

தேகம் ஸௌக்யமாயும் மனஸு ஸந்தோஷ மாயும் இருப்பதற்கு சுத்தமான காற்றைவிட ரொம்ப முக்யமானது ஒன்றுமில்லை. எவ்வள வுக்கு நாம் அதிகமாக சுத்தமான காற்றை உட்கொள்ளுகிறோமோ அவ்வளவுக்கு நமக்கு வைத்தியச்செலவு குறைவுபடும்.

நாம் ச்வாஸிக்கும் ஒவ்வொரு தடவையி லும் நமது ரத்தமானது மாறுபடுகிறது. நல்ல காற்றை ச்வாஸித்தால் ரத்தமானது பரிசுத்த மடைகிறது. கெட்ட காற்றை உட்கொண்டா லோ ரத்தம் கெடுதலடைகிறது.

அறைகளில் நாம் சுவாஸம் விடுவதாலும், விளக்குகள் எரிவதாலும், அடுப்பு எரிவதா லும், அழுக்குத் துணிகளாலும், இன்னும் மற்ற அசுத்தங்கள் இருப்பதாலும் அறைகளி லுள்ள காற்று அசுத்தமடைகிறது.

நாம் ச்வாஸத்தை வெளியில் விட்டு அறை களிலுள்ள காற்றை அசுத்தப் படுத்துவதால் அடிக்கடி சுத்தமான காற்று அறைகளுக்குள்

வந்துகொண் டிருக்கவேண்டியது அவசியமாகும்.

மற்ற அறைகளைவிட படுக்கை யறைகளைப் பற்றித்தான் ரொம்ப கவலை எடுத்துக்கொள்ள வேண்டும். அவைகளில் காய்கறிகள், அழுக்குத்துணிகள் முதலியவைகளை வைத்திருக்கக் கூடாது. படுக்கை யறைகளில ஜன்னல்களைக் கூடியமட்டும் திறந்து வைத்திருக்கவேண்டும். படுக்கை அறையை விட்டு வெளியில் வரும்போது ஜன்னல்களை நன்ருய்த் திறந்துவிட வேண்டும்.

HOW LEOPARDS CATCH MONKEYS.

சிறுத்தைப்புலிகள் குரங்குகளைப் பிடிக்கும்விதம்.

லங்கையில் சில காடுகளில் சிறுத்தைப்புலிகள் குரங்குகளை வேட்டையாடிப்பிடித்துத் தின்கின்றன. இவைகள் வேட்டையாடும் முறை வெகு விநோதமானது. இவைகள் மரங்களிலேறிக் குரங்குகளைப் பிடிப்பதில்லை. குரங்குகள் இருக்கும் மரத்தினடியில் சிறுத்தைப் புலிபோனதும் குரங்குகள் அதைக் கண்டு பயந்து கூச்சலிடுகின்றன. இப்படிச் சத்தம் செய்வதை சிறுத்தைப்புலி கேட்டதும் ஒரு புதரினடியில் படுத்துக்கொண்டு தனதுபற்களை நறநறவென்று கடிக்கிறது. இந்தச் சத்தத்தைக்கேட்டதும் குரங்குகள் அதிகபயமும் நடுக்கமும்கொண்டு கிளைகளில் அங்குமிங்கும் தாவி யோடுகின்றன. இப்படி பயத்தால் தாவியோடும்போது ஏதாவது ஒருகுரங்கு கைதவறிக்கீழே விழுந்துவிடும். உடனே சிறுத்தை அந்தக் குரங்கின்மேல்பாய்ந்து அதைத்தனது குகைக்குத் தூக்கிக்கொண்டுபோய்த் தின்று விடும்.

THE CASPIAN SEA.

காஸ்பியன் கடல்.

இந்தக் கடல் ஆசியா கண்டத்துக்கும் ஐரோப்பாக் கண்டத்துக்கும் மத்தியில் இருக்கிறது. இதைச் சுற்றிலும் தரையிருப்பதால் இது ஏரி என்று சொல்லப்படுகிறது. இதை விடப்பெரிய ஏரி உலகத்தில் வேறுகிடையாது. இது 760-மைல் நீளமும் 115 முதல் 280-மைல் வரையில் அகலமும் உள்ளது. இதன் பரப்பு 1,70,000 சதுர மைலாகும். இதற்குப் பக்கத்தில் கருங்கடல் (ப்ளாக் ஸீ) என்னும் கடல் இருக்கிறது. காஸ்பியன் கடலின் ஜல மட்டம் கருங்கடலின் ஜலமட்டத்துக்கு 84 அடி தாழ்வாயிருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள நதிகளெல்லாவற்றிலும் பெரியதான 'வால்கா' நதி இதில் வந்து கலக்கிறது. இதைத் தவிர வேறு சிறிய நதிகளும இதில் ஸங்கமமாகின்றன.

தற்காலம் இந்தக் கடலின் ஜலம் குறைந்து கொண்டுவருகிறதாகத் தெரிகிறதாம். அதனல் பல துறைமுகங்கள் மேடிட்டுப் போய் விட்டன. அந்தத் துறைமுகங்களில் கப்பல்கள் கரையோரம் வரமுடிவதில்லையாம். காஸ்பியன் கடலிலுள்ள ஜலம் ஸூர்ய உஷ்ணத்தால் நீராவியாகமாறிக் குறைந்து வருவதற்குத்தகுந்தபடி நதிகளில் அதிக ஜலம் வந்து அந்தக் கடலில் வீழ்ந்துகொண் டிருந்தால் அந்தக் கடல் ஜலம் குறைவடையாமலிருக்கும். ஆனல் இப்போது வால்காநதியில் ஜலம் குறைந்துகொண்டு வருகிறதென்றும் அதனல்தான் காஸ்பியன் கடலில் ஜலம் குறைந்துகொண்டு வருகிறதென்றும் சாஸ்த்ர நிபுணர்கள் சொல்லுகிருர்கள்.

A JUVENILE COURT IN CALCUTTA.

கல்கத்தாவில் சிறுவர்களுக்காக ஒரு கோர்ட்.

வங்காள கவர்னமெண்டார் சட்ட விரோதமான குற்றங்கள் செய்யும் 15-வயஸுக்குள் பட்ட சிறுவர்களை விசாரிப்பதற்காக ஒரு ப்ரத்யேகமான கோர்ட்டும், அவர்களை அடைத்து வைக்க தனியாக ஒரு இடமும் கல்கத்தாவில் ஏற்படுத்தி யிருக்கிருர்கள். குற்றம் செய்த சிறுவர்களை விசாரிப்பதற்காக சில ஆனரரி மாஜிஸ்ட்ரேட்டுகள் நியமிக்கப்பட்டிருக்கிருர்கள். இந்தக் கோர்ட்டு கல்கத்தா நகரத்தின் எல்லைக்குள் வஸிக்கும் சிறுவர்களுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

The Ladies' World.

ஸ்த்ரீகள் பகுதி.

TRAINING IN DOMESTIC ECONOMY.

BY

T. P. ANANTHA VAIDYANATHA SIVA.

செட்டாய்க் குடித்தனம் செய்யப் பழகுதல்.

தண்டி கவியால் எழுதி யருளிச்செய்யப்பட்ட தசகுமார சரிதமென்னும் சரித்ரத்தின் ஆறுவது அத்யாயமாகிய மித்ர குப்தனென்பவன் கதையில், அவன் ப்ரும்மராக்ஷஸனுக்குச் சொன்னதாகச் சொல்லப்பட்டிருக்கிற உதாரணக் கதைகளுள் ஒரு இனிய கதை யிருக்கிறது. ஒரு ப்ரபுவினது ஜேஷ்ட்புதல்வனாகிய சக்திகுமார னென்பவன் விவாக ப்ராயத்தை யடைந்திருந்த பொழுது அவனுக்கு வதுவாகவந்த ஒவ்வொரு பெண்ணினிடத்திலும் அரைப்படி நெல்லைக் கொடுத்து அதைமட்டும் உபயோகித்துத் தனக்கு ஸம்ப்ரமான உணவுசெய்து அளிக்கமுடியுமாவென்று அவர்களை கேட்டான். அநேகர் அவனை நோக்கிச் சிரித்துவிட்டு பேசாமல் விடுதிரும்பிப்போய்விட்டார்கள். கொஞ்ச நாட்களில் அவன் தனக்குத் தகுந்த வதுவைத் தேடிக்கொண்டு யாத்ரைசெய்யத் தொடங்கி, தெற்கே காவேரிப்பட்டணத்திற்குள் ப்ரவேசிக்கும்பொழுது, ஸகல ஸௌந்தர்யங்களும் பொருந்திய ஒரு பெண்ணைப்பார்த்து அவள்மீது காதல்கொண்டு அவளை பரீக்ஷிக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் அவளையும் அதே கேள்வியைக் கேட்டான். அதற்கு அவள் வெகு வணக்கத்துடன் 'அதென்ன, ஒரு பெரிய கார்யமா' வென்று சொல்லி அந்த நெல்லை வாங்கிக்கொண்டாள். பிறகு அதை நன்றாக வெயிலிலுலர்த்தி, மிதமாகக் காய்ந்திருக்கும்பொழுது, ஒரு உரலில்போட்டு மிக ஜாக்ரதையுடன் குத்தினாள். ஒரு அரிசிகூட இடிந்து போகாமலும் சிதறிப்போகாமலும் எல்லா அரிசியையும் எடுத்துக்கொண்டு, நெல்லைக் குத்துவதால் கிடைத்த உமி, தவிடு முதலிய ஸாமான்களை பத்ரமாக சேகரித்துத் தன் வேலைக்காரியண்டை கொடுத்து, அவற்றைக் கொண்டுபோய் அவை வேண்டுவோரிடம் விற்று அதனால் கிடைக்கும் காசைக்கொண்டு இரண்டு மண் ஸ்தாலிகளும், அரிசியை பக்வமாக்கப் போதுமான ஒரு சட்டியும், அதிக ஈரமில்லாதவும் அதிகமாக காய்ந்திராதவுமான சில விறகுகளும் வாங்கி வரும்படி ஏவினதும் அவ்வேலைக்காரியும் அப்படியேயென்று விரைவாகச்சென்று அவைகளை வாங்கிக்கொண்டு திரும்பிவந்தாள். இவள் அவ்விறகுகளைக் கொண்டு அடுப்பு மூட்டி, அரிசி அளவுபோல ஐந்துமடங்கு அளவு தண்ணீரைச் சட்டியில் வார்த்து, அது கொதிக்க ஆரம்பிக்கும்பொழுது, நன்றாய்க் களைந்துவைத்திருந்த அரிசியையும் அதில் கொட்டி கொஞ்சநேரத்திற்குள் பக்வமாகிய அன்னத்தை கீழே அடுப்பினின்று மிறக்கி கஞ்சியையும் வடித்தாள். உடனே அடுப்பு விறகுகளை வெளிக்கு இழுத்து அவைகளிலிருந்த கரியைத்தட்டி அடுப்பினுள்ளிருந்த கரித்துண்டுகளுடன் சேர்த்து, வேலைக்காரியண்டை கொடுத்து, அவைகளைக் கொண்டுபோய்த் தட்டானண்டை விற்று, கிடைக்கும காசுக்கு, இரண்டு இலைகளும், சில காய்களும், கொஞ்சம் புளி, உப்பு, நெய் முதலியனவும் வாங்கிவரும்படி அனுப்பினாள். அவளும் சீக்ரத்தில் அவைகளைவாங்கிக்கொண்டு திரும்பிவந்தாள். பிறகு அன்னத்தைச் சட்டியிலிருந்து ஓரிலையிற் கொட்டிவைத்துவிட்டு மறுபடியும் அச்சட்டியில் திவ்யமான ரஸஞ்செய்து ஒரு ஸ்தாலியில் கொட்டிவைத்து

மறுபடியும் அதேசட்டியில் அவனுக்குவேண்டியவளவு சில காய்களையும் பக்வமாக்கி இலையின் ஓர் புறத்தில் எடுத்துவைத்துவிட்டு, பிறகு அதேசட்டியில் அற்புதமான ஸாம்பாரும்செய்து இறக்கினாள். உடனே சக்கிருப்தனை ஒருபக்கம் உட்காரச்சொல்லி, இலையைப் போட்டு, மற்றொரு ஸ்தாலியில் தீர்த்தம் வைத்து, அன்னம் பரிமாறினாள். சக்கிருப்தனும் அதிக த்ருப்தியடைந்து பிறகு அவளையே மனப்பூர்த்தியாக விவாகம்செய்து கொண்டான்.

இந்தக்கதையை நான் ஸமீபத்தில் தான் வாசித்தேன். இதை வாசித்தானதும் இன்னொரு கதை என் ஞாபகத்துக்கு வந்தது.

அது யாதெனில்;—ஆர்லண்ட் என்னும் துரை யொருவருக்கு அதியவச்யமாக கொஞ்சம்பணம் அவஸரமாக வேண்டியிருந்தது. அவர் பல ஸ்னேகிதர்களைக் கேட்டும் கிடைக்காமல், கடைசியாக மிஸ்ஸஸ் க்ரூ என்னும் ஒரு ஸ்த்ரீயைக் கேட்கலாமென்றெண்ணி அவளது க்ரகத்தை நோக்கிச்சென்றார். அவர் அவ்வீட்டு வாசற்படி நுழையும்பொழுதே அம்மாது கீழே கிடந்த உபயோகப்படுத்தியாயிருந்த சில தீக்குச்சிகளை ஒரு பெட்டியில் பத்ரமாக எடுத்துவைக்கக் கண்ணுற்றார். உடனே அவர் அந்தஸ்த்ரீயாவது நமக்குப் பணம் கொடுப்பதாவதென்றெண்ணி வீடு திரும்பத் தொடங்கினார். இருந்தாலும் பார்ப்போம் என்று நினைத்துக்கொண்டு மறுபடியும் அவ்வீட்டையே நாடிச்சென்று அந்தஸ்த்ரீயை அவருக்குத் தேவையாயிருந்த பணமிருந்தால் கொடுக்கும்படி வேண்டினார். அந்தஸ்த்ரீ உடனே சற்றும் தயங்காது வீட்டினுள் சென்று வேண்டிய பணத்தை எடுத்துவந்து அவரிடம் எண்ணிக்கொடுத்தாள். அவர் தீக்குச்சி ஸமாசாரத்தையும் அதனால் அவர் எண்ணின எண்ணத்தையும் அவளிடம் சொல்ல, அவள் சிரித்துக்கொண்டு 'இத்தீக்குச்சி முதற்கொண்டு நான் பத்ரப்படுத்தி உபயோகப்படுத்துவதனால் தான், இப்போது உமக்கு கொடுப்பதற்குப் போதுமான பணம் என்னிடம் தயாராயிருந்தது.' என மறுமொழி கூறினாள். இதைப்போல் நான் படித்திருக்கிறவும் கேட்டிருக்கிறவுமான அநேக சிறுகதைகள் என் ஞாபகத்திற்கு உடனேவந்தன. அக்கதைகளனைத்தையும் எழுதுவதென்றால் பெரிய புராணமா மாகையால் அவைகளுக்கப்பால் எனக்குத்தோற்றின சில தோற்றங்களை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பெண்டிர்களினது புத்தி எவ்வளவு கூர்மை; அவர்களுக்கு உண்டாயிருக்கும் இந்த ஸாமர்த்யங்களனைத்தும எவராலும் கற்பிக்கப்படாமல் இயல்பாகவே அவர்களுக்கு உண்டாகின்றன. இவ்வித்தைகளெல்லாம் புஸ்தகங்களினின்றும் கற்க முடியாதவைகளன்றோ! விலையுயர்ந்த கமலக்கற்கள் வெறும் கரிதானென்பதையும், அவைகளுடன் அடுப்பண்டை போனால் அவை கெட்டுப்போமென்பதையும் புத்தகம் படித்ததனாலேயோ கற்றுக்கொண்டார்கள்? நெய் ஆறினால் அளவு குறைந்துபோமென்பதையும், கொஞ்சம் ஜலம் தெளிப்பதனால் பாலின் பொங்குத லடங்குமென்பதையும், சூட்டின் குணங்களையும் ஸையன்ஸ் புத்தகங்களில் படிப்பதனாலோ கற்றார்கள்? இல்லை, கொஞ்சம் இயற்கையாகவும் கொஞ்சம் பழக்கத்தினாலுமே அவர்கள் இவைகளை யறிகிறார்கள். அப்படியறியவேண்டியதும் மிகவும் முக்யம். வீட்டுச்செலவுகளில் திட்டமாக இருக்கவேண்டுமென்பது புருஷர்களைக் காட்டிலும் ஸ்த்ரீகளுக்கு அதிகமாகத் தெரியவேண்டுமென்பதை ஸ்த்ரீகள் அறியவேண்டும. ஸ்த்ரீகள் தமது வீட்டு திட்டச் செலவுகளாலும் வீட்டை ஒழுங்காக வைத்துக்கொண்டு பாதுகாப்பதனாலும் குழந்தைகளுக்கு நல்லவழிகள் தாங்களே போதிப்பதனாலும் தம்தம புருஷர்களுக்கு எவ்வளவோ லாபம அடைவிக்கலாம்!

டி. பி. அனந்த வைத்யநாத சிவா.

TEACHING MUSIC TO GIRLS.

பெண்களுக்கு ஸங்கீதம் கற்பித்தல்.

தற்காலத்தில் பெண்கள் ஸங்கீதம் கற்றுப் பாடுவதைப்பற்றி 'ஹிதகாரிணி' பத்ரிகை சில குறிப்புகள் எழுதியிருக்கிறது. தற்காலம் நமது பெண்கள் ஸங்கீதத்தில் அபிமானங் கொண்டு வாத்யங்களுடன் வாய்ப்பாட்டை அப்யஸிக்கிறார்கள். ஸங்கீதம் கற்றுக்கொடுப்பவர்களில் சிலருக்கு கண்டம் கிடையாது. அவர்களுக்கு ம்ருதுவாயும் உருக்கமாயும் பாடத்தெரியாது. வாயை அகலத்திறப்பதும், வலிவந்ததுபோல் முகத்தைச் சுளிப்பதும் மூர்ச்சைநோய் கொண்டதுபோல் அவயவ சேஷ்டைகளைக் காட்டுவதும் வாடிக்கையாய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களிடம் பாட்டுக் கற்றுக்கொள்ளும் பெண்கள் அவர்களுடைய அபிநயங்களை அணுவளவும் தப்பாமல் கற்றுக்கொள்கிறார்கள். இதனால் பெண்களின் ஸங்கீதம் ரஸிக்காமல் போகிறது.

அபஸ்வரம், ஸுஸ்வரம் என்று வித்யாஸம் தெரியாத சில தாய்தந்தையர்கள் தங்கள் பெண்களின் பிதற்றல்களைக் கேட்டு ஆனந்தித்து ஸபைகளில் பாடவிடுகிறார்கள். கேட்பவர்கள் தலைவேதனையுடன் வாய்விட்டுக் கூற முடியாமல் மனவில் கோபம் கொள்கிறார்கள்.

ஹிந்து பாலிகைகளுக்கு ஸங்கீதம் கற்றுக் கொடுக்க விரும்புவோர்கள் ஞானமமிந்த ஸங்கீத பண்டிதனை நியமித்துச் சொல்லித்தருவது நன்மை. வித்வான் கிடைக்காவிடில் ஸங்கீதம் கற்பியாமலிருப்பதே மேன்மையாகும். ஆசையை விடமுடியாதவர்கள் ஹார்மோனியத்தில் ஆங்கிலேயர்களைப்போல் புஸ்தக உதவியால் நோட்டுகளை வாசிக்கக் கற்றுக்கொள்வது உசிதம். பலர் பரிஹஸிக்கும்படி பல்லைத் திறந்து, பாடத்தெரியாமல் மனம் வந்தபடி இழுப்பது அறிவுள்ள அங்கனைகளுக்கு அழகல்ல. குரலில்லாத குருவை ஒருபொழுதும் ஏற்படுத்தலாகாது. மஹிஷகண்டத்தையாரே ஸகிப்பவர்?

THE BRINGING UP OF CHILDREN.

குழந்தைகளின் வளர்ப்பு.

குழந்தைகளை சரியானபடி வளர்த்து தக்கபடி போதிக்கும் விஷயத்தில் ஆங்கிலேயரைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் வேறெந்த ஜாதியாருமில்லை. நாமும் குழந்தைகளை அதிக பட்சமாய் ஆதரிக்கிறோமல்லவா? இப்படி நாம் குழந்தைகளைப் பட்சமாய் நடத்த நடத்த குழந்தைகளுக்கு கெட்ட பழக்கங்கள் படுகின்றனவே தவிர ஒழுங்கான பழக்கம் படிகிறதேயில்லை. குழந்தைகளின் ஆரோக்யத்திற்கும், படிப்புக்கும், நடத்தைக்கும் ஆங்கிலேயர் நம்மைக்காட்டிலும் அதிக ச்ரத்தை யெடுத்துக் கொள்ளுகிறார்கள். குழந்தைகளை இளம் ப்ராயத்திலேயே "போர்டிங் ஸ்கூல்" என்று சொல்லப்படும் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பி விடுகிறார்கள். அவ்விடத்தில் நானாவித குழந்தைகள் படிக்கின்றன. தயவு தாக்ஷண்யமென்பது அங்கே கொஞ்சங்கூடக் கிடையாது. பிள்ளைகள் ஏதாவது தப்பு செய்தால் குற்றவாளி எப்பேர்பட்ட பெரிய உத்யோகஸ்தர்களுடைய பிள்ளையாயிருந்தாலும் தண்டிக்கப்படுவான். மேற்படி பள்ளிக்கூடங்களில் படிப்பைக் காட்டிலும் நல்ல நடத்தையே முக்யமாக கவனிக்கப்படுகிறது. பையன்கள் கெட்ட வழிக்கு செல்லாதிருப்பதற்காகவே அநேக கௌரவ உத்யோகஸ்தர்கள் தங்கள் குழந்தைகளை இத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புகிறார்கள். இரண்டாவது, பிள்ளைகள் தகப்பனாருடைய உதவியை ஒருபோதும் கவனியாமலிருக்கும் பொருட்டு அப்பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பப்படுகிறதாகத் தெரிகிறது. இவ்வித பழக்கம் மிகவும் உத்தமமே. ஏனெனில், பிள்ளைகள் பெற்றோர்களோடேயே ரொம்ப காலம் பழகிவிட்டால், பெற்றோர்கள் அப்பிள்ளைகளின் பேரில் வைத்திருக்கும் மிதமிஞ்சிப்போன பக்ஷத்தால் வீணாகக் கெட்டுப் போகிறார்கள்.

குழந்தைகளுடைய உடம்புக்கு எவ்வித உணவு ஒத்துக்கொள்ளுமோ அவற்றை புசிக்கும்படி தாய்மார்கள் வற்புறுத்துகின்றனர். அவ்வித பண்டங்கள் ருசியா யிராவிட்டாலும் குழந்தைகள் வாயில் எவ்விதமாகவாவது திணித்து உண்ணும்படி செய்கிறார்கள்.

உடை உடுத்திக்கொள்வதில் ஆங்கிலேய குழந்தைகளுக்கு அதிக ஆவல் உண்டு. அவர்களுடைய உடுப்பு அதிக பரிசுத்தமா யிருக்கிறது. உடுப்புகளில் அழகானவைகள் இன்னவை, விலையுயர்ந்தவைகள் இன்னவை என்று பதிவுசெய்யக்கூட குழந்தைகளுக்குத் தெரிகிறதில்லை. ஏனெனில் அப்பேர்ப்பட்ட உயர்ந்த வஸ்துக்களை குழந்தைகள் நினைக்கும்படி பெற்றோர்கள் வைத்துக்கொள்வதில்லை. கடைகளுக்குக்கூட குழந்தைகளை அழைத்துச்செல்வதில்லையாம்.

GALLNUT.

மாசக்காய்.

இக்காய்கள் கசப்பும் துவர்ப்புமான சுவையுள்ளவை. மாசக்காயை சூர்ணம் செய்து, 15 நெல்லெடை வீதம் ஒரு தினத்திற்கு மூன்று வேளை உபயோகித்தால், நாள்பட்ட அஜீர்ணபேதியைப் போக்கும். ஒவ்வொரு வேளையும் இதனுடன் ½ நெல்லெடை அபினியைச் சேர்த்து உபயோகித்தால் கஷ்டஸாத்யமான அதிஸாரமும் நின்று விடுவதுண்டு. மாசக்காயின் சூர்ணம் 30 நெல்லெடை, லவங்கப்பட்டையின் சூர்ணம் 15 நெல்லெடை, இவ்விரண்டையும் சேர்த்து, சிறிது தேன் விட்டு இழைத்து 6 மாத்திரைகளாகச் செய்து, குழந்தைகளுக்கு மேற்கூறிய வ்யாதியில் தினம் இரண்டு மூன்று தடவை கொடுக்கலாம். சீதபேதியில், லவங்கப்பட்டைக்குப் பதிலாக கற்பூரம் கலந்து மேற்படி சூர்ணத்தை அனைவரும் உபயோகிக்கலாம். கற்பூரம் கலந்த மாசக்காய்த்தூளை, ஸ்த்ரீகளுக்கு உண்டாகும் ப்ரதரம் என்கிற பெரும்பாடு ரோகத்தில் விசேஷமாய்க் கொடுக்கலாம். வெள்ளை விழுகிறவர்களுக்கும் மேற்கண்டபடி ஒரு வேளைக்கு 20 நெல்லெடை வீதம் உபயோகிக்கலாம். ஊமத்தை, எட்டிக்கொட்டை, அபினி, நாபி இவ்வித விஷ பதார்த்தங்களால் நேரிடும் கெடுதிகளைப் போக்க, மாசக்காயைக் கஷாயமிட்டுச் சாப்பிடுவது நலம். பல்லீறுகளின் வீக்கத்திலும், நாக்கு தொண்டைகளில் உண்டாகும் புண்களிலும் இக்கஷாயத்தைக் கொப்புளிக்க உபயோகிக்கலாம்.—வைத்திய கலாநிதி.

A GIFT FOR THE IMPROVEMENT OF FEMALE EDUCATION.

பெண்கல்வியின் அபிவ்ருத்திக்காக நன்கொடை.

சென்னையில் ஆனரரி ப்ரெஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட்டாயிருக்கும் மிஸ்டர் பி. வி. க்ருஷ்ணஸாமி செட்டிகாரு ஹிந்து ஸ்த்ரீகளின் கல்வியபிவ்ருத்திக்காக சென்னை கவர்ன்மெண்டார் வசம் 1200 ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார். கவர்ன்மெண்டார் அந்தத் தொகையை வந்தனத்துடன் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

COW'S MILK FOR CHILDREN.

குழந்தைகளுக்குப் பசும்பால்.

குழந்தைகளுக்குக் கொடுக்கும் பசும்பாலை மெதுவாய் அடுப்பை எரியவிட்டு அரைமணி நேரம் நன்றாய்க் காய்ச்சவேண்டும். பால்வாங்குவதற்கு ஒரு பாத்ரமும் அதைக்காய்ச்சுவதற்கு இன்னொரு பாத்ரமும் கூடாது. பால் வாங்கின பாத்ரத்தையே அடுப்பில்வைத்துக் காய்ச்சவேண்டும். பாலைக்காய்ச்சின பிறகு மூடியே வைத்திருக்கவேண்டும். திறந்துவைத்திருந்தால் ஆகாயத்திலுள்ள க்ருமிகள் பாலைக் கெடுத்துவிடும்.

Biography.

ஜீவ்ய சரித்ரம்.

PANDIT MADAN MOHAN MALAVIYA.

பண்டித மதன்மோஹன் மாலவ்யா.

ஸ்ரீகாசியில் ஹிந்து யூனிவர்ஸிடி யென்னும் ஸர்வகலாசாலையை ஸ்தாபிக்க முயற்சி செய்பவர்களில் ஒருவராகிய ஆனரபிள் பண்டித மதன் மோஹன் மாலவ்யா வட இந்தியாவிலுள்ள கீர்த்திபெற்ற தேசாபிமானிகளில் ஒருவராவார். அவர் தற்காலம் அல்லஹாபாத்தில் ஒரு வக்கீலாக இருந்து வருகிறார். அவர் காங்க்ரெஸிலும், லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலிலும்தேச நன்மைக்கான பொது விஷயங்களைப் பற்றி மிகவும் ஊக்கத்துடன் உழைத்து வருகிறார். அவர் உயர்ந்த தேசாபிமானமும், எடுத்தகார்யத்தில் மிகுந்த ஊக்கமும், தெளிவான புத்தியும் உள்ளவர்.

மிஸ்டர் மாலவ்யா ரொம்ப கௌரவம் வாய்ந்த ஒரு உத்தம ப்ராமண குடும்பத்தைச் சேர்ந்தவர். அந்தக் குடும்பத்தார்கள் பூர்வீகத்தில் மத்ய இந்தியாவிலுள்ள மாளவ ப்ரதேசத்திலிருந்தவர்கள். அவர்கள் ஸம்ஸ்க்ருத வித்வத்தியில் மிகவும் பெயர் பெற்றவர்கள். அந்தக்குடும்பத்தைச் சோந்தவர்கள் தற்காலம் மிர்ஸா, அல்லஹாபாத்து, காசி ஆகிய இந்த இடங்களில் வஸித்து வருகிறார்கள்.

மதன் மோஹனருடைய தகப்பனார் ஸம்ஸ்க்ருதத்தில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். ஸ்ரீமத் பாகவதம் முதலிய புராணங்களுக்கு வ்யாக்யானம் செய்வதிலும், அவைகளில் மிகவும் கடினமான பாகங்களுக்கு மிகவும் ஸாமர்த்யமாய் அர்த்தம் சொல்லுவதிலும் ஸமர்த்தரென்று பேர் வாங்கியிருந்தார். அவர் பக்தி மார்க்கமான அநேக க்ரந்தங்கள் ஸம்ஸ்க்ருதத்தில் செய்திருக்கிறார்.

மதன் மோஹனர் 1861-ம் வர்ஷம் டிஸம்பர் மாஸம் 25-தேதி அல்லஹாபாத்தில் ஜனனமானார். அவர் தமது தகப்பனாரின் மூன்றாவது புத்ரராவர். அவர் பால்யத்தில் இரண்டு ஸம்ஸ்க்ருத பாடசாலைகளில் கல்வி பயின்று வந்தார். அதற்குப்பிறகு அவர் அல்லஹாபாத்து 'ஜில்லா பள்ளிக்கூடத்தில்' படித்து, 1879-ம் வர்ஷத்தில் என்ட்ரன்ஸ் பரீக்ஷையில் (மெட்ரிகுலேஷன் பரீக்ஷை) தேறிப்பிறகு ம்யூர் ஸென்ட்ரல் காலேஜில் சேர்ந்து வாசித்தார். 1881-ம் வர்ஷத்தில் எப். ஏ. பரீக்ஷையிலும், 1884-ம் வர்ஷத்தில் பி. ஏ. பரீக்ஷையிலும் தேறினார்.

அவர் குடும்பம் அப்போது ரொம்ப பணக்காரக் குடும்பமல்ல. அவருக்கு ஏற்கனவே கல்யாண மாகியிருந்தது. அதனால் அவருக்கு எம். ஏ. பரீக்ஷைக்குப் படிக்க இஷ்டமிருந்தும் பணத்தட்டால் முடியாமல் போய், சீக்ரம் உத்யோக மொன்றிலமர முயன்று அல்லஹாபாத்து கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலில் ஒரு உபாத்யாயராகப் போய்ச்சேர்ந்தார். அங்கே அவர் நல்ல பெயர் வாங்கினதோடு, மாணவர்களிடத்தில் மிகவும் அன்பு பாராட்டி வந்து அவர்களால் மிகவும் புகழப்பட்டு வந்தார்.

அந்தக் காலம் முதற்கொண்டே மதன்மோஹன் மாலவ்யா ராஜாங்க விஷயங்களில் கலந்துகொள்ள ஆரம்பித்தார். அவருக்கு அதில் ரொம்ப ஆவலுண்டு. இக்காலத்தில் ஸர்க்கார் உத்யோகஸ்தர்கள் ராஜாங்க விஷயங்களில் கலந்து கொள்ளக்கூடாதென்று கடுமையான நிபந்தனைகளிருப்பதுபோல் அக்காலத்தில் யாதொரு கடுமையான சட்டங்களும் இல்லையென்று தோன்றுகிறது. அவர் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடத்தில் உபாத்யாயரா

யிருந்தபோது காங்க்ரெஸுக்குப் போய் அங்கே பேசுவதுண்டு.

அவர் காங்க்ரெஸ் நடவடிக்கைகளில் கலந்துகொண்டு வந்ததில் அவருடைய ஸாமர்த்யம் வெளிப்படலாயிற்று. அவருடைய ஸாமர்த்யத்தையறிந்த ராஜா ராம்பால்ஸிங் என்னும் தேசாபிமானி தாம் ஸ்தாபித்திருந்த 'ஹிந்துஸ்தானி' என்னும் பத்ரிகைக்கு பத்ராதிபராக இருக்கும்படி மிஸ்டர் மாலவ்யாவைக் கேட்டுக்கொண்டார். மிஸ்டர் மாலவ்யா உபாத்திமைத் தொழில் மிகவும் பரிசுத்தமானதும், மேன்மையானதுமான தொழிலென்று நம்பியிருந்ததால் அவர் அந்த வேலையைவிட்டுவிட முதலில் ஸம்மதப்படவில்லை. ஆனால் பத்ரிகை நடத்துவதும் வித்யா ஸம்பந்தமான வேலைகளில் ஒன்றாகுமென்று அவர் எண்ணிப் பிறகு அந்தப் பத்ரிகையில் சேர்ந்து கொண்டார். அவர் அந்தப்பத்ரிகையை ரொம்ப திறமையுடனும், கண்டபடி எழுதாமல் நிதானத்துடனும் எழுதி வந்தார். ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார்கூட இவருடைய பத்ரிகை பொது ஜனங்களுக்கு மிகவும் உபயோகமானதென்று தங்களுடையமாகாண பரிபாலன ரிபோர்ட்டில் எழுதினார்கள்.

இரண்டு வர்ஷகாலம் 'ஹிந்துஸ்தானி' பத்ரிகையை நடத்தி வந்து பிறகு "இண்டியன் யூனியன்' பத்ரிகைக்கு அதிபராகப்போனார். அதிலும் சிலகாலமே பத்ராதிபராக இருந்தார். ஆனால் அதை விட்ட பிறகுங்கூட பத்ரிகைகளைப்பற்றிய விஷயங்களில் கவனம் செலுத்தி வருவதுண்டு. பத்ரிகைகளால் பொதுஜன அபிப்ராயம் ஏற்பட்டு ஒழுங்குபடுமென்றும், ராஜ்ய நிர்வாகத்துக்கு ரொம்ப நன்மை ஏற்படுமென்றும் அவர் எண்ணியிருந்தார். சில காலத்துக்குமுன்னால் தேச முற்போக்குக்குக் கெடுதலாக உள்ள நவீன எண்ணங்களும் லக்ஷ்யங்களும் தேசத்தில் பரவ ஆரம்பித்தபோது, அவர் அப்படிப்பட்ட எண்ணங்களைப் பரவவிடாமல் தடுக்க பத்ரிகைகளே ஏற்றவையென்று எண்ணி 'அப்யுதயா' என்ற ஒரு மேலான ஹிந்தி பத்ரிகையை ஸ்தாபித்தார். இதோடு நில்லாமல் அவர் இன்னும் சிலருடைய உதவியைக்கொண்டு 'லீடர்' என்னும் இங்க்லீஷ் தினசரி பத்ரிகை யொன்றையும் ஸமீபத்தில் ஸ்தாபித்தார்.

மிஸ்டர் மாலவ்யா 'ஹிந்துஸ்தானி'யின் பத்ராதிபராக இருந்தபோது அவருடைய ஸ்நேகிதர்களில் சிலர் அவரை சட்டத்துக்குப் படிக்கச் சொன்னார்கள். முதலில் சற்று ஸம்மதப் படாமலிருந்தாலும் ஸ்நேகிதர்களுடைய வற்புறுத்துதலால் மனந்திரும்பி, ராஜா ராம்பால் ஸிங்கினுடைய உதவியால் சட்டப் பரீக்ஷைக்கு வாசித்து 1891-ம் வர்ஷத்தில் ப்ளீடர்ஷிப் பரீக்ஷையிலும், 1892-ம் வர்ஷத்தில் எல்.எல்.பி. பரீக்ஷையிலும் தேறினார். (எல். எல். பி. என்பதை சென்னையில் பி. எல். என்று சொல்லுகிறார்கள்). பிறகு சீக்ரம் அல்லஹாபாத் ஹைகோர்ட்டில் வக்கீலாக அமர்ந்து மிகுந்த க்யாதியுடன் விளங்கலானார்.

இனி அவருடைய பொது ஜனமுயற்சிகளைப் பற்றிச் சொல்லுவோம். 1880-ம் வர்ஷத்தில் அவரும் இன்னொரு கனவானுமாக அல்லஹாபாத்தில் 'ஹிந்து ஸமாஜம்' என்று ஒரு ஸபையை ஸ்தாபித்தார்கள். ஜனங்களில் பற்பல ஜாதியார்களுக்குள் ஒற்றுமை உண்டாக்குவதும், தேசபாஷை மூலமாய்க் கல்வியை பரவச்செய்வதும், ஜனாசாரவழக்கங்களில் கெடுதலானவைகளை சீர்திருத்துவதும், ஜனங்களுடைய விருப்பங்களையும் குறைகளையும் கவர்னமெண்டுக்குத் தெரிவிப்பதும் இந்த ஸங்கத்தின் நோக்கங்களாம். அவர் அல்லஹாபாத் முனிஸிபாலிடியில் சேர்ந்து அதில் வைஸ்சேர்மனாக வெகு காலமிருந்து வந்தார். பிறகு 1902-ம் வர்ஷத்தில் ஐக்யமாகாண லெஜிஸ்லெடிவ்

கௌன்ஸிலில் ஒரு மெம்பராக நியமிக்கப்பட்டார். அங்கே மெம் ராயிருந்தகாலத்தில் அவர் நிதானத்துடனும், தெளிவுடனும், பொறுப்புடனும் தேச நன்மைக்கான விஷயங்களில் மிகவும் ஊக்கம் பாராட்டி உழைத்து வந்தார். கொஞ்சகாலத்துக்குப் பிறகு அவர் இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் மெம்பராக ஆனார்.

மிஸ்டர் மாலவ்யா 1886-ம் வர்ஷம் முதல் காங்க்ரெஸில் சேர்ந்து தேச நன்மைக்கான கார்யங்களில் ஊக்கங்காட்டி வந்திருக்கிறார். 1909-ம் வர்ஷம் அவர் நாஷனல் காங்க்ரெஸில் ப்ரெஸிடெண்டாக இருந்து ப்ரஸங்கம் செய்தார்.

ஸுமார் 15-வர்ஷத்துக்கு முன்னாலேயே மிஸ்டர் மாலவ்யாவுக்கு ஒரு ஹிந்து யூனிவர்ஸிடி ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணமுண்டாயிருந்தது. அப்படி ஒரு ஸர்வகலாசாலை ஸ்தாபிப்பதாக இருந்தால் அதற்கு வேண்டிய பண உதவி செய்வதாக அவருடைய நண்பர் ஒருவர் வாக்களித்திருந்தார். ஆனால் சிறிது காலத்துக்கெல்லாம் காசியில் ஸென்ட்ரல் ஹிந்து காலேஜ் ஸ்தாபிக்கப்பட்டதால் யூனிவர்ஸிட்டி ஏற்படுத்துவதைப்பற்றி அதிக கவனம் செலுத்துவதற்கில்லாமலிருந்தது. ஆயினும் 1904-ம் வர்ஷத்தில் இதைப்பற்றி மறுபடியும் கவனம் செலுத்தலானார். இது விஷயமாய் ஒரு ஸ்கீம் தயாரித்து, காசி மகாராஜா முதலிய கனவான்களிடம் இதைப்பற்றிக் கலந்து பேசி, இந்த ஸ்கீமை வெளியிட்டார். அதன்படி காசியில் (1) வேதம், வேதாங்கம், ஸ்ம்ருதி முதலியவைகள் கற்பிக்க ஒரு காலேஜும், (2) ஒரு ஆயுர்வேத வைத்ய கலாசாலையும், (3) ஒரு சாஸ்த்ர, பொருளாதாரக்காலேஜும், (4) ஒரு விவஸாயக்காலேஜும், (5) ஒரு சித்ரகலாசாலையும், (6) இங்கிலீஷ் முதலிய அன்யபாஷைகள் கற்பிக்க ஒரு பாஷாகாலேஜும் ஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணியிருந்தார்கள். அதில் வாசிக்கும் மாணவர்கள் பூர்வீக ஆசாரப்படி ப்ரும்மசாரி ஆச்ரமத்தில் இருக்க வேண்டுமென்றும் எண்ணியிருந்தார்கள்.

ஹிந்து யூனிவர்ஸிட்டி முயற்சியானது கொஞ்சகாலமாக பலப்பட்டு வருவதும், அது விஷயமாக கவர்ன்மெண்டுக்கும் ஹிந்து யூனிவர்ஸிட்டி கமிட்டிக்கும் கடிதப்போக்குவரத்துகள் நடந்துவருவதும், ஹிந்து யூனிவர்ஸிட்டிக்காக மூலதனம் சேர்க்கப்பட்டு வருவதும், யூனிவர்ஸிட்டியின் அமைப்பிலும் நிர்வாகத்திலும் சில மாறுதல்கள் செய்ய வேண்டுமென்று கவர்ன்மெண்டார் சொன்னதும் யாவருக்கும் தெரிந்த விஷயங்களாகும்.

மிஸ்டர் மாலவ்யா ஸ்வதேசிய முயற்சிக்காக வெகு காலத்துக்குமுன்னாலிருந்தே உழைத்து வந்திருக்கிறார். ஆனால் அன்ய தேசப் பொருள்களை பஹிஷ்காரம் செய்வதாகிய 'பாய்காட்' என்னும் முயற்சியில் அவருக்கு இஷ்டம் கிடையாது.

மாணவர்கள் ராஜாங்க விஷயத்தில் கலந்து கொள்வது கூடாதென்பது மிஸ்டர் மாலவ்யாவின் அபிப்ராயம். கொஞ்ச காலத்துக்கு முன்னால் திருச்சினாப்பள்ளியில் நடந்த ஒரு மீட்டிங்கில் அவர் மாணவர்களுடைய கடமைகளைப் பற்றி ப்ரஸங்கம் செய்தபோது, அங்கு வந்திருந்த ஒருவர் மிஸ்டர் மாலவ்யா பி. எ. பரீக்ஷைக்கு வாசித்துக்கொண்டிருக்கையில் ராஜாங்க விஷயங்களில் கலந்து கொண்டதை மாணவர்கள் ராஜாங்க விஷயங்களில் கலந்து கொள்ளலாமென்பதற்கு ஒரு உதாரணமாக எடுத்துச் சொன்னார். அப்போது அவர் தாம் படிக்கும் போது ராஜாங்க விஷயங்களில் கலந்து கொண்டதனால் தான் பி. எ. பரீக்ஷையில் முதல் தடவை தவறி விட்டாரென்றும், ஆகையால் அதை யறிந்த மாணவர்கள் அதை ஒரு நற்புத்தியாக எடுத்துக்கொள்வார்களென்றும் சொன்னார்.

மிஸ்டர் மாலவ்யா தமது தந்தையைப்போலவே ஒரு பெரிய வைதிகர். மிஸ்டர் மாலவ்யா வெகு காலம் தேசத்துக்கு உழைத்து வரும்படி அவருக்கு தீர்க்காயுஸும் தேக ஸுகமும் கொடுத்தருளும்படி கடவுளை ப்ரார்த்திக்கிறோம்.

Short Stories

சிறு கதைகள்.

THE FLAG AND THE CURTAIN.

கொடியும் படுதாவும்.

ஒரு காலத்தில் வெற்றியடைந்த அரசர்களின் பெருமையை பஹிரங்கப்படுத்துகிற ஒரு கொடியானது அரசர்களின் அந்தப்புரத்திலுள்ள ஒரு படுதாவைப் பார்த்து "நீயும் நானும் ஒரு பள்ளிக்கூடத்தில் படித்தவர்கள் தானே; இருவரும் அரசன் ஸன்னிதானத்தில் ஊழியர்கள் தானே; அப்படி இருக்க என் தலையில் எப்பொழுதும் ப்ரயாணத்திலிருப்பதாக ஏற்பட்டிருக்கிறதே. ஒரு நிமிஷம்கூட ஓய்வில்லையே. உனக்கோ நடையினால் உண்டாகும் களைப்பு இன்னதென்றும், கோட்டையை முற்றுகை போடும் அபாயம் இன்னதென்றும், வனாந்தரத்தின் கொடுமைகளும் சுழல்காற்றின் துன்பங்களும் ப்ரயாணங்களின் கடுமைகளும் இன்னவென்றும் தெரியாதே. ஆபத்தில் முன்னின்று ஈடு கொடுப்பவனாக நானிருக்க உன் கௌரவம் என்னுடையதைக் காட்டிலும் அதிகமாயிருக்கிறதே; அஃதெப்படி;" யென முறையிட்டதுடன் "சந்த்ரன் போன்ற உல்லாஸமுள்ள முககாந்தியும், மல்லிகை போன்ற கந்தமுமுள்ள யௌவன ஸ்த்ரீகளின் மத்தியில் நீ உன் காலத்தை கழிக்கிறாய். நானோ கைகால் சேர்த்து ஒன்றாய்க்கட்டப்பட்டு, தலைகாற்றினால் அசைக்கப்பெற்று நீசர்கள் கையில் அகப்பட்டு எப்பொழுதும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு கொண்டு போகப்படுகிறேன்." என்று முடித்தது. அதற்குப் படுதா என்ற திரையானது, "என் தலை எக்காலத்திலும் நிலைப்படியில் கிடந்துருளுகிறது. ஆகாயத்தை அளாவி இறுமாப்புற்று நின்று, உன் தலையைப்போல் கர்வம் அடைகிறதில்லை. யார் ஒருவர் மூடத்தனத்தால் தன் கழுத்தை உயர்த்தி கர்வமடைகிறானோ அவனுக்கு சீக்ரம் துக்கம் நேரிடுமென்பது நிச்சயம்" என்றது.

THE KING AND THE OWLS.

அரசனும் ஆந்தைகளும்.

இளமைப் பருவத்தின் பலத்தால் ராஜ்யக் கவலையை மனதில் வைக்காமல் வேட்டையிலும் விநோதத்திலும் காலம் செலுத்தி வந்த நௌஷேர்வான் (Nowsherwan) என்னும் ஓர் அரசன் ஒருநாள் கானகத்தினிடத்து வேட்டையாடச் சென்றான். அப்பொழுது அக்கானகத்தில் இருபுறத்திலும் இரண்டு வரிசையாக ஆந்தைகள் உட்கார்ந்துகொண்டு ஒரு பக்கத்திலிருந்து மற்றொரு பக்கத்திற்கு ஒரு ஆந்தை போய் தர்க்கித்து வாதம் செய்து கொண்டிருந்தது. இதைப்பார்த்து நௌஷேர்வான் ஆச்சரிய மடைந்து தன்னுடன் கூட இருந்த புஸர்ஜமெஹர் (Busarjamehar) என்ற வித்வானைப்பார்த்து "தாங்கள் எல்லாம் தெரிந்தவர்களாதலால் இவ்வாந்தைகள் இப்படி உட்காரக் காரணம் யாது; அவைகளுக்குள் என்ன தர்க்கம் நடக்கிறது;" என்று கேட்டான். அப்பொழுது புஸர்ஜமெஹர், "ப்ரபுவே, அவைகளுக்குள் ஒரு விவாகப் பேச்சு நடக்கிறது; பிள்ளையின் தகப்பன் பெண்ணின் தகப்பனைப் பார்த்து 'நாற்பது காடுகள் உன் குமாரிக்கு நீ ஸத்ரீதனமாகக் கொடுக்க வேண்டு'மென அதற்கு பெண்ணின் தகப்பன் 'இப்பொழுது அவ்வளவு கொடுக்க முடியாது, நான்கு காடுகள்தான் கொடுக்கலாம். ஆனால் இந்நாட்டை ஆளும் நௌஷேர்வான் நாட்டை கவனிக்காமல் இப்படியே வேட்டை முதலிய விநோதங்களில் இன்னும் சில காலம் பொழுது போக்குவானேயானால், கூடியசீக்ரத்தில் என் மருமகனுக்கு எண்பது காடுகள் இனாமாக அளிப்பேன்;' என்று சொல்லுகிற" தென மறுமொழி சொன்னார். இதைக் கேட்டபிறகு நௌஷேர்வான் மிக மன வருத்தமுற்று தன் அரண்மனைக்கு திரும்பிச் சென்று ராஜ்யாதிபத்யம் சரிவர நடத்திவந்தான்.

Departmental Notes.

பகுதிக் குறிப்புகள்.

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

MARRIAGE BY PROXY.

வேறு ஆள் வைத்துக் கல்யாணம் செய்வது.

ஸ்பெய்ன் தேசத்து ஸ்த்ரீ ஒருத்தி லண்டனில் வ்யாபாரம் செய்துகொண்டிருந்த தனது புருஷன் தன்னை விட்டுவிட்டுப் போய்விட்டதாலும், கெட்ட நடத்தையோடிருந்ததாலும் தனது புருஷனைத் தள்ளிவைக்க வேண்டுமென்று ஸமீபத்தில் டைவோர்ஸ் கோர்ட்டில் மனுப்போட்டுக் கொண்டாள். சென்ற 1909-ம் வர்ஷத்தில் அவளுக்கும் ப்ரதிவாதிக்கும் கல்யாணம் நடந்ததென்றும், புருஷன் கல்யாண காலத்தில் லண்டனிலும், மனைவி ஸ்பெய்னிலும் இருந்ததால் புருஷனுக்கு பதிலாக அந்த ஸ்த்ரீயினுடைய மாற்றாந் தகப்பனார் மணமகனாக இருந்தாரென்றும் கோர்ட்டில் தெரிவிக்கப்பட்டது. அவள் இப்படிக் கல்யாணம் செய்து கொண்டது ஸ்பெய்ன் தேசத்துச் சட்டப்படி செல்லுமாம். மாப்பிள்ளை பெண் ஆகிய இருவருக்கும் பதிலாக வேறு நபர் இருந்து கல்யாணம் செய்யலாமா என்று ஜட்ஜ் கேட்டபோது, அந்த ஸ்த்ரீயின் வக்கீல், யாராவது ஒருவர் நேரில் ஆஜராக இருக்கவேண்டியது அவச்யமென்றும், கல்யாணச் சடங்கில் ரெஜிஸ்டர் செய்வதைத் தவிர வேறு ஒன்றும் கிடையாதென்றும் சொன்னார்.

ஜப்பானில் கல்யாணத்தில் மாப்பிள்ளை ரொம்பதூர தேசத்தில் இருந்து கல்யாணத்துக்கு வரமுடியாமலிருந்தால், மாப்பிள்ளை பெண்ணுக்கு தனது போட்டோ படத்தை அனுப்பி அதை வைத்துக்கொண்டு கல்யாணம் நடத்தும்படி சொல்லுவராம். இப்படிக் கல்யாணத்தில் போட்டோவை அனுப்பி போட்டோவை வைத்துக்கொண்டு கல்யாணம் நடத்தினால், அந்தக்கல்யாணம் சட்டப்படி செல்லத் தக்கதென்று ஜப்பான் கவர்ன்மெண்டார் ஒரு சட்டம் செய்திருக்கிறார்கள்.

A FEMALE DISGUISED AS MALE.

ஒரு பெண் ஆணாக மாறுவேஷம் போட்டுக் கொண்டிருந்தது.

அயர்லண்டில் பிறந்த ஆல்பர்ட் காஷியர் என்றவர் சிறுவயதிலேயே தன் ஜன்ம பூமியை விட்டு அமெரிக்காவுக்குப் போய் சிலகாலம் வரையில் கப்பலில் வேலை பார்த்து வந்தார். பின்பு ஸைன்யத்தில் ஸோல்ஜர் வேலையிலமர்ந்து, அங்கு ராஜாங்கக் கலகம் நடந்தபொழுது நேர்ந்த சண்டைகளில் மிகவும் தீரத்துடன் சண்டைசெய்தார். சண்டை முடிந்ததும் ஸைன்யத்தைவிட்டு நீங்கி வேறு வேலையிலமர்ந்தார். இப்பொழுது அவருக்கு வயது 72 ஆய்விட்டதாலும், வேலை செய்யச் சக்தியற்றுப்போய் விட்டதாலும், சக்தியற்ற ஸோல்ஜர்களுக்கென்று தர்மார்த்தமாக ஏற்பட்டிருக்கும் விடுதியில் சேர்ந்தார். உடம்பு அஸௌக்ர்யத்தினால் ஸமீபத்தில் அவர் ஒரு ஸர்ஜனுடைய சிகித்ஸையிலிருந்து வரும்பொழுது, அவர் உண்மையில் பெண்ணென்று தெரியவந்தது. 60 வயது வரையில் நடை உடை பாவனைகளில் ஆண்போலவே யிருந்ததனால் அனைவரும் அவரை ஆணென்றே எண்ணியிருந்தார்கள். தன்னை யொருவரும் பெண்ணென்றறிந்து கொள்ளாதபடி வெகுகாலம் ஆணைப்போலவே நடித்து வந்தது ஆச்சரியமாயிருந்தது. தன் உண்மைப் பெயர் இன்னதென்றாவது, தன் குடும்பத்தின் வரலாறுகளைப் பற்றியாவது எவ்வித ஸமாசாரத்தையும் அந்த ஆல்பர்ட் காஷியர் வெளிப்படுத்தவில்லை.

DEEP THINKING.

ஆழ்ந்த யோசனை.

போஜனசாலையில வெகு நேரம் வரை வாய் திறவாதிருந்த ஒருவர்தான் ஏதாகிலும் பேசாவிட்டால், மற்றவர்கள் தம்மை ஒன்றும் தெரியாதவரென அவமதித்து விடுவார்களென்று பயந்து, ஆழ்ந்து யோசித்து, "இந்தவர்ஷம் புதிதாய் விவாகமான பெண்களைவிட புதிதாய் விவாகமான பிள்ளைகள் அதிகம்" என்று அழுத்தத் திருத்தமாய்க் கூறினார்.

CURIOSITIES.
விநோதங்கள்.

THE INVENTOR OF THE FAN.
முதல் முதல் விசிறி செய்தவள்.

சீன தேசத்திலிருந்த ஒரு சீன ப்ரபுவின் புத்ரியே முதல்முதல் விசிறி செய்யு முறையைக் கண்டுபிடித்துச்செய்தாளாம். சீன தேசத்தாரிடத்திலிருந்து ஸ்பெயின் தேசத்தார் விசிறி செய்யக்கற்றுக்கொண்டார்களாம். பிறகு மற்றவர்கள் அவர்களிடத்திலிருந்து விசிறிசெய்யக் கற்றுக்கொண்டார்கள்.

A MARRIAGE MARKET.
ஒரு கல்யாணச் சந்தை.

விம்லாவுக்கு ஆறுமைல் தூரத்தில் உள்ள விபிஎன்னும் ஊரில் வர்ஷந்தோறும் ஒரு தடவை கல்யாணச் சந்தை யொன்று நடக்கிறது; அங்கே கல்யாணங்கள் முடித்து வைக்கிறார்கள். மனைவிகளை மாற்றிக் கொள்ளவும் கூடுமாம். ஒரு மனைவியின் விலை சராசரியில் 80 ரூபாயாகும். அந்த ப்ரதேசத்தில் ஸ்த்ரீ புருஷர்கள் ஒருவரையொருவர் தள்ளிவைப்பதென்பது கிடையாதாம்.

இந்த மாதிரியான கல்யாண மார்க்கெட் (சந்தை) பேபிலோன் என்னும் பட்டணத்தில் முன்காலத்தில் நடந்து வந்ததாம். பேபிலோன் என்னும் பட்டணம் ஆசியதுருக்கியில் உள்ள ஒருபட்டணம். அது பூர்வீக காலத்தில் ரொம்ப ப்ரபலமடைந்திருந்தது.

அங்கே கல்யாணச்சந்தையில் சிறுவயதுள்ள பெண்களையெல்லாம் கொண்டுவந்து ஏலம் போடுவார்களாம். ரொம்ப அழகுவாய்ந்த பெண்ணை முதலில் ஏலம் போடுவார்கள். யார் அதிகப்பணம் கொடுக்கிறானோ அவன் அந்தப்பெண்ணை யடைவான். அதற்குப் பிறகு சற்று அழகு குறைவாயுள்ள பெண்ணையும் அதற்குப்பிறகு படிப்படியாக குறைந்த அழகுள்ள ஒவ்வொரு பெண்ணையும் ஏலத்தில் விற்பார்கள். அழகு ரொம்ப குறைவானவும் 'தளுக்கு' கொஞ்சம்கூட இல்லாதவுமான பெண்களை ரொம்ப ஏழையாயிருப்பவர்கள் அடைவார்கள். விலைப்போகாத பெண்களை பிள்ளைகளுக்கு இனாமாகக் கொடுத்துவிடுவதுமுண்டு.

ஏலம் முடிந்தபிறகு ரொம்பப் பணத்துக்கு விற்கப்பட்ட பெண்களின் பணத்தில் கொஞ்சம் நல்லவிலைக்குப்போகாத பெண்களுக்குக் கொடுத்து விடுவார்கள்.

A CURIOUS ADDRESS OF WELCOME.
ஒருவிநோத வரவேற்புப் பத்ரம்.

பூதக்கண்ணாடியின் உதவியாலன்றி ஸாதாரணமாய் வெறுங்கண்ணால் பார்க்கமுடியாத அவ்வளவுசிறிய எழுத்துக்களில் எழுதுவதும், அப்படிப்பட்ட சிறிய எழுத்துக்களை வெட்டுவதும் (என்க்ரேவ் செய்வது) மிகவும் கடினமான காரியம். ஆல்பர்டா என்னும் ஊரில் உள்ள ஒரு யூதன் (ஜூ) ஒரு கோதுமையரிசியில் ஒரு வரவேற்புப்பத்ரம் எழுதியிருக்கிறார். அதில் 300 எழுத்துக்கள் வெட்டப்பட்டிருக்கின்றன. அந்த எழுத்துக்கள் ஹீப்ரு பாஷை எழுத்துக்களாகும். இந்த வரவேறபுப்பத்ரம் கனடா கவர்னர் ஜெனரலாகிய ட்யூக் அப் கனாட் ப்ரபுவுக்காக எழுதப்பட்டது. அதை ரொம்ப பலமான பூதக்கண்ணாடியால் பார்த்தால்தான் எழுத்துக்கள் தெளிவாய்த் தெரியுமாம்.

MILK BATH.
பால் ஸ்நானம்.

அமெரிக்காவிலுள்ள ஸ்த்ரீகளில் அநேகர் தங்கள் அழகை அதிகப்படுத்துவதற்காக பாலில் ஸ்நானம் செய்கிறார்களாம். ந்யூயார்க் பட்டணத்தில் அநேக பொதுப் பால் ஸ்நான கட்டடங்கள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றனவாம். அநேக ஸ்த்ரீகள் அந்த ஸ்நான கட்டடங்களுக்குப்போய் ஸ்நானம்செய்து வருகிறார்களாம்.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

POLISHING GOLD JEWELS.
தங்க நகைகள் செய்து முடித்தபின் பளபளப்படையச் செய்ய.

பொடிபோட்டுஊதிப் பற்றவைத்த நகைகளை முதலில் படிகாரத் தண்ணீரில் கொதிக்க வைத்து சுத்திசெய்த பின், 3-பாகம் பொட்டு லுப்பு, 1-பாகம் படிக்காரம், 1-பாகம் உப்பு சேர்த்து போதுமான தண்ணீரில் கரைத்து, நெருப்பில் வைத்து சுண்ட உப்பு சிவந்த மஞ்சள் நிறமாகுகையில் கொஞ்சம் தண்ணீர் விட்டு கரைத்து ஸீஸாவில் வைத்துக்கொண்டு, அதில் அவற்றை நனைத்து வெதுப்பி சுத்தி செய்து பின் மெருகிடவும்.—விச்வகர்ம குலோபகாரி.

BLEEDING FROM THE NOSE.
மூக்கிலிருந்து வரும் ரத்தத்தைத் தடுத்தல்.

தலையைப் பின்புறமாகச் சாய்த்துக்கொண்டு, கைகளை தலைக்குமேல் உயரமாக நீட்டிக் கொள்வதுடன், மூக்கை குளிர்ந்த நீர் விட்டு அலம்பவேண்டும். படிக்காரத்தைப் பொரித்து ஜலத்தில் சிறிது பொடித்துச் சேர்த்து அந்த ஜலத்தைக்கொண்டு மூக்கின் உட்புறத்தைக் கழுவினால் ரத்தம் உடனே நின்றுவிடும். அல்லது கடலைப்புளிப்பும் ஜலமும் கலந்து மூக்கை அலம்பலாம். மூறுபடியும் இவ்விதம் ரத்தம் வராமலிருப்பதற்காக, மலபந்தமில்லாமல் தினந்தோறும் வயிற்றை சுத்தமாகவைத்திருக்கவேண்டும்.

FIRE PROOFING COTTON FABRICS.
பஞ்சுத்துணிகள் நெருப்புப் பற்றுமலிருக்க.

தகரம் சேர்ந்த உப்புக்கரைத்த ஜலத்திலும், பிறகு அம்மோனியம் ஸல்பேட் கரைத்த ஜலத்திலும் பஞ்சுத் துணிகளை நனைத்துவிட்டால், அவைகளுக்கு நெருப்புப் பிடிக்காது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

TINCTURE OF IODINE.
டிங்க்சர் அப் அயடைன்.

டிங்க்சர் அப் அயடைன் (இதை டிங்க்சர் அயடைன் என்றும் சொல்வதுண்டு) என்னும் மருந்து எல்லார் வீட்டிலும் இருக்கவேண்டிய ரொம்ப உபயோகமுள்ள மருந்துகளில் ஒன்றாகும். கைக்காயம், தோலில் சிராய்த்துவிடுவது முதலிய சிறிய காயங்கள் முதல் பெரிய காயங்கள்வரையில் எல்லாவற்றிற்கும் காயம் ஏற்பட்டவுடன் ஷை மருந்தை மேலே பூசிவிடவேண்டும். இதனால் வ்யாதி க்ருமிகள் காயங்களில் சேராமல் தடுக்கப்படுவதோடு, அந்தக்காயங்களில் இருக்கக்கூடிய க்ருமிகளும் இறந்துபோகின்றன. இந்த மருந்தால் யாதொரு தீங்கும் உண்டாவதில்லை.

CLEANING WITH LIME WATER.
சுண்ணும்பு ஜலத்தால் சுத்தம்செய்தல்.

ஜாடிகளை வெகுகாலம் உபயோகப்படுத்தாமல் வைத்திருந்தால் அவைகளில் பூசணம் பூத்த வாஸனை உண்டாகும். அந்த வாஸனையைப்போக்க அவைகளில் சுண்ணும்பு ஜலத்தைவிட்டு நன்ருய்க்கழுவி விடவேண்டும். முக்யமாய் பால்வாங்கும் பாத்ரங்களை நன்ருய் சுத்தம் செய்வார்கள் என்று சொல்வதற்கில்லையாதலால், அவைகளை சுண்ணும்பு ஜலத்தால் சுத்தம்செய்வது ரொம்ப மேலானது.

TO CLEAN STONE-SET JEWELS.
கல் இழைத்த நகைகளை அழுக்கு எடுக்க.

பொட்டிலுப்பை ஓர் சிறிய சட்டியில்போட்டு சுட்டு, பின் சுண்ணும்புசேர்த்து தண்ணீரில் கரைத்து, அதில் ஷை நகைகளை கொஞ்ச நேரம் ஊறவைத்து ப்ரஷால் அடித்து சுத்தி செய்யவும். (சுட்ட பொட்டிலுப்புக்குப் பதிலாக அகல் மத்தாப்பு எரிந்தபின் கிற்கும் உப்பையும் உபயோகப்படுத்திக்கொள்ளலாம்).

TAMIL LITERATURE.
தமிழ்க் கல்வி.

BOOK-KEEPING.
வ்யாபாரக் கணக்குகள் பதிவுசெய்தல்.

இந்திய வ்யாபாரிகள் வ்யாபார விஷயங்களைப்பற்றி நன்றாய்க்கற்று, தங்கள் தொழில்களை ஒழுங்குடனும் திறமையுடனும் செய்து வந்து தங்களுடைய தொழிலையும் அதன்மூலமாய் தேசத்தின் க்ஷேமத்தையும் அபிவ்ருத்தி செய்ய முயலவேண்டுமென்று பலர்சொல்லி வரும் இக்காலத்தில் தமிழ்நாட்டு வ்யாபாரிகளுக்கு மிகவும் பயன்படும்படியான இரண்டு வ்யாபார ஸம்பந்தமான புஸ்தகங்கள் வெளியானதைப்பற்றி நாம் ஸந்தோஷமடைகிறோம். அவைகளில் ஒன்றாகிய "புக் கீப்பிங் என்னும் கணக்குவைக்கும் முறை" என்னும் புஸ்தகம் கூடலூர் டி. ஆறுமுக செட்டியாராலும் எஸ். க்ருஷ்ணஸ்வாமி செட்டியாராலும் இயற்றப்பட்டது. இதில் வ்யாபாரத்துக்கு மிகவும் அவச்யமானவையான கொள்முதல் கணக்கு, விற்றுமுதல் கணக்கு, ரொக்க வரவு செலவு கணக்கு, உண்டிக்கணக்கு, ஜர்னல் என்னும் குறிப்பு, பேரேட்டுப்புஸ்தகம் ஆகிய ஆறு வகைக் கணக்குகளைப்பற்றியும் குறிப்புகளும், மாதிரிக்கணக்குகளும், பேரேட்டுப் புஸ்தகத்தில் கணக்குப்பூட்டுதல், சரக்குக் கையிருப்பு எடுத்தல், கையிருப்புக் காட்டுங்கணக்கு, லாப நஷ்டக்கணக்கு, மூல த்ரவ்யக்கணக்கு முதலிய விஷயங்களும் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. இது 78 பக்கங்கொண்டது. இதன் விலை 12-அணா. வேண்டுவோர் ஆசிரியர்களுக்கு, கூடலூர், ஓல்ட்டௌன் விலாஸத்துக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.

மற்ற புஸ்தகமாகிய "கணக்குப்பதிவு நூல்" மேல் சொன்ன புஸ்தகத்தைவிட மிகவும் விரிவானது. இதை இயற்றியவர் தஞ்சாவூர் கல்யாண ஸுந்தரம் ஹைஸ்கூலில் 'வ்யாபாரப் பயிற்சி போதகராகிய மிஸ்டர் கே. நடேசய்யராவார். இந்தப்புஸ்தகத்தில் கணக்குப்பதிவை ஒரு சாஸ்த்ரரீதியாக விளக்கியிருக்கிறார்.

இதில் இருபதிவு வழக்கம் (Double Entry system), பேரேடு, பாங்கி வ்யாபாரம், எக்ஸ்சேஞ்சுகளும் உண்டியல்களும், ஆதாயம் செலவு கணக்கு, கூட்டு வ்யாபாரம், ஒப்படைக் கணக்குகள், ஜாயிண்ட் ஸ்டாக் கம்பெனிகள், கணக்குப் பரிசீலனை முதலிய பல விஷயங்களைப்பற்றி விரிவான வ்யாஸங்கள் தெளிவான நடையில் பலமாதிரிக் கணக்குகளுடன் எழுதப்பட்டிருக்கின்றன. வ்யாபாரிகள் யாவரும் மேற்கூறிய இரண்டு புஸ்தகங்களையும்வாங்கி வாசித்து தங்களுடைய கணக்குவைக்கும் முறைகளை சீர்திருத்துவதின் அவச்யத்தைப் பற்றி கவனிப்பார்களென்று எண்ணுகிறோம். 'கணக்குப்பதிவு நூல்' 360 பக்கங்கொண்டது. நேர்த்தியாய் அச்சிட்டு நன்றாய் பைண்டு செய்திருக்கிறது. இதன்விலை ரூ. 3, வேண்டுவோர் கே. நடேசய்யர், கல்யாணஸுந்தரம் ஹைஸ்கூல், தஞ்சாவூர், என்று எழுதிப்பெற்றுக்கொள்ளவும்.

AHAMEY PURAM.
அகமே புறம்.

இது ஜேம்ஸ் ஆலன் என்னும் இங்க்லீஷ் ஆசிரியரியற்றிய ஒரு உயர்ந்தநூலின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இது 'மனம்போல வாழ்வு' என்னும் நூலை எழுதிய மிஸ்டர் வ. உ. சிதம்பரம்பிள்ளை இயற்றியதாகும். இதன் முதல் நூல் ரொம்ப உயர்ந்ததானகையால் இதில் உள்ள விஷயங்களைப்பற்றி அதிகம் ச்லாகித்துச் சொல்லவேண்டியதில்லை. இதில் விவரிக்கப்பட்டுள்ள நீதிவிஷயங்கள் யாவரும் அறியவேண்டியவை. இந்தப் புஸ்தகமானது அநேக சிறந்தமேற் கோளுடன் இனிய செந்தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. இதை யாவரும் வாசித்துப் பயனடையலாம். இதன்விலை அணா 8. வேண்டுவோர் வ. உ. சிதம்பரம்பிள்ளை 40, பரிபூரண விநாயகர்கோயில் தெரு, மைலாப்பூர், மதராஸ் என்று எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

MISCELLANEOUS NEWS.

நாநா ஸங்கதி.

WAR IN EUROPE.

ஐரோப்பாவில் சண்டை.

ஆகஸ்ட்டுமீ 6உ

சென்றமாஸத்து மாஸ வர்த்தமானப் பகுதியில் (335-ம் பக்கம்) 28-ந் தேதியன்று ஆஸ்ட்ரியா தேசத்து இளவரசரையும் அவரது மனைவியையும் ஒரு பள்ளிக்கூடத்து மாணாக்கன் கொன்றுவிட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறோம். இந்த மாணக்கன் ஸெர்வியா தேசத்தைச் சேர்ந்தவன். ஸெர்வியா ஜாதியார்களில் ஒரு பாகத்தார் ஆஸ்ட்ரியாவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஆஸ்ட்ரியாவின் ஆட்சியிலிருந்து மீட்டுக்கொண்டு ஸெர்வியாவுடன் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று எண்ணியிருக்கிறார்கள். இதற்காக அநேக ஸெர்வியர்கள் ஸதியாலோசனை செய்து வந்தார்களென்று சொல்லப்படுகிறது. இந்த ஸதியலோசனைகளின் பயனாக மேற்சொன்ன ஸெர்விய மாணவன் ஆஸ்ட்ரியாவின் இளவரசரைக் கொன்று விட்டான்.

இன்னும் ஸெர்வியா கவர்ன்மெண்டாரே இந்த ஸதியாலோசனைகளுக்கு உதவி செய்து வந்தார்களாம். மேலும் ஸெர்வியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் பிள்ளைகளுக்கு ஆஸ்ட்ரியா மேல் த்வேஷம் உண்டாக்கும்படியான பாடங்கள் கற்பித்து வருகிறார்களாம். இவைகளையறிந்த ஆஸ்ட்ரியாவுக்கு ஸெர்வியாவின்மேல் ஆத்ரம் உண்டாயிற்று. இதனால் ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டார், ஸெர்வியாவிலுள்ள பள்ளிக்கூடங்களில் ஆஸ்ட்ரியாமேல் த்வேஷம் உண்டாகும்படி பாடங்கள் கற்பித்து வருவதை ஸெர்வியா கவர்ன்மெண்டார் நிறுத்திவிட வேண்டுமென்றும், ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமான ஸதியாலோசனை முயற்சிகளை வெறுப்பதாகவும், அந்த முயற்சிகள் நடந்து வந்ததற்காக தாம வருத்தப்படுவதாகவும் ஸெர்வியா தெரிவிக்கவேண்டுமென்றும், ஸதியாலோசனை முயற்சிகளில் ஸம்பந்தப்பட்டவர்களை தண்டிக்கவேண்டுமென்றும், இளவரசருடைய கொலை ஸம்பந்தமான குற்றவாளிகளை தண்டிக்கவும், ஆஸ்ட்ரியாவுக்கு விரோதமான முயற்சிகளை யடக்கவும் ஆஸ்ட்ரியா தனது உத்யோகஸ்தர்களை யனுப்பினால் அவர்களை ஸெர்வியா ஏற்றுக்கொள்ளவேண்டுமென்றும் ஆஸ்ட்ரியா கவர்ன்மெண்டார் ஸெர்வியாவுக்கு ஜூலை மாஸம் 24உ தெரிவித்தார்கள். ஸெர்வியா ஆஸ்ட்ரியா உத்யோகஸ்தர்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், மற்ற நிபந்தனைகளுக்கு கட்டாயத்தின்மேல் உடன்படுவதாயும் 25உ யன்று தெரிவித்தது. இந்த பதில் ஆஸ்ட்ரியாவுக்கு த்ருப்திகரமாயில்லை. அதனால் ஆஸ்ட்ரியா ஸெர்வியாவினுடன் யுத்தம் செய்ய ப்ரயத்தனங்கள் செய்தது.

ஐரோப்பாவிலுள்ள 'வல்லரசுகள்' என்று சொல்லப்படும் பெரிய ராஜ்யங்களில் ஆஸ்ட்ரியா, ஜெர்மனி, இட்டலி ஆகிய இந்தமூன்றும் 'ட்ரிபிள் அல்லையன்ஸ்' என்று ஒரு கட்சியாக இருக்கின்றன. இவைகள் ஒன்றுக்கொன்று யுத்தகாலங்களில் உதவி செய்வதாக உடன் படிக்கை செய்து கொண்டிருக்கின்றன. இங்கிலண்ட், ப்ரான்ஸ், ரஷ்யா ஆகிய இந்த மூன்றும் ஒரு கட்சியாக இருக்கின்றன. இவைகளில் ஏதாவது ஒன்றுக்கு ஆபத்து நேர்ந்தால் மற்றவைகளுக்கும் கெடுதி நேரிடுமாதலால் இவைகள் ஒன்றுக் கொன்று உதவி செய்து கொளளும்.

ஆஸ்ட்ரியா ஸெர்வியாவைத் தோற்கடித்து விட்டால் அது (ஆஸ்ட்ரியா) மற்ற பால்கன்

நாடுகளையும் ஜயித்து தன்னோடு சேர்த்துக்கொண்டுவிடும். இது ரஷ்யாவுக்கு ஸம்மதமில்லை. ரஷ்யாவிலும் பால்கன் நாடுகளிலுமுள்ள ஜனங்கள் ஒரே ஜாதியாயும், ஒரே மதமாயிருப்பதால், அவைகளை ஆஸ்ட்ரியா தொந்தரை செய்வதில் ரஷ்யாவுக்கு ஸம்மதமில்லை. அவைகள் ஸ்வாதீனமாக இருக்கவேண்டுமென்பதே ரஷ்யாவின் எண்ணம். மேலும் ஆஸ்ட்ரியா ரொம்ப பலப்பட்டுவிட்டால் ரஷ்யாவுக்குக் கெடுதலாகையால் ரஷ்யா ஸெர்வியாவினுடன் சேர்ந்துகொண்டு ஆஸ்ட்ரியாவினுடன் சண்டைசெய்யும். அப்படியானால், ஆஸ்ட்ரியாவினுடன் ஜெர்மனியும், இட்டலியும் சேர்ந்துகொள்ளலாம். ப்ரான்ஸூம் இங்கிலண்டும் ரஷ்யாவோடு சேர்ந்துகொள்ளலாம்; இதனால் ஐரோப்பா இரண்டு கட்சியாகப்பிரிந்து பெரிய 'பாரதயுத்தம்' ஏற்படும்.

ஸெர்வியாவின் பதிலில் த்ருப்தியடையாத ஆஸ்ட்ரியா தனது ஸைன்யங்களை சேகரித்துக்கொண்டு ஸெர்வியாவின்மேல் 28-ந்தேதியன்று சண்டைக்கு ஆரம்பித்தது. ஸெர்வியாவின் முக்யபட்டணமாகிய பெல்க்ரேடை ஆஸ்ட்ரிய ஸைன்யங்கள் தாக்கிப் பிடிக்க முயன்றன. இதனால் ரஷ்யா தனது ஸைன்யங்களையும் சேகரித்துக்கொண்டு 31-தேதியன்று ஆஸ்ட்ரியாவின்மேல் யுத்தம் செய்ய ஆரம்பித்தது.

இதுவரையில் ஆஸ்ட்ரோ-ஸெர்விய யுத்தத்தில் வேறு ராஜ்யங்கள் சேராமலிருக்கவேண்டுமென்றும், ஆஸ்ட்ரியாவும் ஸெர்வியாவும் தங்கள் மனஸ்தாபங்களை தாங்களே தீர்த்துக்கொள்ள வேண்டுமென்றும் ஐரோப்பிய ராஜதந்த்ரிகளில் சிலர் முயற்சி செய்துவந்தார்கள். அது முடியாமல் போயிற்று. ரஷ்யா ஆஸ்ட்ரியாவின்மேல் யுத்தம்செய்ய ஆரம்பிக்கவே ஜெர்மனி தனது கக்ஷியைச்சேர்ந்த ஆஸ்ட்ரியாவோடு சேர்ந்துகொண்டு ரஷ்யாவின்மேல் யுத்தம் ஆரம்பித்துவிட்டதாக (ஆகஸ்ட்மீ 1-ௗ) தெரிவித்துவிட்டது. அதன்மேல் ரஷ்யாவுக்கும் ஜெர்மனிக்கும் சில சிறு சண்டைகள் நடக்கலாயின. ஜெர்மனி ப்ரான்ஸின்மேல் க்ரமமாக யுத்தம் ஆரம்பிக்காவிட்டாலும் ஜெர்மனிய ஸைன்யங்கள் தங்கள் தேச எல்லைக்குப் பக்கத்தில் ப்ரஞ்ச் ஸைன்யங்களோடு இரண்டொரு இடத்தில் சண்டை செய்தன.

ஜெர்மனிக்கு வடமேற்கில் ஜெர்மனிக்கும் ப்ரான்ஸூக்கும் நடுவில் பெல்ஜியம் என்ற ஒரு ராஜ்யமும், லக்ஸம்பர்க் என்று ஒரு சிறு ஸ்வயேச்சையான நாடும் இருக்கின்றன. ஜெர்மனியானது இவைகளின் வழியே தனது ஸைன்யங்களைக் கொண்டுபோய் ப்ரான்ஸை எதிர்க்க எண்ணியிருக்கிறது. அதற்காக லக்ஸம்பர்க் என்னும் தேசத்திலுள்ள ரயில்வேக்களைக் கைப்பற்றி அந்த ப்ரதேசத்தின் வழியாய் ஒரு லக்ஷம் துருப்புகளைக் கொண்டுபோய் ப்ரான்ஸின் ஸைன்யங்களை லாங்க்வி என்னும் இடத்தில் தாக்கிற்று.

இது நிற்க, ஜெர்மனி தனது ஸைன்யங்களை பெல்ஜியம தேசத்தின் வழியாக ப்ரான்ஸூக்குக் கொண்டுபோகவேண்டுமென்றும், அதற்காக் பெல்ஜியம் கவர்ன்மெண்டார் ஜெர்மனி கட்சியாயிருந்து ஸைன்யங்கள் பெல்ஜியத்தின் வழியாகப்போக இடங்கொடுக்க வேண்டுமென்றும் பெல்ஜியத்தைக் கேட்டது. பெல்ஜியம் அதற்கு ஸம்மதப்படவில்லை.

இங்கிலண்டானது இந்த யுத்தத்தில் என்ன செய்வதென்று சிலநாட்களாகயோசனைசெய்துவந்தது. பெல்ஜியத்தை ஜெர்மனிகைப்பற்றினாலும், ப்ரான்ஸின் வடக்கு, மேற்குக் கரைகளை ஜெர்மனியின் கப்பல்படை தாக்கினாலும், இங்கிலண்டுக்கு பாதமாக முடியுமாதலால் தான் சும்மாயிருக்க முடியாதென்றும, ப்ரான்ஸின் பக்கம் சேர்ந்து கொண்டு ஜெர்மனியோடு யுத்தம் செய்யவேண்டியிருக்கு மென்று மெண்ணி, ஜெர்மனி பெல்ஜியத்தின் வழிக்குப் போக

வில்லையென்றும், ப்ரான்ஸின் வடக்கு, மேற்குக் கரைகளைத் தாக்குவதில்லை யென்றும் உத்தரவாதம் செய்யமுடியுமா வென்று இங்கிலண்ட் ஜெர்மனியைக்கேட்டது. ஜெர்மனி சரியான பதில் கொடுக்கவில்லை. ஆகவே சென்ற 4-தேதி யன்று இரவு ஜெர்மனிமேல் யுத்தம் தீவு தொடங்கிவிட்டதாக இங்க்லண்டு தெரிவித்துவிட்டது. இதுவரையில் ப்ரமாதமான யுத்தம் யாதொன்றும் நடக்கவில்லை. கப்பல் சண்டையும் உபாயந்தானும். ஜெர்மன் யுத்தக் கப்பல் படை பால்டிக் கடலைவிட்டு ஸௌண்ட் ஜலஸந்தியின் வழியாய் இங்க்லண்டுக்கும் ஜெர்மனிக்கும் நடுவிலுள்ள 'நார்த்ஸீ' என்னும் கடலுக்குள் வந்து விட்டதாக ஒரு தந்தி வந்திருக்கிறது. இங்க்லண்டுக்கும் ஜெர்மனிக்கும் கப்பல் சண்டை நடப்பதாயிருந்தால் இந்த 'நார்த் ஸீ' என்னும் கடலில்தான் அநேகமாய் நடக்கும்.

'மெடிடரேனியன்' கடலில் மால்டா தீவிலுள்ள ப்ரிட்டிஷ் கப்பல் படையில் பெரும் பாகம் மால்டாவைவிட்டுப் புறப்பட்டுவிட்டது. அது அந்தக்கடலில் உள்ள ப்ரெஞ்ச் கப்பல் படையோடுசேர்ந்து கொள்ளுமென்று நம்பப் படுகிறது.

'ட்ரிப்பிள் அலையன்ஸில்' சேர்ந்திருக்கும் இட்டலியானது, 'ட்ரிப்பிள் அல்லையன்ஸ்' உடன்படிக்கைப்படி, ஜெர்மனியையும் ஆஸ்ட்ரியாவையும் வேறு தேசங்கள் தொந்தரை செய்தால்தான் அவைகளுக்கு உதவி செய்வதாக வாக்களித் திருக்கிறதேயொழிய ஜெர்மனியும் ஆஸ்ட்ரியாவும் வேறு தேசங்களோடு வலுவில் சண்டைக்குப் போனால், தான் (அதாவது இட்டலி) அவைகளுக்கு உதவி செய்ய வேண்டியதாகப் பேச்சில்லையென்றும் சொல்லி, தான் யாதொரு கட்சியிலும் சேராமல் தனியாக இருப்பதாகச் சொல்லிவிட்டது.

இங்க்லண்டுக்கு பணவிஷயத்திலாகட்டும், மனித உதவியிலாகட்டும் வேண்டியமட்டும் உதவிசெய்வதாக இந்தியா, கனடா, ஆஸ்ட்ரேலியா, தென்னாப்ரிக்கா முதலிய ப்ரிட்டிஷ் நாடுகள் வாக்களித்திருக்கின்றன. இந்தியர்கள் யாவரும் தம்மாலான உதவியை எப்போதும் செய்யத் தயாராயிருக்கவேண்டும். அநேக ஸ்வதேச ஸமஸ்தான்ங்கள் உதவிசெய்ய முன் வந்திருக்கின்றன. அநேக இந்தியர்கள் தாங்கள் உதவிசெய்ய முன்வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பெரும் யுத்தத்தில் நமது ப்ரிட்டிஷ் ராஜாங்கம் ஜயமடையும்படி கடவுளை ப்ரார்த்திப்போமாக.

DIARY OF THE MONTH.

மாஸ வர்த்தமானம்.

INDIAN NEWS.

இந்திய நாட்டு வர்த்தமானங்கள்.

ஜுலை 2-தேதி.

கண்ணம்பாடித் தேக்க விவாதம்:—கண்ணம்பாடித் தேக்கத்தின் விஷயமாய் மத்யஸ்தர்கள் செய்த தீர்ப்பு மதராஸ் கவர்ன்மெண்டாருக்குத் த்ருப்திகரமாயிராததால் அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டுக்கு அப்பீல் செய்யப் போகிறார்களாம். மத்யஸ்தர்களுடைய தீர்ப்பை கவர்ன்மெண்டார் வெளியிடப்போகிறார்களாம்.

3-தேதி.

இந்தியாவில் ஜெயில் நிர்வாகம்.—இந்தியாவின் ஜெயில் நிர்வாகத்தைப் பற்றிப் பரிசீலனை செய்ய ஒரு கமிஷன் நியமிக்கவேண்டுமென்று இந்தியா கவர்ன்மெண்டார் இந்தியா ஸெக்ரெடரியைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

8-தேதி.

இந்தியாவில் கம்பியில்லாத தந்தி.—இந்தியாவில் டெக்கான் பாகத்தில் ஒரு கம்பியில்லாத தந்தி ஸ்டேஷன் ஏற்படுத்துவதை மேற்பார்வை பார்ப்பதற்காக இரண்டு மார்க்கோனி இஞ்சினியர்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள். ஷை ஸ்டேஷன் பூனாவுக்குப் பக்கத்திலுள்ள கிர்க்கியில் ஸ்தாபிக்கப்படும்.

9-தேதி.

பம்பாய்க்கு ஒரு சாஸ்த்ர கல்விச்சாலை:—பம்பாய் கவர்ன்மெண்டார் பம்பாயில் ஒருசாஸ்த்ர கலாசாலை ஸ்தாபிப்பதற்கு ஒரு ஸ்கீம் தயாரித்து அந்த ஸ்கீமை இந்தியா கவர்ன்மெண்டுக்கு அனுப்பியிருக்கிறார்களாம். அதற்கு ராயல் ஸயன்ஸ் இன்ஸ்டிட்யூட் என்று பெயர் கொடுக்கப்படுமாம்.

11-தேதி.

லேடி ஹார்டிஞ்ஜ்.-ஸமீபத்தில் ஆபரேஷன் செய்யப்பட்ட லேடி ஹார்டிஞ்ஜ் அந்த ஆபரேஷனால் ரொம்ப அஸௌக்யமடைந்து இன்று இறந்துபோனார்.

14-தேதி.

மதராஸ் கவர்ன்மெண்ட்.—சென்னை நிர்வாக ஸபையில் முதல் மெம்பராயும், ஸபையின் வைஸ் ப்ரெஸிடெண்டாயுமிருந்த ஆனரபிள் ஸர்ஜான் அட்கின்ஸன் ஸமீபத்தில் வேலையிலிருந்து நீங்கிக்கொண்டார். அவருக்குப் பதிலாக ஸர் ஹாரோல்ட் ஸ்டூவர்ட்டை வைஸ் ப்ரெஸிடெண்டாக கவர்னர் நியமித்திருக்கிறார். இதனால் ஆனரபிள் சிவஸ்வாமி அய்யருக்குக் கீழ்பட்ட ஸ்தானத்தில் இருந்த ஸர்ஹாரோல்ட் ஸ்டூவர்ட் அவருக்கு மேற்பட்ட ஸ்தானத்தை யடைகிறார்.

15-தேதி.

லார்ட் ஹார்டிஞ்ஜ் :—லேடி ஹார்டிஞ்ஜ் இறந்துபோனதைப்பற்றி இந்தியாவின் பல பாகங்களிலு மிருந்து ஜனங்கள் லார்ட் ஹார்டிஞ்ஜுக்கு அநுதாபத் தந்திகள் அனுப்பினார்கள். லார்ட் ஹார்டிஞ்ஜ் ஜனங்கள் அநுதாபங் காட்டினதற்காக மிகவும் நன்றியறிதலுள்ளவராக இருப்பதாகத் தெரிவித்து ஜனங்களுக்கு ஒரு உருக்கமான கடிதம் எழுதியிருக்கிறார்.

16-தேதி.

மத்ய மாகாணங்களுக்கு ஒரு யூனிவர்ஸிட்டி.-மத்ய மாகாணங்களில் யூனிவர்ஸிடி ஸ்தாபிப்பதற்கு ஒரு ஸ்கீம் தயார் செய்வதற்காக கமிட்டி யொன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

19-தேதி

கண்ணம்பாடித் தேக்கம்.—கண்ணம்பாடித் தேக்கத்தைப்பற்றி ஆலோசிப்பதற்காக தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள 300-மிராசுதார்கள் திருவாரூரில் ஒரு மீட்டிங் கூடினார்கள். கண்ணம்பாடித் தேக்கத்தைப்பற்றி மத்யஸ்த கமிட்டியார் செய்திருக்கும் தீர்மானம் த்ருப்தியாயில்லை யென்றும், தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி ஜில்லாக்களிலுள்ள ஜனங்களின் பாத்யதைகளை பாதிக்கிறதென்றும், இது விஷயமாய் வைஸ்ராயைக் கண்டு பேச ஒரு டெபுடேஷன் அனுப்பப்படுமென்றும், அதுவரையில் தேக்கம் கட்டும் வேலையை நிறுத்தி வைக்கும்படி வைஸ்ராய் உத்தரவு செய்யவேண்டுமென்றும், தீர்மானம் செய்தார்கள். இது விஷயமாய் வேண்டிய கார்யங்கள் செய்யவும், பணம் வஸூல் செய்யவும் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

டாக்காவில் ஒரு கொலை.—இன்று மாலையில் டாக்காவில் சில கொலையாளிகள் ஒரு ஸ்வதேஷிக்காருடைய வீட்டுக்குப் பக்கத்தில் ராம்தாஸ் என்று பெயருள்ள ஒருவனைச் சுட்டுக் கொன்று, இன்னொருவரைச் சுட்டுக் காயப்படுத்திவிட்டு ஓடிவிட்டார்கள். கொலையாளிகள் இன்னாரென்று தெரியவில்லை. அவர்கள் ஸி. ஐ. டி. யைச் சேர்ந்த டெபுடி ஸூப

ரின்டண்டண்டாகிய வஸந்த குமார சட்டர் ஜியைக் கொல்ல நினைத்திருந்தார்களாம். ராமதாஸ் போலீஸாருக்கு உளவாக இருந்து ஸதியாலோசனைக் கேஸுகளைப்பற்றி துப்பு கள் சொல்லிக் கொடுத்ததால் அவனைக் கொன் றிருக்கிறார்களென்று சொல்லப்படுகிறது.

20-தேதி.

ஹிந்து யூனிவர்ஸிடி:—இந்தியா கவர்ன் மெண்டின் கல்வியிலாகா மெம்பராகிய ஸர் ஹார்க்கோர்ட் பட்லர் தர்பங்கா மஹாராஜா வுக்கு எழுதியிருக்கும் ஒரு கடிதத்தில் ஹிந்து யூனிவர்ஸிட்டி விஷயமாய் கவர்ன்மெண்டார் சொல்லும் நிபந்தனைகளைப்பற்றித் தெரிவித்தி ருக்கிறார். அதில் ஹிந்து யூனிவர் ஸிட்டிக்கு ஐக்ய மாகாண லெப்டினண்ட் கவர்னர் சான் ஸலராக இருக்கவேண்டுமென்றும், அவருக்கு யூனிவர்ஸிட்டி நிர்வாகத்தில் இன்னின்ன அதி காரங்கள் கொடுக்கப்படு மென்றும் தெரிவித் திருக்கிறார்.

க்ரேடிட் பாங்கி.—பம்பாய் க்ரெடிட் பாங்கி யின் மானேஜராக இருந்த ஜாபர் ஜோஸப் என்பவர் பாங்கிப் பணங்களை மோசம் செய்த தற்காக 7-வர்ஷம் தீவாந்தர சிக்ஷை விதிக் கப்பட்டார். அவர் 64-ஆயிரம் ரூபாய் வரை யில் மோசம் செய்தாராம்.

24-தேதி.

க்ருஷ்ணதாஸ் பால்.—காலஞ்சென்ற வங் காள தேசாபிமானியாகிய பாபு க்ருஷ்ணதாஸ் பாலின் இறந்த நாள் இன்றைய தினம் கல்கத் தாவில் கொண்டாடப்பட்டது. அவருடைய ஜீவ்ய சரித்ரத்தைப்பற்றி ஆனரபிள் மிஸ்டர் மஹேந்த்ர நாத் ராய் ஒரு ப்ரஸங்கம் செய்தார்.

எட்வர்ட் அரசரின் உருவச்சிலை.—இன்றைய தினம் பர்மாவின் லெப்டினண்ட் கவர்னர் ரங் கூனில் டல்ஹௌஸி பார்க்கில் காலஞ்சென்ற எட்வர்ட் சக்ரவர்த்தியின் உருவச்சிலையைத் திறந்து வைத்தார்.

அடையாறு, சென்னை-20.

FOREIGN NEWS.

அன்ய நாட்டு வர்த்தமானங்கள்.

3-தேதி.

காலஞ்சென்ற மிஸ்டர் சேம்பர்லேய்ன்.—இங் க்லண்டில் ப்ரபலமான ராஜதந்த்ரிகளுள் ஒருவராயிருந்த மிஸ்டர் ஜோஸப் சேம்பர் லெய்ன் இன்று இறந்து போனார். இவர் சில காலம் மந்த்ரியாகவும், பார்லிமெண்டில் மெம் பராகவும் இருந்துவந்தார்.

கனடாவில் இந்தியர்கள்.—இந்தியர்கள் தங் கள் ஸ்வதந்த்ரங்கள் இன்னவை என்பதை நிர்ணயிக்க கனடா அப்பீல் கோர்ட்டில் பரீ க்ஷார்த்தமாக ஒரு வ்யாஜ்யம் போடப்போகி றார்கள். அந்த வ்யாஜ்யத்தின் முடிவு தெரிகிற வரையில் கனடா கவர்ன்மெண்டார் சும்மாயி ருப்பார்களாம்.

6-தேதி.

கனடாவில் இந்தியர்கள்.—கோமகாடா மாரு கப்பலில் ஏறி கனடாவுக்குப்போன இந்தியர் கள் தாங்கள் கனடாவுக்குள்போக ஸ்வதந்த் ரங்கள் உண்டா இல்லையா என்பதை நிர்ணயிப் பதற்காக அவர்கள் அப்பீல் கோர்ட்டில் பரீ க்ஷார்த்தமாகக்கொண்டு வந்திருந்த கேஸ் இன்று இந்தியர்களுக்கு விரோதமாகமுடிந் தது. ப்ரிட்டிஷ் நார்த் அமெரிக்கா ஆக்ட் என்னும் சட்டத்தால கனடா கவர்ன்மெண் டார் எந்த ப்ரிட்டிஷ ஜனங்களையும் கனடா வுக்குள் வராமல் தடுக்கக்கூடுமென்று அப் பீல் கோர்ட்டார் தீர்மானித்திருக்கிறார்கள்.

7-தேதி.

இந்தியா கௌன்ஸில் மசோதா.—இந்தியா கௌன்ஸில் என்று சொல்லப்படும் இந்தியா மந்த்ரியின் ஸபையைச் சீர்திருத்துவதற்காக பார்லிமெண்டில் கொண்டுவரப்பட்ட மசோதா இன்று லார்ட்ஸ் ஸபையால் தள்ளிவிடப்பட் டது.

8-தேதி.

கனடாவில் இந்தியர்கள்:—இந்தியர்களை கனடாவில் விடாமல் தடுக்க கனடா கவர்ன் மெண்டார் செய்திருக்கும் சட்டங்கள் ந்யாய மானவை யென்று ஸுப்ரீம் கோர்ட்டார் தீர்ப்பு செய்திருப்பதை யுத்தேசித்து, கவர்ன் மெண்டார் 'கோமகாடா மாரு' கப்பலில் உள்ள இந்தியர்களை டிபோர்ட் செய்யும்படி இமிக்ரே ஷன் அதிகாரிகளுக்கு தெரிவித்திருக்கிறார் கள். 'கோமகாடாமாரு' கப்பலில் உள்ள இந்தி யர்களும் ஹாங்காங்குக்குத் திரும்ப இஷ்டப படுகிறார்கள். அவர்கள் கனடா கவர்ன்மெண் டாரைப் பண உதவி கேட்டிருக்கிறார்களாம். லண்டன் கவர்ன்மெண்டாரும் கனடா கவர்ன் மெண்டாரும் 'கோமகாடாமாரு' கப்பலிலேறி இந்தியர்கள் கனடாவுக்கு வரப்போகிறார்க ளென்பதை கப்பல் புறப்படு முன்னமேயே அறிந்திருந்தும் அவர்கள் ஆக்ஷேபணை செய்ய வில்லையென்று, இந்த யாத்ரையை ஏற்பாடு செய்த மிஸ்டர் குருதத் ஸிங்க் குறைகூறு கிறார்.

லேடி ஹார்டிஞ்ஜ்.—சில காலமாக சற்று தேக அஸௌக்யமா யிருக்கும் லேடி ஹார் டிஞ்ஜுக்கு இன்று லண்டனில் டாக்டாகள் ஆபரேஷன் செய்தார்கள். ஆபரேஷன் த்ருப்திகரமாய் நடைபெற்றது.

10-தேதி.

கனடாவில் இந்தியர்கள்.-'கோமகாடா மாரு' வில் வந்த இந்தியர்கள் தமது தேசத்துக்குத் திரும்பிப்போகப் பண உதவி கேட்டதற்கு, கனடா கவர்ன்மெண்டார் கப்பல்காரர்கள் தங்கள் ஸொந்தச் செலவிலேயே டிபோர்ட் செய்யப்பட்டவர்களை எந்த தேசத்திலிருந்து வந்தார்களோ அந்த தேசத்துக்குக் கொண்டு போய் விடவேண்டுமென்று சட்டமிட்டிருப்ப தால் பண உதவி செய்ய முடியாதென்று சொல்லிவிட்டார்கள்.

12-தேதி.

பிலிப்பைன் தீவுகள்.—அமெரிக்காவுக்கு ஸொந்தமான பிலிப்பைன் தீவுகளுக்கு தன் னரசு கொடுப்பதற்காக அமெரிக்க ஐக்ய மாகாண கவர்ன்மெண்டார். தங்களுடைய பார்லிமெண்ட் ஸபையில் ஒரு மஸோதா கொண்டுவந்திருக்கிறார்கள்.

16-தேதி.

ப்ரான்ஸின் ப்ரேஸிடெண்ட்:—ப்ரான்ஸின் ப்ரெஸிடெண்டாகிய மான்ஷர் பாயின்கரே ரஷ்யாவுக்குப்போக இன்று பாரிஸைவிட்டுப் புறப்பட்டார்,

20-தேதி.

ப்ரேஞ்ச் ப்ரேஸிடேண்ட்.—ப்ரான்ஸின் ப்ரெ ஸிடெண்டாகிய மான்ஷ்யர் பாயின்கரேயும் அன்ய மந்த்ரியாகிய மா. விவியானியும் ரஷ்யா சக்ரவர்த்தியாகிய ஸாரைக்கண்டு போவதற் காக இன்று ரஷ்யாவைச் சேர்ந்த க்ரான்ஸ் டாட் என்னும் துறைமுகத்துக்குவந்து சேர்ந் தார். ரஷ்ய சக்ரவர்த்தி அவர்களை எதிர் கொண்டு சென்று அழைத்து வந்தார். இன்று இரவில் ஸார் சக்ரவர்த்தி ப்ரெஸிடெண்ட் பாயின்கரேயையும், மற்ற விருந்தினர்களையும் ஒரு உபசரிப்புக்கச்சேரி வைத்து உபசரித் தார்.

21-தேதி.

பேர்ஷியாவின் அரசர்.—பெர்ஷியாவின் அர சராகிய 'ஷா'வுக்கு இன்று டெஹிரானில் மகு டாபிஷேகம் நடந்தது. இந்த மகுடாபிஷேக வைபவம் பம்பாய், கல்கத்தா, சென்னை முத லிய இடங்களில் மகமதியர்களால் சிறப்பாய்க் கொண்டாடப்பட்டது.

'கோமகாடா மாரு'.—கோமகாடாமாரு வி லுள்ள இந்தியர்கள் யாதொரு ஆக்ஷேபணை யும் செய்யாமல் தங்கள் தேசத்துக்குத் திரும் பிப் போகாவிட்டால் கவர்ன்மெண்டார் போர் வீரர்களைக்கொண்டு இந்தியர்களின் தலைவர்க ளைக் கைதுசெய்து தேசப்ரஷ்டம செய்வார்க ளென்றும், அப்போதும் கலகம் அடங்காவிட் டால் எல்லா ஹிந்துக்களை கட்டாயப்படுத்தி வேறு கப்பல்களில் ஏற்றி தங்கள் தேசத் துக்கு அனுப்பிவிடுவார்களென்றும் தெரி கிறது.

ப்ரேஸிடேண்ட் பாயின்கரே.—ரஷ்யா தேசத் தைப்பார்க்க வந்த ப்ரெஸிடெண்ட் பாயின் கரே இன்று ரஷ்யா அரசருடன் ஐரோப்பிய ராஜாங்க வ்யவஹாரங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். ஐரோப்பிய ராஜாங்க

வ்யவஹாரங்களில் ரஷ்யாவும் ப்ரான்ஸும் ஒன்றுசேர்ந்து நடக்கவேண்டுமென்று தீர்மானித்ததாகச் சொல்லப்படுகிறது. ப்ரான்ஸின் அன்யதேச மந்த்ரியும், ரஷ்யாவின் அன்யதேச மந்த்ரியும் ராஜாங்க வ்யவஹாரங்களைப் பற்றிக் கலந்துபேசினூர்கள்.

22-தேதி.

கோமகாடா மாரு.—கோமகாடா மாரு கப்பலில் உள்ள இந்தியர்களுக்கு தங்கள் தேசத்துக்குப்போக ப்ரயாணச்செலவும், கப்பலில் சாப்பாடு முதலிய ஸௌகாயங்களும்செய்து கொடுப்பதாக கனடா கவர்ன்மெண்டார் சொன்னதின்மேல் இந்தியர்கள் தங்கள் தேசத்துக்குத் திரும்பிப்போக ஸம்மதப்பட்டிருக்கிறூர்கள்.

23-தேதி.

'கோமகாடா மாரு'.—கோமகாடா மாரு கப்பல் அதிலுள்ள இந்திய ப்ரயாணிகளுடன் கனடாவைவிட்டுப் புறப்பட்டுவிட்டது.

24-தேதி.

ப்ரெஸிடெண்ட் பாயின்கரே.—ப்ரெஸிடெண்ட் பாயின்கரே ரஷ்ய அரசருக்கு ஒரு விருந்துசெய்து பிறகு அவரிடம்விடை பெற்றுக்கொண்டு ரஷ்யாவைவிட்டுப் புறப்பட்டுப் போய்விட்டார்.

25-தேதி.

ஈஜிப்டின் அரசர்.—ஈஜிப்டின் அரசராகிய 'கிடைவ்' இன்று ஒரு அரண்மனையைவிட்டு வெளியில் வந்துகொண்டிருந்தபோது அவரை ஒரு ஐட்ஜின்மகன் சுட்டுக்கொல்ல முயன்றுன். அரசருக்குக் கன்னத்திலும், கையிலும் காயம் உண்டாயிற்று. அரசருடைய காவலாளர்களால் அந்தப் பாதகன கொல்லப்பட்டான்.

ஐரோப்பாவில் யுத்தம்.—அன்யநாட்டு வர்த்தமானங்களின் இதுவே மிகவும் முகயமானது. இதைப்பற்றிய ஒரு வ்யாஸம் 385-ம் பக்கத்தில் வெளியாயிருக்கிறது. பார்த்துக்கொள்ளவும்.

30-தேதி.

குற்றங்களை மன்னித்தல்.—குற்றங்கள் செய்தவர்களை சக்ரவர்த்தி மன்னிப்பதாகிய ஸ்வதந்தரத்தை இனிமேல்வரும் வைஸ்ராய்களுக்கும் கொடுக்க வேண்டுமென்று இந்தியா மந்த்ரி தீர்மானித்திருக்கிறூர்.

SEASON.

கால ஸ்திதி.

Rainfall.

மழை.—1914ஆ ஏப்ரல்மீ 1உயிலிருந்து 1914ஆ ஆகஸ்ட்மீ 1உ வரையில் பெய்த மழையின் அளவும், இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் வெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்.
கோபால்பூர்	27·17	16·11
வால்டேர்	15·88	11·94
காக்கிஞடா	17·36	12·37
மசூலிப்பட்டணம்	13·56	12·67
நெல்லூர்	7·03	5·21
மதராஸ்	5·30	7·82
கூடலூர்	5·37	6·60
நாகப்பட்டணம்	2·62	5·91
பாம்பன்	1·08	3·20
கொழும்பு	32·10	33·75
திருவநந்தபுரம்	34·90	33·65
கொச்சி	60·71	68.12
கள்ளிக்கோட்டை	73·09	77·74
மங்களூர்	87·10	83 95
மெர்க்காரா	78·24	77·45
ஐதராபாத்	22·74	12·39
பல்லாரி	3·50	6·66
கர்நூல்	9·66	9·82
கடப்பை	9·75	9·19
ஹாஸ்ஸான்	14·59	17·06
பெங்களூர்	12·80	12·90
கொடைக்கானல்	21·54	19·16
உதகமண்டலம்	22·10	[illegible]
கோயம்புத்தூர்	3·44	7·11
வேலூர்	9·23	11·85
சேலம்	11·70	14·08
திருச்சிஞப்பள்ளி	3·25	7·81
புதுக்கோட்டை	6·14	8·92
மதுரை	5·14	8·54
திருநெல்வேலி	0·98	5·33

Calendar—பஞ்சாங்கம்.

அம்ருதாதி	லக்ன பாக்கி	அகர் மாந	து	இங்	தமி	வாரம்	48-ஆனந்தஹு ஆவணிமீ- தக்ஷிணாயனம்-வர்ஷருது { சிராவணம பாத்ரபதம } கொல்லம்-1090 பஸலி-1824 { இங்கிலீஷ் - 1914 ஆகஸ்டு-ஸெப்டம்பர்மீ } ஹிஜரி-1332ர ரம்ஜான்-ஷவ்வால்
யோகநா	விநா	வி	உ	உ	உ		ஞுன்யார்க்கம்
ஸி5	6	3055	23	16	1	ஞா	தச-40-34,ரோ-6-19,வியா-6-42,வணி-9-22,தி-24-19,சிம்மரவி-11-36, சிம்மஞுன்யதி, விஷ்ணுபதிபுண்யகால,
அஸி4	56	54	24	17	2	தி	ஏகா-41-41,மிரு-9-59,ஹர்-5-52,பவ-11-21,ரா-0-58,சிம்மஞுன்யதி,ஸர்வஏகா,கரிநாள்
மஸி	47	52	25	18	3	செ	த்வா-41-1,திரு-11-55,வஜ்-3-40,கவு-11-34,ரா-11-23,சிம்மத்வாதசிதி
ஸி	37	51	26	19	4	பு	த்ர-38-39,புன-12-8,வித்-0-4,உப-55-4,சர-10-2,ரா-1-0,வியசிரா,ப்ரதோஷ,மாஸசிவரா,செறுத்துணேகாயனர்
அஸி ஆவணி	27	50	27	20 ரம்ஜான்	5	வி	சஸி-34-45,பூச-10-44,வரீ-49-1, பத்-6-52,ரா-10-37,போதாயன அமா,புகழ்த்துணைநா,அதிபத்தர் [குடிமாறர்
ம	17	49	28	21	6	வெ	●-29-35,ஆயி-7-59,பரி-41-56,சது-2-18,கிம்-56-37,ரா-5-24,அமாதி,பிண்டபிதிரு,தர்ப்பாஹரணம்,இளேயான்
அஸிஉ	7	47	29	22	7	ச	ப்ர-23-29,மக-4-10,உப-55-23,சிவ-34-7-பால-50-10,தி-22-44,திதிதுவய,பாத்ரபதசுத்த,இஷ்டி, சந்திரதர்சன, கர்கஜயாதி, (ரங்கூன்பிரதமாதி) (ரங்கூன்திதிதுவயம்)
அ3	57	46	1	23	8	ஞா	த்வி-16-43,உத்-54-30,சித்-25-49,தை-43-11,தி-16-4,கன்யாயன-59-24, த்ரிதியாதி, மறைஞான சம்பந்தர்
ஸிபி	48	45	2	24	9	தி	த்ரி-9-36,ஹஸ்-49-20,சாத்-17-16,வணி-36-2,தி-13-41,சதுர்த்திவிரு, விநாயகசதுர்த்தீ, ஸாமோபாகர்ம, ஹரிதாளிகாவிரு,ரமஸமன்வாதி, கரிநாள்
ஸி	38	43	3	25	10	செ	சது-2-26,உப-53-5,சித்-14-18,சுப-8-41,பவ-28-56,தி-7-37,ரா-26-26,ரிஷிபஞ்சமீ, அவம,இராமா[ட,திவாமா
ஸி	28	42	4	26	11	பு	ஷஷ்-49-3,சுவா-39-42,சுப்-0-21,உப-52-4,கவு-22-13,சே-1-11,ரா-22-3,ஷஷ்டியுப,குமாரதர்சனம,சூர்யஷஷ்
ஸி	14	41 ஷவ்வால்	5	27	12	வி	ஸப்-43-16,விசா-35-44,மா-45-2,கர-16-4,ரா-14-30,முக்தாபரணவிரு
ஸிம	8	39	6	28	13	வெ	அஷ்-38-19,அனு-32-35,வை-38-20,பத்-10-41,ரா-15-22,வைசிரா,தூர்வாஷ்டமீ, குலச்சிறைநாய
ஸி2	59	37	7	29	14	ச	நவ-34-20,கேட்-30-23,விஷ்-32-25,பால-6-13,ரா-19-15,
அஸி	49	36	8	30	15	ஞா	தச-31-22,மூல-29-12,பிரீ-27-20,தை-2-43,தி-25-15,ரா-22-26,துவ ணிமூலம், குங்கிலியக்கலேயர்
உம	39	35	9	31	16	தி	ஏகா-29-31,பூரா-29-6,ஆயு-28-8,வணி-0-18,பவ-58-59,ரா-18-45,ஸர்வஏகா
பிஸி	29	33	10	1 செப்டம்பர்	17	செ	த்வா-28-46,உரா-30-6,ஸவு-19-48,கவு-58-51,ரா-9-51,ப்ரதோஷ,சிரவணஉபபரிவர்த்தனேத்ஸவ, வாமன
ஸிபி	19	32	11	2	18	பு	த்ர-29-13,திரு-32-15,சோ-17-24,கர-59-52,ரா-12-13,(ரங்கூன்சிரவணஉப) [ஜயந்தீ,பயோவிருத
ஸிம	9	31	12	3	19	வி	சஸி-30-48,அவி-35-31,அதி-15-55,வணி-30-48,ரா-24-12,அனந்தவிருத [யாதிரை கிரஹணம்.
ஸி	0	29	13	4	20	வெ	○-33-32,சத-39-53,சுக-15-19,பத்-2-2,ரா-26-39,உமாமகேசுவரவிரு,பிரௌஷ்டபதீசிராத்தம்,விசுவரூப
மஸி1	50	27	14	5	21	ச	ப்ர-37-22,பூட்-45-19,திரு-15-31,பால-5-20,சே-1-15,பாத்ரபதபகுள,இஷ்டி,மஹாளயபக்ஷாரம்ப, இராமா
அ	40	26	15	6	22	ஞா	த்வி-42-9,உட்-51-38,சுவ-16-35,தை-9-39,தி-11-45,அசுன்யசயனவிரு,திவாமா
ஸி	30	25	16	7	23	தி	த்ரி-47-44,ரே-58-39,கண்-18-15,வணி-14-51,தி-25-4
ஸி	20	23	17	8	24	செ	சது-53-48,அசு-60-0,விரு-20-25,பவ-20-43,ரா-24-29,சங்கடசதுர்த்தீ,பௌமசதுர்த்
மஸி	11	22	18	9	25	பு	பஞ்-60-0,அசு-6-7,துரு-22-49,கவு-26-55,ரா-2-48,மஹாபரணீ, (ரங்கூன் த்ரிதினஸ்
ஸிம	1	20	19	10	26	வி	ஷஷ் 60-0, பர 13-37, வியா 25-10, கர 33-0, ரா 16-56, க்ருத்திகை [பிருக்)
ஸிம0	51	19	20	11	27	வெ	ஷஷ் 5-52, கிரு 20-42, ஹர் 27-6, பத் 38-32,
அஸி	41	17	21	12	28	ச	ஸப் 10-57, ரோ 26-55, வஜ் 28-20, பால 43-2, தி 4-58, ரா 11-54, மந்யாஷ்டமீ காலாஷ்டமீ, ஸ்ரீஜயந்தி, மகாலக்ஷ்மீவிருத், கரிநாள்
ஸி	31	16	22	13	29	ஞா	அஷ் 14-44, மிரு 31-48, ஸித் 28-29, தை 46-3, ரா 23-53, அவிதவாநவமீ
ஸி	21	14	23	14	30	தி	தச 16-55, திரு 35-2, விய 27-20, வணி 47-18, சிம்மதசமீதி,வியசிரா,வியதீபாதம்காளய
ஸி0	12	13	24	15	31	செ	ஏக 17-12, புன 36-34, வரீ 24-41, பவ 46-37, தி 5-57, ரா 26-13, சிம்மஏகாதசீதி

				சனி
ரா	9-சிம்-பு 16-து-சு 24-கன் பு			பு
குரு				ர கே
				செ சு